விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 26 ஞாயிற்றுக்கிழமை (09.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 141

## கொரோனா அலையைக் கட்டுப்படுத்தாவிட்டால்
## 30 ஆயிரம் மரணங்கள் நிகழலாம்

### சுகாதார தரவு அமைப்பு அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றின் மூன்றாம் அலையை கட்டுப்படுத்த தவறினால் தற்போதுள்ள நிலைமையின் கீழ் எதிர்வரும் செப்ரெம்பர் 1ஆம் திகதி ஆகும்போது நாட்டில் சுமார் 30 ஆயிரம் கொரோனா மரணங்களை எதிர்பார்க்கலாம் என சுகாதார தரவு அமைப்பு (Health Data Organization) கணித்துள்ளதாக சுகா

15

## கோவிட்டால் 22 பலி

(கொழும்பு)
நாட்டில் நேற்று 22 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.
சுகாதார

15

### நயினாதீவில் நடைபெறவிருந்த
## தேசிய வெசாக் நிகழ்வு இரத்து

### புத்த சாசன அமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.நயினாதீவில் நடைபெறவிருந்த தேசிய வெசாக் நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக புத்தசாசன அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் பரவும் கொரோனாவை கருத்தில் கொண்டு மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(03ஆம் பக்கம் பார்க்க)

## கணவனின் விபரீத முடிவையடுத்து மனைவியும் உயிர் துறப்பு

### யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
விபரீத முடிவெடுத்து கணவன் உயிரை மாய்த்தமையை அறிந்த மனைவியும் அதே வழியில் தனது உயிரைத் துறந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைத்

15

## வவுனியாவில் நீரில் மூழ்கிய குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா)
வவுனியா பம்பைமடு பகுதியில்

15

### சுகாதார வழிகாட்டலை பின்பற்றாததால்
## யாழ்.கல்வியங்காடு பொதுச் சந்தை முடக்கம்

(யாழ்ப்பாணம்)
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறியதால் யாழ். கல்வியங்காடு பொதுச் சந்தை யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ

15

# 5 வைரஸ் திரிபுகள் நாட்டில் பரவுகின்றது

### ஜெயவர்த்தனபுர பல்கலையின் ஆய்வில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)
இலங்கையில் 5 வைரஸ் திரிபுகள் பரவி வருவதாக ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இதன்படி பிரித்தானியாவில் பரவி வரும் பி.1.1.7 என்ற வைரஸ் நாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர சபை பகுதி, ஹோமாகம, பொரலஸ்கமுவ ஆகிய பிரதேசங்களிலும் இந்த வைரஸே பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதி நேற்று முதல் திறப்பு

(யாழ்ப்பாணம்)
கொடிகாமம் - பருத்தித்துறை வீதி, புலோலி, கச்சாய் பிரதான வீதிநேற்று மாலை முதல்


15

## ஒரு தொகை கஞ்சாவுடன் சாவகச்சேரியில் இளைஞன் கைது

(சாவகச்சேரி)
யாழ்.சாவகச்சேரியில் கஞ்சாவுடன் 19 வயதுடைய இளை

15

## யாழ்ப்பாணத்தில் 14 பேர் உட்பட வடக்கில் 25 பேருக்கு தொற்று



(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 14 பேர் உட்பட வடக்கில் 25 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இதன்படி யாழ்.சிறைச்சாலையில் 5 பேருக்கும்

15

## கொரோனா +1,896

(கொழும்பு)
நாட்டில் நேற்று சனிக்கிழமை +1,896 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.
அதற்கமைய மொத்த தொற்றாளர் எண்ணிக்கை 1,23,234

### எழுமாற்றுப் பரிசோதனை
## வவுனியாவில் 7 பேருக்கு கொரோனா உறுதி

(வவுனியா)
எழுமாற்றுப் பரிசோதனையில் வவுனியாவில் 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
வவுனியாவில் கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பை பேணிய

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# குளிர்பானத்தில் போதை கலந்து ஆட்டோ சாரதியிடம் கொள்ளை

## சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

குளிர் பாலில் ஹெறாக்கைன் போதைப்பொருள் கலந்து கொள்ளையில் ஈடுபட்டு வந்த புத்தூர் வாசி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரிடம் சிக்கிக் கொண்டுள்ளார்.

மானிப்பாயில் சில நாட்களுக்கு முன்பு சலவைத் தொழிலகம் ஒன்றின் உரிமையாளருக்கு குளிர் பால் பக்கற் வழங்கி அவரை மயக்கி 2 பவுண் நகை கொள்ளையடிக்கப் பட்டது.

அதேவேளை, மானிப்பாயில் முச்சக்கர வண்டி சாரதி ஒருவரை வாடகைக்கு அமர்த்தி சாவகச்சேரி பகுதிக்கு அழைத்து சென்று குளிர் பால் பக்கற்றை வழங்கியுள்ளார்.

பக்கெற்றின் வாய் பகுதியை வெட்டி வழங்கியதால் முச்சக்கர வண்டிச் சாரதி அதனை ஏற்க மறுத்த போது, ஸ்ரோ இல்லாததால் அவ்வாறு செய்ததாக அவர் தெரிவித்துள்ளார். அதனால் சாரதி அதனை வாங்கி பருகிய நிலையில் மயக்கமடைந்துள்ளார்.

இதன்போது முச்சக்கர வண்டி சாரதி அணிந்திருந்த மோதிரம் உட்பட 2 தங்கப் பவுண் நகைய்யை கொள்ளையிட்டு அந்த நபர் தப்பித்துள்ளார்.

அத்துடன் முச்சக்கர வண்டி சாரதியின் கழுத்தில் காயம் ஏற்பட்டிருந்த நிலையில் கைதடியைச் சேர்ந்தவர்களால் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலும் வைத்தியசாலை பொலிஸார் ஊடாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப் பட்டிருந்தது.

குறித்த இரு கொள்ளை சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் லியனகேயினால் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியிடம் வழங்கப் பட்டது.

சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களில் சிசிரிவி பதிவைப் பெற்ற யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு புத்தூரைச் சேர்ந்த ஒருவரை நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கைது செய்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தினர்.

சந்தேக நபரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தில் தான் ஹெக்கைன்போதைப் பொருளை குளிர் பாலில் கலந்து வழங்கி கொள்ளையில் ஈடுபட்டு வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். (ம-03.33)


**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(6849)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம்
மாநகர சபைக்குட்பட்ட
( யாழ். நகரில் இருந்து 11/2 லுது தூரம் )
ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி,
முதலாம் ஒழுங்கையில்
42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம்.

(6853)

077 288 0152
074 075 4204
077 468 3354

**வீடு வாடகைக்கு**

கிளிநொச்சி கந்தசாமி கோவிலுக்கு அருகில் (A9 வீதியிலிருந்து 500m தூரத்தில்) 3 அறைகள், ஒரு பெரிய ஹோல், ஒரு சமையல் அறை, 2 மலசலகூட வசதிகளுடனான டைல்ஸ்(Tiles) பதித்த வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு (6817)

077 610 4892

**கணக்காய்வாளர் பதவி**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு கணக்காய்வாளர்கள் (பெண்கள்) தேவை.

**தகைமை**

க.பொ.த உயர்தர வர்த்தகப் பிரிவில் சித்தி.

**குறிப்பு :-** HNDA or B.com பட்டப் படிப்புகளை பூர்த்தி செய்து வேலையற்றிருப்பவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.)

தொடர்பு

076 097 3121

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

**நல்லின ஜேர்மன் செப்பேட் அல்ஷேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.**

தொடர்பு - தயாநிதி, பிடாரி அம்மன் கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

( அம்சமஹால் கல்யாண மண்டபம் அருகாமை ) (C-2127)

**சொர்க்கம் திருமண சேவை**

இலங்கையில் அரச தொழில் புரியும் 32 வயது அஸ்த நட்சத்திரம் (GS), 31 வயது புனர்பூச நட்சத்திரம் (DO), மணமகன்களுக்கு மணமகள்களையும்,
29 வயது பூராட நட்சத்திரம் விரிவுரையாளர், 27 வயது ரேவதி நட்சத்திரம் (பட்டதாரி), தனியார் துறையில் தொழில் புரியும் 25 வயது உத்தராட நட்சத்திரம், 28 வயது (RC), 33 வயது சதய நட்சத்திர மணமகள்களுக்கும் மணமகன்களையும் தேடுகிறோம்.

(6850)

☎ - 0014166661855
021 222 1515, 077 650 5097


# மரண அறிவித்தல்

பிறப்பு 15 – 02 – 1929



இறப்பு 26 – 04 – 2021

## திருமதி பராசக்தி நாகலிங்கம்

யாழ்ப்பாணம், கந்தர்மடம், அரசடியை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது லண்டன் Milton Keynes இனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி நாகலிங்கம் கடந்த 26.04.2021 ( திங்கட்கிழமை ) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சீவரட்ணம், சிவராஜா, இராஜரட்ணம், குணரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வசந்தமலர், சாந்தமலர், லலிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினம், சுபராம், ஸ்ரீரமணானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தனுஜன், அபர்ணா, விபுசன், விதுஷா, விதுரன், அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் கர்ஷ்ணாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2021) திங்கட்கிழமை இடம்பெற்று பூதவுடல் Crownhill Crematorium Dansteed way MK8 0AH இல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(6852)

077 644 5949 தகவல்:- குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் விசேடவள நிலைய ஆசிரியர் திரு. நிமலகாந்தன் அவர்களின் அன்பு மகன் செல்வன்

**நி. யோஜ்ஸ்ரன்**

அவர்களின் ஈடு செய்யவே முடியாத மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு தம்பியின் ஆத்மா கர்த்தருள் இணைந்து கொள்வதற்கு எல்லாம்வல்ல ஆண்டவரை மன்றாடுகின்றோம்.

அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம்
யா / இணுவில் மத்திய கல்லூரி

(6848)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் தீவிரமாகப் பரவும் வைரஸ் இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளது

(கொழும்பு)

**இந்தியாவில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனா வைரஸின் திரிபடைந்த வைரஸ் இலங்கையில் ஒருவருக்குக் கண்டறியப்பட்டுள்ளது.**

திரிபடைந்த **B1.617** என்ற கொரோனா வைரஸே இவ்வாறு ஒருவருக்குக் கண்டறியப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர், கொழும்பு தனிமைப்படுத்தல் மையமொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இந்தத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. (நி-4)


## இதுவரை 18 பேர் திருமலையில் உயிரிழப்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று வரை 18 பேர் கொவிட் தொற்றால் மரணித்துள்ளனர்.

இதேவேளை, இதுவரையில் ஆயிரத்து 831 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதிக மரணங்கள் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இடம்பெற்றுள்ளதாகவும் திருகோணமலை சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது. (நி-4)

## வெசாக் நிகழ்வுகள் நிறுத்தம்



(கொழும்பு)

அரச வெசாக் தினத்தை இம்முறை நிறுத்த தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனா தொற்றுப் பரவல் நிலைமையை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இம்முறை அரச வெசாக் தினத்தை யாழ்ப்பாணம் நாகதீப ரஜமஹா விகாரையில் நடத்த திட்டமிட்டிருந்த நிலையிலேயே அவை தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (நி-4)

# கிராமத்தினை முடக்குவதா? இல்லையா? என்பதனை மக்களே தீர்மானிக்க வேண்டும்

## சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் சிறீதரன்



(நல்லூர்)

கிராமத்தினை முடக்குவதா? இல்லையா? என்பதை அதிகாரிகள் தீர்மானிப்பது இல்லை. மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல் பிரிவு) வைத்தியர் எஸ்.ஶ்ரீதரன் தெரிவித்தார்.

மக்கள் சுகாதார நடைமுறைகளை சரியாக பின்பற்றி கொரோனாவிலிருந்து தங்களை பாதுகாப்பதன் மூலம் முடக்க வேண்டிய தேவை ஏற்படாது என வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே வைத்தியர் எஸ். ஶ்ரீதரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது இலங்கையில் ஏற்பட்டுள்ள மூன்றாவது அலை அதாவது திரிபடைந்த வைரஸினால் ஏற்படுகின்றது. இப்பொழுது அயல் நாடுகளில் கூட இந்தத் திரிபடைந்த வைரஸ் வேகமாக பரவி வருகின்றது.

20 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கும் இந்த வைரஸ் தொற்று ஏற்படுகின்றது. ஆகவே வேகமாக பரவுகின்றதன் காரணமாக சுகாதார அமைச்சு பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

முடக்கல் நிலை என்பது ராணுவத்தினர் அல்லது சுகாதார பணியாளர்களால் தீர்மானிக்கப்படுவது அல்ல.

மக்கள் சுகாதார நடைமுறைகளை சரியாக பின்பற்றி கொரோனாவிலிருந்து தங்களை பாதுகாப்பதன் மூலம் ஒரு கிராமத்தினை அல்லது ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவினை முடக்க வேண்டிய தேவை ஏற்படாது.

எனவே பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பின்பற்றி செயற்படுவதன் மூலம் மாவட்டத்தினை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளமுடியும் எனவும் தெரிவித்தார்.

(நி-4-33)

# தமிழர் இனப்படுகொலை அறிவூட்டல் வாரம்; கனடாவின் தீர்மானத்திற்கு இலங்கை கண்டனம்

(கொழும்பு)

இலங்கை தமிழர் இனப்படுகொலை அறிவூட்டல் வாரத்தை அங்கீகரிக்கும் தனிநபர் பிரேரணை கனடா - ஒன்றாறியோ சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளமைக்கு இலங்கை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

**Bill 104** என்ற இந்தச் சட்ட மூலம் குறைபாடுள்ள முன்மாதிரியாகும். ஆதாரங்களின்றி அனுமானங்களின் பிரகாரம், அப்பட்டமான பொய்களை அடிப்படையாகக் கொண்டதாக இது அமைந்துள்ளது என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையாலோ, வேறெந்தவொரு உலக நாடுகளாலோ அல்லது இலங்கையின் நட்பு நாடான கனடாவினாலோ இலங்கையில் இனப்படுகொலை நடந்ததற்கான ஆதாரங்கள் எதனையும் இதுவரை கண்டறிய முடியவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர் இனப்படுகொலை அறிவூட்டல் வாரத்தை அங்கீகரிக்கும் தனிநபர் பிரேரணை கனடா - ஒன்றாறியோ சட்டமன்றத்தில் ஆளும், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் கடந்த மே 6 ஆம் திகதி வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இதன்மூலம் மே-18 ஆம் திகதியுடன் முடிவடையும் 7 நாட்கள் ஒன்றாறியோவில் ஆண்டுதோறும் தமிழர் இனப்படுகொலை அறிவூட்டல் வாரமாக கடைப்பிடிப்பதற்கான சட்டரீதியான அங்கீகாரம் கிடைத்துள்ளது. இவ்வாறான நிலையிலேயே இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கைக்கு வெளியே உலக நாடொன்றில் இலங்கை இனப்படுகொலையைச் சட்டரீதியாக ஏற்று அங்கீகரித்து நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன். நவரட்ணம் ஹரிகிருஷ்ணா

(யாழ். இந்துவின் மைந்தன்)

யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று 2020 இல் இடம்பெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவில் 3A சித்தியைப் பெற்று பாடசாலையில் 2 ஆம் இடத்தினையும் மாவட்டத்தில் 6 ஆம் இடத்தினையும் பெற்ற

செல்வன்.நவரட்ணம் ஹரிகிருஷ்ணா

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு வண்ணை விஸ்வலிங்கப் பிள்ளையார் துணைகொண்டு இன்னும் பற்பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.



(6845)

வாழ்த்துவோர்:
பெரியம்மா, அக்காமார்,
அண்ணாமார்
மருமக்கள்:S.மதுரிஷன், S.திஷ்னயா
V.கபிஷன்

வேலன்,
வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்- 2021
# 2 வது சுற்றுக்கு விங்ஸ் அணி தகுதி

கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணத்திற்காக கே.சி.சி.சி.விளையாட்டுக் கழகம், 28 ஆவது ஆண்டாக நடத்தி வரும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் முதலாவது சுற்றில் 9 ஆவது போட்டி கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் விங்ஸ் அணி, நியூஸ்ரார் அணியை 7 இலக்குகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி, 23.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. கபில்-17 , மோகன்குமார்-19, ராஜேந்திரன்-13, பிரசாத்-24 ஓட்டங்களை பெற்றுள்ளனர். களத்தடுப்பில் விங்ஸ் அணி சார்பாக வின்சன்-04, ஒநாசியஸ், எட்வின் தலா-02, மைக்கல், கஸ்ரோ தலா-01 இலக்கினை கைப்பற்றியுள்ளனர்.

பதிலுக்கு தடுப்பெடுதாடிய விங்ஸ் அணி 30 ஓவர்களில் 03 இலக்குகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

விதுஸன்-15, கஸ்ரோ ஆட்டமிழக்காது-31, திலக்ஸன் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

களத்தடுப்பில் பிரசாந்-02, றம்மியராகுலன்-01 இலக்கினை கைப்பற்றியுள்ளனர்.

இப்போட்டியில் சிறந்த வீரராக விங்ஸ் அணியை சார்ந்த கஸ்ரோ தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியில் வெற்றி பெற்ற விங்ஸ் அணி 2 ஆவது சுற்றில் விக்ரோறியன்ஸ் அணியை எதிர்கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)




# ஐ.சி.சி.உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்கான இந்திய அணி அறிவிப்பு



உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் தேர்வாகி உள்ளன. இந்நிலையில் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாட உள்ள இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதற்கான டெஸ்ட் அணியில், விராட் கோலி(கட்பன்), ரஹானே, ரோகித் சர்மா, சுப்மன் கில், புஜாரா, மயங்க் அகர்வால், விஹாரி, ரிஷாப் பண்ட், ஜடேஜா , அக்சர் பட்டேல்,வோசிங்டன் சுந்தர், பும்ரா, இஷாந்த் சர்மா, முகமது சமி, சிராஜ், சர்துல் தாகூர், உமேஷ் யாதவ், பக்அப் வீரர்களாக கே எல் ராகுல், சகா இடம் பெற்றுள்ளனர். காத்திருப்பு வீரர்களாக (Stanby players)அபிமன்யு ஈஸ்வரன், பிரசீத் கிருஷ்ணா, அவேஷ் கான், அர்சான் நாக் வஸ்வல்லா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (4-6)

# மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டியில் டொமினிக் திம் அலெக்சாண்டர் வெற்றி

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கடந்த வியாழக்கிழமை நடந்த கால் இறுதி ஆட்டம் ஒன்றில் டொமினிக் திம் 3-6, 6-3,6-4 என்ற செட் கணக்கில் போராடி அமெரிக்காவின் ஜான் இஸ்னரை வெளியேற்றி 4 ஆவது முறையாக அரை இறுதியை எட்டினார்.

மற்றொரு கால் இறுதி ஆட்டத்தில் 5 முறை சம்பியனும் 2 ஆம் நிலை வீரருமான ரபெல் நடால் அதிர்ச்சிகரமாக தோல்வியைத் தழுவினார். அவரை தரவரிசையில் 6 ஆவது இடம் வகிக்கும் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் 6-4,6-4 என்ற நேர் செட்டில் சாய்த்தார். நடாலுக்கு எதிராக அலெக்சாண்டர் தொடர்ந்து பெற்ற 3 ஆவது வெற்றி இதுவாகும்.

பெண்கள் ஒற்றையர் அரை இறுதியில் அரினா சபலென்கா 6-2, 6-3 என்ற நேர் செட்டில் பாவ் லிசென் கோவாவை (ரஷ்யா). எளிதில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். (4-6)

# 20 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை இந்தியாவில் நடத்தக் கூடாது

கொரோனா அச்சுறுத்தலால் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி பாதியிலேயே கால வரையின்றி தள்ளிவைக்கப்பட்ட நிலையில் இந்தியாவில் ஒக்டோபர்-நவம் பர் மாதங்களில் 7ஆவது 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட்போட்டி திட்டமிட்டபடி நடக்குமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அந்த சமயத்தில் கொரோனா 3ஆவது அலை தாக்கக்கூடும் என்று கணிக்கப்பட்டு இருப்ப தால் இந்த போட்டி ஐக்கிய அரபு அமீரகத்துக்கு மாற்றப்பட வாய்ப்புள்ளது.



இந்த விவகாரம் குறித்து அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரும் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடுபவருமான பட்கம்மின்ஸ் அளித்த ஒரு பேட்டியில், 'இந்தியாவில் 20 ஓவர் உலக கோப்பை போட்டியை நடத்துவது பாதுகாப் பானதாக இருக்காது என்றால், இங்கு நடத்தாமல் இருப்பதே நல்லது. இருப்பினும் உலக கோப்பை கிரிக் கெட் போட்டிக்கு இன்னும் 6 மாதங்கள் இருப்ப தால் அது குறித்து இப்போதே பேசுவது நன்றாக இருக்காது. இந்திய கிரிக்கெட் வாரிய நிர்வாகிகள், மத்திய அரசுடன் கலந்து ஆலோசித்து மக்களுக்கு எது நல்லதோ அதை செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டு ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. ஆனால் லட்சக் கணக்கான மக்கள் இந்த போட்டியை இந்தியாவில் நடத்தியிருக்க வேண்டும் என்று கூறினார்கள். இந்த தொடரை பொறுத்தவரை பலதரப்பு ஆலோசனைகளை கேட்டு சரியான முடிவை கிரிக்கெட் வாரியம் மேற் கொள்ள வேண்டும்' என்றார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தளபதி உள்ளிட்ட

# போர்க்குற்றவாளிகளை தடைசெய்க

## புலம்பெயர் அமைப்புக்களிடம் அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

**இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளைத் தடைசெய்வதற்கு உரிய நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு புலம்பெயர் அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து பிரித்தானிய அரசாங்க த்தை வலியுறுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.**

முள்ளிவாய்க்கால் இனப்படு கொலையின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தலில் பிரித்தா னியாவிலுள்ள தமிழ் புலம் பெயர் அமைப்புக்கள் அனைத் தும் ஒன்றிணைந்து இராணு வத் தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க்குற்றவாளி களை தடைசெய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறு பிரித்தானிய அரசாங் கத்தினை வலிறுத்த வேண் டும்என இனப்படுகொலையைத் தடுப்பது மற்றும் தண்டிப்பதற் கான சர்வதேச மையம் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத் துள்ளது.

இது பொறுப்புக்கூறல் தொட ர்பில் மேற்கொள்ளப்படும் முக் கிய நடவடிக்கையாக இருக்கும் என்பதோடு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவ தற்கான பிரித்தானிய அரசா ங்கத்தின் கடப்பாட்டினை உறு திப்படுத்துவதாகவும் இருக்கும்.

இலங்கைப் பாதுகாப்பு பிரி வின் தற்போதைய பதில் தலை வராகவும் இராணுவத் தளப தியாகவும் உள்ள சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தக் குற்ற வாளிகளை 6 ஜூலை 2020 அன்று நிறுவப்பட்ட பிரித்தா னியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடை விதிப்பு அதிகாரசபையின் கீழ் தடைசெய்வதற்கு நடவடி க்கை எடுக்குமாறு 01 மே 2021 அன்று பிரித்தானியா மற்றும் உலகெங்குமுள்ள யுத்தத்தி னால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் பிரித்தானிய அரசிற்கு அவசர வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது.

குறித்த அமைப்பு வெளி யிட்டுள்ள உடனடி வெளியீட்டிற் கான ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள் ளது. (நி-4)

### 44 கிலோ கஞ்சாவுடன் பத்தரமுல்லையில் நால்வர் கைது

(கொழும்பு)

பத்தரமுல்லை பகுதியில் 44 கிலோ கிராம் கேரளக் கஞ்சா போதைப்பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலி ஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தரமுல்ல பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸார் முன்னெடுத்த சோத னையின் போது 44 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

### இரு பொலிஸார் காயம்

(கொழும்பு)

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலிஸ் மோட்டார் சைக்கிளின் மீதேறி வாகனமொன்று விபத்துக்குள் ளானதில் அந்த மோட்டார் சைக்கிளுடன் நின்றிருந்த போக்குவரத்துப் பொலிஸார் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை யில் இடம்பெற்றுள்ளது. இந்த வாகனத்தைச் செலுத்தி வந்த வர் மதுபோதையில் இருந்தார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (நி-4)

# கல்வி முறை மறுசீரமைப்பு செய்யப்படவுள்ளது-கல்வி அமைச்சு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நாட்டின் கல்விமுறை முழுமையாக மறு சீரமைக்கப்பட்டு வருகின்றது. இது குறித்து அனைத்துத் தரப் பினரிடமிருந்தும் ஆலோசனை களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நிறுவப்பட்டுள்ள "டிஜிற்றல் தளங்களில்" யோச னைகளை முன்வைக்க முடி யும். இதனூடாக 2023 ஆம் ஆண்டில் எமது மாணவர்களு க்கு மிகச்சிறந்த கல்விமுறை யொன்றைப் பெற்றுக்கொடுப்பத ற்கு எதிர்பார்க்கின்றோம் என கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

இலங்கைப் பாடசாலை மாணவர்களின் கல்வி கற்றல் காலத்தில் 9 மாதங்கள் அவர் களை கல்வி நடவடிக்கைகளிலி ருந்து விலக்கி வைக்கும் வகை யிலான கல்வி முறையில் மாற் றத்தை ஏற்படுத்தி, க.பொ.த. சாதாரணதரம் மற்றும் உயர் தரப் பரீட்சைகளை நடத்தும் காலத்தில் மாற்றத்தை ஏற்படுத் துவதற்கு அமைச்சரவை அனு மதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதியின் "சுபீட்சமான எதிர்காலம்" கொள்கைத்திட்டத்தின் 21 ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டு ள்ளவாறு மாற்றங்கள் இடம்பெறுகி ன்றன.

சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் எடெ க்ஸல், கேம்பிரிட்ஜ், லண்டன் போன்ற பரீட்சைகளுக்குத் தோற்று வதன் ஊடாக மிச்சப்படுத்திக்கொ ள்ளக் கூடிய காலத்தை தற்போது ஏற்படுத்தப்படும் மாற்றங்களின் ஊடாக எமது நாட்டின் கல்வி முறை யைப் பின்பற்றும் மாணவர்களுக் கும் பெற்றுக்கொடுக்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி-4)

### லண்டன் 'ஹரோ' துணை மேயராக யாழ்ப்பாணப் பெண்

(யாழ்ப்பாணம்)

லண்டனின் வடமேற் குத் திசையில் இருக்கும் ஹரோ (Harrow) பெரிய நகரத்தின் முதல் தமிழ் பெண் துணை மேயராக நகர சபை உறுப்பினரான இலங்கை வசம்சாவளி யைச் சேர்ந்த சசிகலா சுரேஷ் தேர்வு செய்யப்பட்டு ள்ளார்.



இவர் இலங்கையின் வடக்கு மாகாணமான யாழ் ப்பாணத்தின் இணுவில் பிரதேசத்தை சேர்ந்தவரா வார்.

சசிகலா சுரேஷின் தந் தையார் இணுவிலைச் சேர்ந் தவர். (நி-4)

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

## நாகமணி அருளானந்தம் (சின்னையா)



பிறப்பு: 1934.04.05

இறப்பு: 2018.05.09

மூன்றாண்டுகள் உருண்டோடிவிட்டன
உங்கள் நினைவலைகள்
எம் நெஞ்சத்தில் இப்போதும்
நிழல் ஆடுகின்றதே
ஆண்டவன் அடியில் நீர்
என்றும் இளைப்பாறிட
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தபாற்கந்தோர் அருகாமை,
யோகபுரம், மல்லாவி.

(6843)

குடும்பத்தினர்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

# நினைவஞ்சலி

யா/காங்கேசன்துறை றோ.க.தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் **திரு.ப.சுரேஸ்குமார்** அவர்களின் அன்புத் தாயார்

## அமரர். வரதலட்சுமி பரநிருபசிங்கம்

அவர்கள் கடந்த 09.04.2021 அன்று
இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த
துயர் அடைவதுடன் அன்னாரது 31 ஆம் நாள்
நினைவு தினத்தில் அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(6796)

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட
அதிபர்கள் சங்கம்,
மல்லாகம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர்
மற்றும் அதிபர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2020 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதனிடம் பிடித்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் தனராஜ் சுந்தர்பவனுக்கு பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நேரில் சென்று தனது பாராட்டினைத் தெரிவித்தார். (படம்:- சுபேசன், கஜிந்தன்)

# சித்த மருத்துவ அபிவிருத்தி வடக்கில் புறக்கணிப்பு

## அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் இயங்கி வரும் சுதேச மருத்துவ திணைக்களத்தின் அபிவிருத்தி ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றத என அரச சித்த மருந்த்துவ அதிகாரிகள் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்க அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அதில் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 15 வருடங்களாக சுதேச மருத்துவ திணைக்களத்திற்கென தனியான காணி ஒதுக்கீடுகளோ நிரந்தர கட்டடங்களோ ஏதும் இன்றி காலத்திற்கு காலம் இடமாற்றப்பட்டு தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

அவ்வாறே சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் இயங்கிவரும் மத்திய சித்த மருந்தகம், கிராமிய சித்த மருத்துவமனை, மாவட்ட சித்த மருத்துவமனை, மருந்து உற்பத்திப்பிரிவு, மூலிகைத் தோட்டங்கள், மாகாண மூலிகைக் கிராமம், சமூக மருத்துவ பிரிவு என்பன அடிப்படை வசதிகளோ நிரறப்படுத்தப்பட்ட ஆளணியினரோ இன்றி காணப்படுவதுடன் இவற்றில் சில இடவசதிகளின்றி தனியார் கட்டடங்களில் பல இடையூறுகளுக்கு மத்தியில் மக்களுக்கு தொடர்ச்சியாக சேவையாற்றி வருகின்றன.

இவ்வாறான செயல்களை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பாராமுகமாக இருப்பதால் எமது சங்கம் ஆழ்ந்த மனவேதனையினை அடைகின்றது.

அத்துடன் உள்ளூராட்சி சபையின் கீழ் இயங்கி வரும் இலவச சித்த மருந்தகங்களில் அதிகமானவை பல வருடங்களுக்கு முன் உள்ள அடிப்படை வசதிகளற்ற பழைய கட்டடங்களிலேயே இன்று வரை இயங்குகின்றன.

சமூக மருத்துவ பிரிவுகளுக்கான களப்பயணத்தின்போது வாகன வசதிகளோ உதவியாளர்களோ இன்றி பல சிரமங்களுக்கு மத்தியில் மக்களிற்கான சித்த மருத்துவம் சார் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்றார்கள்.

சித்தமருத்துவ சேவை நிலையங்களின் பெயர்ப்பலகைகளின் காட்சிப்படுத்தலின் போது தமிழ்மொழியை முதன்மைப்படுத்த வேண்டுமெனவும் துறைசார்ந்த அதிகாரிகளையும், உயர் அதிகாரிகளையும், வலியுறுத்துகின்றோம்.

எனவே சித்த மருத்துவத்தினை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அரசியல் பிரமுகர்கள், இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்தவர்கள், உயரதிகாரிகள், சித்த மருத்துவ விரிவுரையாளர்கள் சித்த மருத்துவ நிபுணர்கள், சித்த மருத்துவர்கள் ஆகியோர் முன்வர வேண்டும் எனவும் அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-8)

# மன்னார் வர்த்தக நிலையங்கள் நாளை முதல் கடும் கண்காணிப்பில்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த 8 நாட்களில் 28 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மக்கள் கடுமையான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவுக்கான வைத்திய அதிகாரி வைத்தியர் க.சுதாகர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் நகரத்தில் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுகின்றவர்களும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் உரிய முறையில் கொரோனாத் தடுப்பு நடைமுறைகளையும் சுகாதார நடைமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

உரிய முறையில் கொரோனாத் தடுப்பு நடைமுறைகளைப் பின்பற்றாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது நாளை முதல் கடும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

குறிப்பாக உணவு கையாளும் நிலையங்கள், உணவு உட்கொள்ளும் இடங்கள் ஆகியவற்றில் குறிப்பிட்ட எண்ணிக்கையைத் தவிர அதிக எண்ணிக்கையில் மக்களை உணவகங்கள், கடைகளினுள் வைத்திருக்கின்றமை பாரிய ஆபத்தை ஏற்படுத்தும். எனவே மக்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-8-285)

# சிறிசபாரட்ணம் நினைவேந்தல் விவகாரம்; காணி உரிமையாளர் விடுவிப்பு

## தவிசாளரிடம் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

நினைவேந்தலுக்கும் காணி உரிமையாளர்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என ரெலோவின் மாவட்டப் பொறுப்பாளரும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சென்று தெரிவித்ததனை அடுத்து சிறிசபாரட்ணத்தின் நினைவேந்தல் இடம்பெற்ற காணி உரிமையாளர் பொலிஸ் நெருக்குவாரங்களில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை தமிழீழ விடுதலை இயக்கத்தின் மறைந்த தலைவர் சிறிசபாரட்ணத்தின் 35 ஆவது நினைவு தினத்தினை அவர் மறைந்த இடமான உரும்பிராய் தோட்டவெளியில் அனுஷ்டித்தனர்.

இந்நிலையில் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு குறித்த காணியின் பங்கினைக் கொண்ட உள்நாட்டில் உள்ள பராமரிப்பாளர் அழைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வாக்குமூலங்கள் பெறப்பட்டன. தொடர்ச்சியாக காணி பராமரிப்பாளர் இரு நாட்களாக பொலிஸ் நிலையத்திற்கு அலைக்கழிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் தவிசாளருக்கு தொலைபேசி வாயிலாக தன் நிலைமையினை அறிவித்தார்.

இதனை யடுத்து கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற தவிசாளர் நினைவேந்தல்விடயத்திற்கும் இவர்களுக்கும் எதுவித தொடர்புகளும் கிடையாது எனத் தெரிவித்தனை தொடர்ந்து காணிப்பராமரிப்பாளர் விடுக்கப்பட்டார். மேலும் இது தொடர்பாக நேற்று முன்தினம் தவிசாளர் நிரோஷிடம் பொலிஸார் வாக்கு மூலமொன்று பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-8)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(குப்பிழான்)

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது.

மேற்படி கூட்டத்தின் போது கடந்த வருட நிர்வாகத்தினரே தொடர்ந்தும் செயற்படுவதற்குப் பொதுச்சபையினால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி 2021 முதல் 2023 ஆம் ஆண்டுக்கான பரிபாலன சபையின் தலைவராக சி.கைலைநாதன் தொடர்ந்தும் செயற்படுவர் என அறிவிக்கப்பட்டது. (4-8-18)

# க.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேறுகள்- 2020

### யா/ மெதடிஸ்ற் பெண்கள் உயர் பாடசாலை- பருத்தித்துறை

#### கலைப்பிரிவு

வை.வைஷ்ணவி-3ஏ, எஸ்.குலோஜனா-3ஏ, கே.ஆர்த்திகா- ஏ2பி, எம்.திருத்தியா-2ஏபி, எம்.விதுனா-2ஏ சி, எஸ்.நவிபாரதி- 2ஏபி, ஈ.தனுசாலினி-2ஏபி, எஸ்.சிவ ரஞ்சினி-ஏ2பி, பி.சுலக்ஷிகா-ஏ 2பி.

#### உயிரியல் விஞ்ஞானம்

வை.சாம்பவி-3ஏ, ரி.ஜிகோஷினி-2ஏபி, பி.நிருஷா-2ஏபி, பி.கீதாஞ்சலி-2ஏபி, பி.அர்ச்சயா- 2ஏசி, எ.ஆதித்யா-3பி.

#### பௌதீக விஞ்ஞானப் பிரிவு

கே. பவித்திரா-3ஏ, வி.துஷாரகா-2ஏபி, ற.லாவண்யா-2ஏசி, எஸ்.சரண்யா-2ஏசி.

#### வர்த்தகப்பிரிவு

எஸ்.அபிராமி- ஏ2பி, ரி.தரிணி-3ஏ, பி.தாட்ஷாயினி-2ஏபி, எஸ்.லூட் [illegible]-2ஏசி. (60)



கொழும்புத்துறை கடற்றொழிலாளர்களின் அழைப்பை ஏற்று யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்புத்துறைப் பகுதிக்குச் சென்றதுடன் கடற்றொழிலாளர்களின் தேவைகள் தொடர்பிலும் அவர்களுடன் கலந்துரையாடினார். (படம்:-ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமக்கள் தேவை

லண்டன் PR 1986 இல் பிறந்த கார்த்திகை நட்சத்திரம் உடைய Dr மணமகளுக்கும் லண்டன் PR 1984 இல் பிறந்த உத்தர நட்சத்திர இன்ஜினியர் மணமகனுக்கும் பொருத்தமான மணமக்கள் தேவை. (6786)

தொடர்புக்கு
**076 241 6697**

# விதிமுறைகளை மீறி விருந்துபசாரம்

## 39 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி விருந்துபசாரம் நடத்திய 39 பேர் மேல் மாகாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். (நி-4)

# 130 கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்குள்ளான 130 கர்ப்பிணிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதாக குடும்ப நல சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார். (நி-4)




### வாகன விபத்துக்களில் சிக்கி அறுவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்துக்களினால் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸ்பேச்சாளர்பிரதிபொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார். (நி-4)

## மணமகள் தேவை

1992. யாழிந்து. அச்சுவினி. IT Senior Business Analyst. யாழ்ப்பாணம். பதிவு: 5771. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriage Service.com, 076 664 9401. (C-1382)

## மணமகள் தேவை

1987. யாழிந்து. அச்சுவினி. Doctor. உடுவில். பதிவு: 4920. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக்கட்ட ணத்தில் 20% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriage Service.com, 076 664 9401 (C-1382)

## மணமகன் தேவை

1989. யாழிந்து. சுவாதி. Doctor. காரைநகர். பதிவு: 5806. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService. com, 076 664 9401. (C-1382)

## மணமகன் தேவை

1991. யாழிந்து. பூரட்டாதி. Doctor காரைநகர். பதிவு: 5404. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService. com, 076 664 9401. (C-1382)

## மணமகன் தேவை

1979. யாழிந்து. கேட்டை. Doctor. யாழ்ப்பாணம். பதிவு: 5369. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriageService. com, 076 664 9401. (C-1382)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 23 செவ் 6 சூரி 10 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: **MBBS Doctor**
எதிர்பார்ப்பு:வைத்தியர், விரிவுரையாளர், உள்நாடு மட்டும்
தொ.இ: **B/11849**

பிறப்பு:1994 இந்து நட்சத்திரம்: பூராடம்
கி.பா: - செவ் 7 சூரி 9 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:**A/L, Driver**
எதிர்பார்ப்பு:அழகானசாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: **B/11851**

பிறப்பு:1978 இந்து நட்சத்திரம்: சதயம்
கி.பா: **16 ¾**செவ் 11 சூரி 9 இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்: **A/L**, கமத்தொழில்
எதிர்பார்ப்பு: படித்த சைவபோசனமுள்ள பெண், மணமகன் விவாகரத்து பெற்றவர் ஒரு பெண் குழந்தையும் உண்டு.
தொ.இ: **B/11852**

பிறப்பு:1988 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: **51 ¼**செவ் 7சூரி9ல்
தகைமை/தொழில்:**A/L, Medical Supply Assistant**
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் வெளிநாடும் பார்க்கலாம்
தொ.இ: **B/11853**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: **23 ½**செவ் 1சூரி 8இல்
உயரம்:**155cm**
தகைமை/தொழில்:. **HNDM (BCAS)**
எதிர்பார்ப்பு:நல்லொழுக்கமுடைய பெண், வெளிநாடுஆயின்கனடா, லண்டன், மணமகள் விவாகரத்து பெற்றவர் (எழுத்துடன்)
தொ.இ:**G/11866**

பிறப்பு:1985இந்து
நட்சத்திரம்:பூரம்
கி.பா:**27 ½** செவ்.சூரி10 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:**A/L,CIMA**
எதிர்பார்ப்பு:படித்த மணமகள், உள்நாடு மட்டும்
தொ.இ:**G/11867**

பிறப்பு:1994இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா:47 செவ்9 சூரி 1 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:**A/L,HND IT**
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம், வெளிநாடும் எதிர்பார்க்கலாம்
தொ.இ:**G/11871**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:ரோகினி
கி.பா: செவ் 1 சூரி11 இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்: **A/L**, கடை
எதிர்பார்ப்பு:பிரான்ஸ் தவிர மற்ற நாடுகள்
தொ.இ:**G/11874**

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைபேசித்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## மணமகள் தேவை

1991. யாழிந்து. சுவாதி. Biomedical Engineer. அளவெட்டி. பதிவு: 5832. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு. Ensured Quality Lanka, Colombo 04, www.EQMarriage Service.com, 076 664 9401. (C-1382)

## மணமகன் தேவை

1986 கார்த்திகை 2ம் பாதம் செவ்வாய்க் குற்றமுள்ள டாக்டர் பெண்ணுக்குத் தகுந்த வரனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புக்கு
**077 454 4760** (C-1383)

# பணி நயப்பு வாழ்த்தும் மணிவிழா வாழ்த்தும்



திருமதி. **ஜெயந்தி பாலசுப்பிரமணியம்**
ஆசிரியர்
(யா/ கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை)

**சேவை விபரம்**

நு/ அக்கரக்கந்த தமிழ் வித்தியாலயம்
06.08.1988-11.01.1990
யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
12.01.1990-31.12.1991
நு/ சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம்
01.01.1992-31.05.1999
யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
01.06.1999-11.05.2010
யா/ கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை
12.05.2010-07.05.2021

எமது பாடசாலை ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்று 60 ஆவது பிறந்த நாள் காணும் ஆசிரியர் அவர்கள் நோய் நொடிகள் இன்றி பல்லாண்டு காலம் குடும்பத்தினருடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம். (6842)

பாடசாலைச் சமூகம்
யா/ கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை, கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழினத்தை பலப்படுத்த வேண்டிய தார்மீக கடமை தமிழ் நாட்டிற்கு உண்டு

(யாழ்ப்பாணம்)

**ஈழத் தமிழர் நல்வாழ்விற்குத் தொடர்ச்சியாக ஆதரவு வழங்க வேண்டும் என ஸ்டாலினுக்கான வாழ்த்துச் செய்தியில் மக்கள் பேரெழுச்சி இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

நேற்று முன்தினம் முதலமைச்சராக பதவியேற்ற மு.க. ஸ்ராலினுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "தாங்கள் பதவி ஏற்றதும் தி.மு.க. தேர்தல் விஞ்ஞாபனத்தில், 'ஈழத் தமிழர் நல்வாழ்வு எனும் தலைப்பின் கீழ் முன்மொழியப்பட்ட, இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவை குறித்துச் சுதந்திரமானதும், நம்பகத்தன்மை வாய்ந்ததுமான சர்வதேச விசாரணையை மேற்கொள்ள இந்திய அரசு உலக நாடுகளை வலியுறுத்திச் செயற்படுத்த வேண்டுமென மத்திய அரசை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தும்'

'இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முழுவதும் நீர்த்துப்போன அரசியல் அதிகாரப்பங்கீடுகளே அனுமதிக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள தமிழர்களின் விருப்பத்திற்கேற்றவாறு நிரந்தரமான அரசியல் தீர்வு அமைய இலங்கையில் உள்ள தமிழர்கள் மற்றும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையே ஐ.நா. சபையின் மேற்பார்வையில், பொதுவாக்கெடுப்பு நடத்தவும், இலங்கையில் புதிதாக உருவாகவுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் முழுமையான அதிகாரங்கள் தமிழர்களுக்குக் கிடைத்திடும் வகையில் சட்டப் பிரிவுகளை உருவாக்கவும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமென மத்திய அரசை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தும்' ஆகிய அம்சங்களுடன் ஈழத் தமிழர் தொடர்பான மற்றைய வாக்குறுதிகளிலும் விசேட கவனம் செலுத்துமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆண்டாண்டு காலமாக தாய்த் தமிழக தொப்புள்கொடி உறவுகளுக்கும் ஈழத்தமிழருக்கும் இடையில் காணப்படும் பண்பாட்டு மற்றும் கலாசார ரீதியான இறுக்கமான உறவே தமிழ் தேசியத்தின் உறுதியான வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும்.

ஈழத்தமிழினத்தின் உறுதியும் பலமுமே இந்திய தேசத்தின் தென்கோடிக் கரையினதும் தமிழகத்தினதும் பாதுகாப்பிற்கு இன்றியமையாதது என்பதனை மீண்டும் இவ்விடத்தில் கோடிட்டுக்காட்டுவதுடன் அந்நிலை மீண்டும் உருவாவதற்கு ஈழத் தமிழினத்தினை பலப்படுத்தவேண்டிய தார்மீக கடமை தமிழ்நாட்டுக்கு உண்டு என்பதை உரிமையுடன் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தங்களின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் மென்மேலும் வளர்ச்சியுறவும், ஈழத்தமிழினத்துடனான உறவு வலுப்பெறவும் எதிர்பார்த்திருக்கின்றோம்.


அத்தோடு, தற்போது காணப்படும் கொரோனாத் தொற்று நோய் பேரிடரிலிருந்து தமிழகம் மிகவிரைவில் மீண்டுவர நாமும் பிரார்த்திக்கின்றோம்" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-18)

# காலநிலை மாற்றம்; மறந்த கதையாகின்றது

பெருந்தொற்றின் (pandemic) அகோரப் பிடியில் சிக்கியிருக்கும் உலகு, மௌனமாய் புவிவாழ்வை சிதைக்கும் காலநிலை மாற்றத்தை (climate change) மறந்து விட்டது. பெருந்தொற்றால் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் சவால்களைச் சந்திக்கும் வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகள் காலநிலை மாற்றம் தொடர்பான கரிசனையைப் பேணுவதில் பாரிய நெருக்கடிகள் உண்டாகின்றன.

கொரோனா பெருந்தொற்றை எதிர்கொள்ளும் தறுவாயில் நிலையில் காலநிலை மாற்ற இடர்களை எதிர்கொள்ளத் தவறும் பட்சத்தில் அது வருங்கால சிறார்களின் வாழ்வை கேள்விகுள்ளாக்கிவிடும் என்கிறது. பெருந்தொற்றால் காலநிலை மாற்றம் நின்றிடவில்லை. மாறாக நம்மால் மறக்கப்படுகின்றது.

covid பெருந்தொற்றும் காலநிலை மாற்றமும் உண்டாக்கும் சவால்களில் ஒன்றுபட்டவை. இரண்டும் பரிதாபமான உயிர்ச் சேதங்களை விளைவிக்கின்றன. பெருந்தொற்று சுவாச மண்டலத்தைக் கடுமையாக பாதிப்பதோடு நோய்ப்பரம்பலை வீரியமாக்குகின்றது.




காலநிலை மாற்ற இடர்கள் புவி மண்டலத்தை ஆக்கிரமித்து வருகின்றன. மனித சமூகம் தனது வாழ்வைத் தக்க வைக்கும் போராட்டத்தில் ஆட்டம் காண்கிறது.

உண்மையில் காலநிலை மாற்றமே நின்றொழிக்கும் பாரிய பொதுசன சுகாதார மற்றும் சூழல் ரீதியான சவால். காலநிலை மற்றும் பெருந்தொற்று உருவாகாத போதிலும், உருவாகிய பெருந்தொற்று நிகழும் காலநிலை மாற்ற இடர்களை இன்னும் வலிமையாக்கும். கட்டுக்கடங்காத வெப்பம், உயிர்ப்பல்வகைமை இழப்பு, பட்டினி, மற்றும் தொற்றா நோய்களின் வீரியம் பரம்பலாகும். இது ஒட்டுமொத்த உலகையே நிர்மூலமாக்கும் கதியை பிரதிபலிக்கின்றது.

யுனிசெப் (UNICEF) அமைப்பு இது தொடர்பாக குறிப்பிடுகையில், இக்கட்டான சூழ்

காலநிலை மாற்றமும் நாம் சுவாசிக்கும் காற்றின் தரத்தைக் குன்றச் செய்வதோடு நீர் மாசடைவுக்கும் வழிவகுக்கின்றது. மேலும் இது உணவுத் தட்டுப்பாடு மற்றும் வாழிடங்களின் சேதம் என்பவற்றை விளைவிக்கின்றன. 2030-2050 காலகட்டத்தில் காலநிலை இடர்களால் அண்ணளவாக 250, 000 மனித உயிரிழப்புகள் நிகழலாம் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் covid பெருந்தொற்று 3 மில்லியன் மக்களைக் கொன்று குவித்து விட்டது. இவ் இரு பாரிய சவால்களும் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடியைத் தோற்றுவிக்கின்றன.

நம் நாட்டின் காலநிலை மாற்றக்கொள்கைகள் (climate change policies) வலுவானதாக வேண்டும். பெருந்தொற்றுக்கு மத்தியிலும் காலநிலை நீதியை நிலைநாட்டுவது அவசியம். இதற்கு பின்வரும் அம்சங்களைக் கருதிற் கொள்ளலாம்.

1. நாட்டில் காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கும் இடங்களைக் கண்டறிந்து அங்கு பசுமை வாழ்க்கை முறையொன்றை ஸ்தாபித்தல் (green recovery).

2. சதுப்பு நிலங்கள் மற்றும் வனாந்திரங்களின் பல்வகைமைப் பாதுகாப்பை உறுதி செய்தல் (conservation of biodiversity).

3. காலநிலை மாற்றத்திற்கான ஸ்திரமான பொருளாதாரக் கொள்கை ஒன்றை வகுத்தல் (climate-resilient economy).

4: காலநிலை நீதியை நிலைநாட்ட வேறுபாடுகள் களையப்பட்ட ஒரு கலாசாரத்தை உருவாக்கல் (climate justice).

2020 ஆம் ஆண்டு முதல் மனித வாழ்க்கை நிலைமாறும் தருணமாக உள்ளது. covid ஆல் மனித உயிர்கள் பறிபோவதும் மனிதனாலும் சூழல் காலநிலை இடர்களால் தூர்ந்து போவதும் ஆற்றொணாத் துயரங்களே. ஆயினும் இது முடிவல்ல. இலங்கை போன்ற வளரும் தேசங்கள் சமூக மற்றும் காலநிலைக்கான நீதி வழுவாது செயற்படின் மனித சமூகமும் புவிவாழ்வும் மேன்மையடையும்.

**சு. சிவானுஜன்.**
இரசாயனவில் துறை,யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை

**எங். எங்கொக். மாய்** (Ms. Ngo Ngoc Mai)
சர்வதேசப் பொருளியற் கற்கைகள்
அந்நிய பொருளாதார பல் கலைக்கழகம், வியட்நாம்.

# தாத்தாவாகினார் கோட்டா



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அனோமா ராஜபக்ஷவும் தாத்தா, பாட்டி ஆகியுள்ளனர்.

தனது மகன், மனோஜ் ராஜபக்ஷவுக்கு அவ்விருவரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

மனோஜ் ராஜபக்ஷவிற்கு பெண் குழந்தையொன்று பிறந்துள்ளது. அவர் அமெரிக்காவில் வசித்து வருகின்றார். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 120 |
| தக்காளி | 140 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 |
| கோவா | 120 | 120 | 120 |
| கரட் | 180 | 160 | 200 |
| பூசணி | 60 | 50 | 30 |
| புடோல் | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 300 | 240 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 130 | 120 | 140 |
| பயற்றங்காய் | 80 | 70 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 80 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 500 |
| போஞ்சி | 200 | 120 | 240 |
| கத்தரிதம்புள்ள | 60 | 120 | 80 |
| கீரை - 1 பிடி | 100 | 40 | 40 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 65 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 220 | 180 | 250 |
| வெங்காயப்பூ | --- | 160 | 280 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | --- | 180 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

09.05.2021
சித்திரை 26, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி முன்னிரவு 9.14 மணிவரை
ரேவதி முன்னிரவு 7.10 மணிவரை
சுபநேரம் 8-57-10.24 மணிவரை
இராகுகாலம் 4.24-5.54 மணிவரை
சந்திராஷ்டமம்: பூரம், உத்தரம்
சர்வதேச அன்னையர் தினம்
பிரதோச விரதம்

வளவன்


மேஷம்

எடுத்த காரியங்களை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.


ரிஷபம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.


மிதுனம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.


கடகம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ரோக பயமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


சிம்மம்

மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.


கன்னி

கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், போசன சுகமுண்டு, களஸ்திர நன்மையுண்டு.


துலாம்

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், முன்னேற்றம் பெற பாடுபடுவீர்கள், போசன நன்மையுண்டு.


விருச்சிகம்

பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.


மகரம்

உறவினர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை நிறைவு செய்ய அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


மீனம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

மனதில் சாந்தமும், அமைதியும் உள்ளவரே அஞ்சாமல் இருக்க முடியும்

# எக்காரணம் கொண்டும் நாடு முடக்கப்படாது

# பிரதமர் மகிந்த திட்டவட்டம்

(கொழும்பு)

**நாடு என்ற ரீதியில் நாம் ஒன்றாக கைகோர்த்து இந்த சவால் மிகுந்த காலப்பகுதிக்கு முகங்கொடுப்போம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் நடைபெற்ற அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைக்கு முன்னுரிமை வழங்கி நமது அரசு செயற்பட்டு வருகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதேபோன்று எவ்வாறான இக்கட்டான சூழ்நிலையிலும் நாட்டின் அபிவிருத்தியை நாம் கைவிட்டதில்லை. கைவிடப் போவதும் இல்லை.

தற்போது முழு உலகமும் கொரோனாத் தொற்றுக்கு எதிராகப் போராடி வருகின்றது. கொரோனாத் தொற்று காரணமாக நமக்கு நாட்டை முடக்க முடியாது. வைரஸுக்கு எதிராகப் போராடும் அதேவேளை நாட்டு மக்களின் பொருளாதார நிலை குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும்.

மக்கள் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றுவார்களாயின் இந்த நிலையைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு கடினமானதாக அமையாது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதனால் சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றுமாறு நான் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நாம் ஒரு நாடு என்ற ரீதியில் ஒன்றாகக் கைகோர்த்து இந்தச் சவால் மிகுந்த காலப் பகுதிக்கு முகங்கொடுப்போம். உங்கள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலம் அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்" என அவர் தெரிவித்தார். (நி)

# 10 நாட்களில் 10 ஆயிரம் கட்டில்கள் ஏற்பாடு

(கொழும்பு)

பத்து நாட்களுக்குள் பத்தாயிரம் கட்டில்கள் கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்படும் என்று பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதனைக் குறிப்பிட்ட ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த பத்தாயிரம் கட்டில்களுக்கு மேலதிகமாக மாவட்ட மட்டத்தில் மேலதிக சிகிச்சை நிலையங்களை இனங்கண்டு அவற்றுக்கு தேவையான கட்டில்களும் உபகரணங்களும் வழங்கப்படும்.

இதன் பொறுப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு தலைவர்களுக்கு வழங்கப்படும். இலங்கை பொறியியலாளர் முன்னணி வைத்தியசாலைகளின் தொழில்நுட்ப குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முன்வந்துள்ளது என்றும் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# சபாநாயகர் காரியாலயம் தற்காலிகமாக மூடல்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில், பணியாளர் ஒருவர் இனங்காணப்பட்டதை அடுத்து பாராளுமன்ற கட்டடத்தொகுதியில், சபாநயகரின் காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டது.

அத்துடன் அந்தக் காரியாலயத்தில் பணியாற்றிய பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பாராளுமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4)

# 7 கோடி கஞ்சாவுடன் இந்தியர்கள் கைது

(புத்தளம்)

புத்தளம்-கற்பிட்டிக்கு வடக்கே உள்ள கடற்பகுதியில் வைத்து 235 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் இந்திய பிரஜைகள் 7 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது, கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவின் பெறுமதி சுமார் 7 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.(நி-4)

# 64 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் விடுவிப்பு

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இதுவரை தனிமைப்படுத்தப்பட்டிருந்த 64 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் நேற்று. முதல் விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி குருநாகல் மாவட்டத்தில் 63 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் அம்பாறை மாவட்டத்தின் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுமாக 64 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படவுள்ளன. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

(குப்பிழான்)

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் கல்வி அபிவிருத்தித் திட்டம் பற்றிய முக்கிய கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை zoom செயலி மூலம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினரையும் இணைத்து கல்வி அபிவிருத்தி திட்டச் செயற்பாடுகளை விரைவாகத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்கான கலந்துரையாடல் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-8-18)

# உணவகங்களில் வாழையிலையில் உணவு

## ஆலோசிக்கிறது பிரதேச சபை

(நெளுக்குளம்)

தற்சார்பு பொருளாதாரத்தினைக் கருத்தில் கொண்டு உணவகங்களில் வாழையிலையில் உணவு வழங்கலை ஊக்குவிக்கவுள்ளதாக வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உறுப்பினர் துஸ்யந்தன் விக்டர்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர், வவுனியா உணவகங்களில் வாழை இலையில் உணவு வழங்கும் முறையை நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பில் அனைவரது கருத்துக்களின் பின்னர் உரிய சபைகள் மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து முயற்சி எடுப்பதற்கு எண்ணியுள்ளேன்.


இதன்மூலம் உள்ளூர் விவசாயிகளின் தற்சார்பு பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய ஒரு திட்டமாகவும் அமையும். இதேவேளை ஒருவர் உணவு உட்கொண்ட தட்டில் இன்னொருவர் உணவு உட்கொள்ளும் நிலையும் மாறும். சில வேளைகளில் நோய்த்தொற்றும் இதன்மூலம் இன்னொருவருக்குப் பரவாமல் இருப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. சாதக, பாதக தன்மையைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் சபை அமர்வுகளில் இது தொடர்பான ஒரு பிரேரணை முன்வைக்க உள்ளதாக அவர் தெரிவித்தார். (4-8-299)

# சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் இளைஞர்கள்



(அக்கராயன்)

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் காரணமாக கிராமத்தில் அதிகளவு சமூக விரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கிராம இளைஞர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஈடுபட்டனர். குறித்த நடவடிக்கையின் போது விற்பனைக்குத் தயாராக இருந்த கசிப்பு பைக்கற்றுகள் மற்றும் கொள்கலன் கள் என்பன கைப்பற்றப்பட்டதோடு அவைவிட்டு அழிக்கப்பட்டன. மேலும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (4-8-350)



வவுனியா மாவட்ட பௌத்த இளைஞர் சங்கத்தினால் குருதித்தான முகாம் நேற்று இடம்பெற்றது. (படம்:- சதீஸ்)

# புலிக்குளத்தில் விடப்பட்டது யாழ்.முதலை



(அக்கராயன்)

யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்பட்ட முதலையொன்று கிளிநொச்சியில் நேற்று பாதுகாப்பாக விடப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் கைதடிப்பகுதியில் உள்ள வாகன திருத்தகம் ஒன்றில் புகுந்த 8 அடி நீள முதலை வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் பிடிக்கப்பட்டது.

பிடிபட்ட முதலை நேற்றைய தினம் கிளிநொச்சி பொன்னகர் பகுதியிலுள்ள புலிக் குளத்தில் பாதுகாப்பாக விடப்பட்டது. (4-8-316-350)


# மரண அறிவித்தல்

மலர்வு 16 • 08 • 1949



உதிர்வு 06 • 05 • 2021

அமரர்

## கெஜஞானவதி இராஜசிங்கம்

வர்த்தலைவிளானை பிறப்பிடமாகவும் Toronto, Canada வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெஜஞானவதி இராஜசிங்கம் - பேபி (இளைப்பாறிய பிரதம மருந்தாளர் - Castle Street மகப்பேற்று வைத்தியசாலை, பொரளை) மே மாதம் 6ந்திகதி இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்தகவலையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவர் வர்த்தலைவிளானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.சுப்பிரமணியம், திருமதி சிவஞானவதி தம்பதிகளின் அன்பு மகளும், கட்டுவனைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.கந்தையா, திருமதி.செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு.இராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், றவீன், சுஜன், றஜீத் மற்றும் றஜீவன் ஆகியோரின் அன்புத்தாயாருமாவார். இவர் சாமினியின் அன்பு மாமியாரும், ஆரிஷ் இன் அன்பு அப்பம்மாவும் ஆவார். இவர் காலஞ்சென்ற திருமதி.குகஞானவதி மற்றும் திருமதி.குணஞானவதி, திருமதி.குலஞானவதி, திருமதி.செந்தில்ஞானவதி, காலஞ்சென்ற திரு.குகஞானலிங்கம் மற்றும் திருமதி.மகாஞானவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திரு.சிவபாதசுந்தரம், திருமதி.தனலஷ்மி, திருமதி.பொன்மலர், திரு.குலசிங்கம், திருமதி.தர்மபூபதி, திரு.பாலசிங்கம் மற்றும் திரு.ரட்ணசிங்கம், திருமதி.அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் Chapel Ridge Funeral Home 8911 Woodbine Avenue Markham, ON L3R 5G1, Canada எனும் விலாசத்தில் 11.05.2021 செவ்வாய்க்கிழமை பார்வைக்காக வைக்கப்பட்டு, 12.05.2021 புதன்கிழமை இறுதிச்சடங்குகள் நடைபெறும்.

தகவல் - Dr.K.சுரேஷ்குமார் (பெறாமகன்)
மகப்பேறு பெண் நோயியல் வைத்திய நிபுணர்
யாழ் போதனா வைத்தியசாலை

(6846)


# கள் விற்பனை நிலையங்களை நிபந்தனையுடன் திறக்க அனுமதியுங்கள்

## பிரதமருக்கு சந்திரகுமார் கடிதம்

(கிளிநொச்சி)

கள் விற்பனை நிலையங்களை மூடுவதன் மூலம் அதனை வாழ்வாதார தொழிலாகச் செய்து வருகின்ற ஏழைக் குடும்பங்களே பெரிதும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்.

எனவே அவர்களின் நிலைமையினைக் கருத்தில் கொண்டுகள் விற்பனை நிலையங்களை நிபந்தனையுடன் திறப்பதற்கு அனுமதிக்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலை காரணமாக கள் விற்பனை நிலையங்களை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மிகவும் பாதிக்கும் விடயமாகும்.

ஏனெனில் இக்குடும்பங் கள் அனைத்தும் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் என்பதோடு, தற்போதைய காலம் கள் உற்பத்திக்கான பருவ காலமாகும் எனவும் இக் காலத்தில் கள் விற்பனை கடைகளை மூடுவதனால் அவர்களின் பொருளாதாரம் வெகுவாகப்பாதிக்கப்படும்.

எனவே தாங்கள் இவ் விடயத்தில் அதிக கவனம் செலுத்தி பின்வரும் நடை முறைகளுக்கு அமைவாக கள் விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதியளிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.(4-8-350)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனாவின் கொரோனா தடுப்பூசி; அவசர பயன்பாட்டிற்கு அங்கீகாரம்

(கொழும்பு)

**சீனாவில் தயாரிக்கப்படும் சினோபார்ம் (sinopharm) கொவிட் -19 தடுப்பூசியை அவசர தேவைக்கு உலக நாடுகளில் பயன்படுத்த அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.**




குறித்த அனுமதியை உலக சுகாதார ஸ்தானம் வழங்கியுள்ள இதேவேளை, உலக சுகாதார தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டெட்ரோஸ் அதானோம், (Tedros Adhanom) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற கலந்துரையாடலில் "சினோபார்ம்" தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு அடுத்த மூன்று நாட்களுக்குள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கீகாரத்தை வழங்கக் கூடியதாக இருக்கும் என்று டெட்ரோஸ் குறிப்பிட்டார்.

இதையடுத்து, அனுமதி கிடைத்தவுடன் நாட்டில் பெரும்பான்மையான மக்களுக்கு "சினோபார்ம்" தடுப்பூசியை வழங்க முடியும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## தொடரும் கைதுகள்

# சுகாதார விதிமுறைகளை மீறிய 617 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 617 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் நடைமுறைகளை மீறி பொது இடங்களில் நடமாடுவோரை கைது செய்யும் நடைமுறை தீவரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், நேற்று முன்தினம் தனிமைப்படுத்தல் நடைமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 617 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதுவரையான நாட்களில் இவ்வாறு தனிமைப்படுத்தல் நடைமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நாளொன்றில் அதிகளவானோர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பமாக அமைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, முகக்கவம் அணியாது நடமாடியமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் கடந்த ஒக்டோபர் 30 முதல் கைது செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 6 ஆயிரத்தை கடந்து 6 ஆயிரத்து 539 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கடும் பனி மூட்டம்

## சாரதிகளுக்கு எச்சரிக்கை



(ஹற்றன்)

மத்திய மலை நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினை தொடர்ந்து மாலை வேளையில் பெய்யும் கடும் மழையுடன் ஹற்றன் - கொழும்பு மற்றும் ஹற்றன் - கண்டி பிரதான வீதிகளில் பல இடங்களில் என்றும் இல்லாதவாறு பனிமூட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.


இதனால் இந்த வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் கவனமாக தங்களது வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வீதி ஓரங்களில் பொருத்தப்பட்டிருக்கும் வீதி சமிக்ஞைகள் எதுவும் கண்ணுக்கு தெரியாதவாறு பனியினால் மூடப்பட்டுள்ளன.

எனவே இந்த வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் தங்களது வாகனத்தில் முகப்பு விளக்கை ஒளிரச் செய்தவாறு தங்களுக்கு உரிய பக்கத்தில் மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு போக்குவரத்துப் பொலிஸார் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

## மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாத அரசு;

# கொவிட் நிதிக்கு நடந்தது என்ன?

## சாணக்கியன் கேள்வி



(கொழும்பு)

கொவிட் -19 நிவாரண நிதியத்துக்கு கிடைத்துள்ள 1727 மில்லியன் ரூபாவில் இதுவரை 105 மில்லியன் ரூபாவை மாத்திரமே அரசாங்கம் பயன்படுத்தியுள்ளது.

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளதுடன், அரசாங்கம் இனத்துவேசமாகவே நடந்து கொள்கிறது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் குற்றம் சாட்டினார்.

கொரோனா வைரஸ் தொற்று தடுப்புக்கான இரண்டாவது தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதற்காக நாரஹேன்பிட்டியவிலுள்ள இராணுவ வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்தபோது ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உண்மையிலேயே நான் கொரோனா தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதற்கான எண்ணம் இருக்கவில்லை. பொது மக்களுக்கு இவை சேர வேண்டும் என்றே ஆரம்பத்தில் நினைத்திருந்தேன்.

எனினும், அரசாங்கத்திலுள்ளவர்கள் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை தங்களது வீடுகளுக்கே வரவழைத்துக்கொண்டு தங்கள் குடும்பத்தினர், உறவினர்கள் என அனைவருக்கும் ஏற்றி பாதுகாப்பாக இருக்கிறார்கள்.

இவ்வாறு அவர்கள் தங்களது குடும்பத்தினர், உறவினர்கள் என அனைவருக்கும் தடுப்பூசியை ஏற்ற முடியுமென்றால் நான் ஏற்றிக்கொள்வதில் தவறில்லை என்று நினைத்தே, இந்த தடுப்பூசியை ஏற்ற முன்வந்தேன்.

"கொவிட் -19 நிவாரண நிதியத்துக்கு கிடைத்துள்ள 1727 மில்லியன் ரூபாவில் இதுவரை 105 மில்லியன் ரூபாவை மாத்திரமே அரசாங்கம் பயன்படுத்தியுள்ளது என 'வெரிட்டெ' எனும் ஆய்வு நிறுவனம் மேற்கொண்டுள்ள ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு 105 மில்லியன் ரூபாவை மாத்திரமே அரசாங்கம் செலவழித்திருந்தால், மிகுதிப் பணத்துக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

அந்த பணத்தைக்கொண்டு நாட்டு மக்களுக்கு அவசியமான தடுப்பூசிகளை கொள்வனவு செய்து வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும். மேலும், வைத்தியசாலைகளுக்கு தேவையான பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளக்கூடிய உபகரணங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும். அதை விடுத்து தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக பாலங்களை அமைப்பது, பெருந்தெருக்களை நிர்மாணிப்பது மாத்திரம் மக்கள் நலனில் அடங்காது" என அவர் தெரிவித்தார். (நி)

# தேங்காய் எண்ணெயில் கலப்படத்திற்கு தடை

## வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் சமையலுக்கான தேங்காய் எண்ணெயுடன் வேறு எந்த எண்ணெயையும் கலப்பதை தடை செய்து அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி அறிவிப்பு நுகர்வோர் விவகார அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இறக்குமதியாளர், உற்பத்தியாளர்கள், களஞ்சிய உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சமையலுக்கான தேங்காய் எண்ணெயில் வேறு எந்த எண்ணெயையும் கலக்கக் கூடாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# பத்து நாட்களில் 109 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த பத்து நாட்களில் 109 பேர் கொவிட் வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதன்படி கொவிட் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 764 ஆக காணப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொவிட் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 655 ஆக காணப்பட்டது.

கடந்த சில நாட்களாக கொவிட் மரணங்கள் சடுதியாக அதிகரித்த நிலையில் பத்து நாட்களுக்குள் 109 பேர் மரணமடைந்தனர்.

இதனடிப்படையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 11 மரணங்கள் சம்பவித்துள்ள நிலையில் நேற்று முன்தினம் மாத்திரம் 19 பேர் உயிரிழந்துள்ளனர். நாள் ஒன்றில் பதிவாகிய அதிகூடிய மரணங்களின் எண்ணிக்கை இதுவாகும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார விதிமுறைகளை மீறினால்
# வியாபார அனுமதி இரத்து!
## தவிசாளர் அறிவிப்பு

(அக்கராயன்)

**கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள், பொதுச்சந்தைகளில் சுகாதார நடைமுறைகளை பேணவும். தவறும் வியாபாரிகளின் வியாபார அனுமதி இரத்துச் செய்யப்படும் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் அறிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இரவு இயங்கும் உணவகங்கள் மற்றும் விடுதிகள் என்பன மறு அறிவித்தல் வரை இயங்க முடியாது.

உணவகங்கள், தேநீர்ச் சாலைகள் அனைத்தும் இரவு 9 மணிக்கு முன் மூடப்பட வேண்டும். நடமாடும் வியாபாரங்கள் மறு அறிவித்தல் வரை தடை. வியாபாரிகள் மற்றும் சந்தை வர்த்தகர்கள்




குறைந்தது 15 நாட்களுக்கு ஒரு தடவையாவது பி.சி.ஆர். பரிசோதனை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும்.

பொது நிகழ்வுகள் எமது அனுமதி இன்றி நடத்தப்பட்டால் பொது சுகாதார பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆகவே கொவிட் - 19 ஐ பிரதேசத்தில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க ஒத்துழைக்குமாறும் பச்சிலைப்பள்ளியின் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார். (4-350)

# மன்.பெற்றா பகுதியில் இடி, மின்னல் தாக்கம்



(மன்னார்)

மன்னார் பெற்றா பகுதியில் அமைந்துள்ள வெற்றியின் நல் நம்பிக்கை இல்லத்தின் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடி மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதன் போது குறித்த இல்லத்தின் மின் இணைப்புக்கள் முழுமையாக இடி மின்னல் தாக்கத்தினால் எரிந்து சேதமாகியது.

இதன் போது சிறுமிகள், பாடசாலை மாணவிகள் என 15 பேர் இல்லத்தில் காணப்பட்டுள்ளனர். எனினும் எவருக்கும் எவ்வித் பாதிப்பும் ஏற்படவில்லை.

உடனடியாக குறித்த இல்லத்தில் உள்ள சிறுமிகள், பாடசாலைமாணவிகள்வெளியேற்றப்பட்டு அயலவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. (4-285)

# தொற்றுப்பரவல் வீதம் முல்லையில் அதிகரித்து வருகிறது- அரச அதிபர்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 பேர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன் 101 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போதைய கொவிட் 19 நிலைமைகள் தொடர்பில் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மாங்குளம் வைத்தியசாலையில் சிற்றூழியராக பணியாற்றிய ஒருவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து அவருடன் தொடர்புடைய சிலருக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மாங்குளம் மருத்துவமனையில் மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் சிகிச்சை நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த காலங்களை விட மாவட்டத்தில் தொற்று பரவல் அதிகரித்து வருகிறது. தற்போது பரவும் வைரஸ் அதிக வீரியம் கொண்டதாக இருப்பதுடன் இது இளைஞர் மற்றும் சிறுவர்களை அதிகம் தாக்குகிறது.

எனவே மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். முல்லைத்தீவு மாவட்ட பொதுமக்களுக்கான அறிவித்தலாக அநாவசியமாக வீதிகளில் செல்ல வேண்டாம். அத்தியாவசியமாக வெளியில் வரும் போது முகக்கவசம் அணிந்து, கைகளைக் கழுவி. தொற்று நீக்கல்களை மேற்கொண்டு சுகாதார நடவடிக்கையினை பின்பற்ற வேண்டும். கடந்த காலங்களில் கொரோனா வால்பாதிக்கப்பட்வர்கள்குறைந்திருந்தாலும் தற்போது அதிகரித்து வருகின்றது.

எனவே மக்கள் பொது இடங்களுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளவும். ஒன்றுகூடல்களை தவிர்த்து சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும் என தெரிவித்தார். (4-315)

# குடிநீர்த் திட்டத்தினை பூரணப்படுத்துங்கள்
## பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் குடிநீர் வழங்கும் திட்டத்தினை முழுமைப்படுத்துவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்னர் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் ஆறு மாதத்தில் 433 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்க முடியும் என ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டத்தில் 242 குடும்பங்களுக்கே குடிநீர் வழங்கப்படுகின்றது.

ஏனைய குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கப்படாத ஒரு முழுமை பெறாத குடிநீர் திட்டமாக இக்குடிநீர்த் திட்டம் காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர் நெருக்கடியினை எதிர் கொண்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஒன்றாக அக்கராயன் கிராம உத்தியோகத்தர் பிரிவு காணப்படுகின்றது.

இந்நிலையில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இத்திட்டத்தினை முழுமை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கராயன் பொது அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (4-350)

# அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் மேய்ச்சல் தரவை நெருக்கடி

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை வீதிகளின் ஓரங்களில் மேய்ச்சலில் ஈடுபடுத்தி வருகின்றனர்.

1968ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பலப் பெருமாள்குளம் குடியேற்றத் திட்டத்தில் தற்போது 110 வரையான குடும்பங்கள் விவசாயத்தினையும் கால்நடை வளர்ப்பினையும் நம்பி வாழ்ந்து வருகின்றன.

அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் தற்போது சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் அம்பலப்பெருமாளில் இருந்து அக்கராயன் செல்லும் வீதிகளிலும் காடுகளின் தொடக்கத்திலும் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்தி வருகின்றனர்.

கடந்த பத்தாண்டுகளாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் மேய்ச்சல் தரவைக்கான இடங்களை இனங்காட்டுமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்த போதிலும் அக்கோரிக்கை நிறைவேற்றப்படாத கோரிக்கையாக காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் தீர்க்கப்படாத பிரச்சினைகளில் ஒன்றாக மேய்ச்சல் தரவைக்கான நிலங்கள் இனங்காணப்படாமல் காணப்படுகின்றது. (4-350)

# குமுழமுனை வட்டாரம் சார்பில் நான்கு தீர்மானம் நிறைவேற்றம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையில் நான்கு பிரேரணைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் இ.கவாஸ்கர் தெரிவித்தார்.

கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற பிரதேச சபை அமர்வில் குமுழமுனை தாமரைக் கேணி இந்து மயானம் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

குமுழமுனைச் சந்தைப் பகுதியில் மீன் கழிவு நீர் பாதுகாப்பான முறையில் அகற்றப்பட வேண்டும்.

தற்போது அகற்றப்படும் மீன் கழிவுநீர் சந்தையில் பரவாமல் பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

சந்தைப் பகுதியில் நீண்ட காலமாக இடிந்த நிலையில் காணப்படுகின்ற கட்டடத்தினை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற பிரேரணைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் இத்துடன் தண்ணிமுறிப்புக்குளப் பகுதியில் இடிதாங்கி பொருத்தப்பட வேண்டும் என்ற பிரேரணை தீர்மானமாக கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமும் நன்றே, பூமியும் நன்றே, ஆனால் அவற்றின் இடையேயுள்ள அந்த ஒன்றுதான் கெட்டது. – ஸ்பானியப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# எடுத்த கருமங்களை இடைநிறுத்த வேண்டா!

சமகாலக் கொரோனாத் தொற்றால், நயினாதீவில் நடைபெறவிருந்த தேசிய வெசாக் தினத்தை நடத்த முடியாதுள்ளதாக பௌத்த சாசன அமைச்சு அறிவித்துள் ளது.

கௌதம புத்தபிரான் பரிநிர்வாணமடைந்த வெசாக் பௌர்ணமி புனித நாளை, நயினா தீவில் கொண்டாட முடியாமல் போயிற்று என்பதை நினைக்கும்போது எம் இதயம் கனக்கவே செய்கிறது.

கௌதம புத்தபிரான் உலகத்துக்கு தர்ம உபதேசம் செய்தவர்.

உலகப் பற்றைத் துறந்து ஞானவாழ்வின் அவசியத்தை மனித குலத்துக்கு எடுத்துரைத்தவர்.

கௌதம புத்தபிரானின் போதனைகள் அப்படியே பின்பற்றப்படுமாயின், இந்த உலகில் சண்டைக்கும் சச்சரவுக்கும் இது எனது அது உனது என்ற பேதமைக்கும் ஏது இடம்.

ஆம், இவ்வுலகம் இன்புற்று வாழ வேண்டும் என்பதற்காக; தத்துவ வாழ்வை உபதேசப் பொருளாகத் தந்த கௌதம புத்த பிரானின் போதனைகள் பௌத்த துறவிகளாலேயே பின்பற்றப்படவில்லை எனும் போது, வேதனை இதயத்தை அடைத்துக் கொள்கிறது.

பரவாயில்லை, என்றோ ஒருகால் இந்த உலகம் உண்மைப் பொருளை உணர்ந்தாக வேண்டும். அப்போதேனும் கௌதம புத்த பிரானின் பற்றற்ற ஞானவாழ்வு பற்றி மனித குலம் சிந்திக்கும் என்பது சர்வநிச்சயம்.

இவை ஒருபுறமிருக்க, தேசிய வெசாக் திருநாளை நயினாதீவில் நடத்தும் பொருட்டு நயினாதீவில் உட்கட்டுமானப் பணிகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டன.

காபற் வீதிகள் அமைத்தல், சிறு வீதி புனரமைப்பு, குறிகாட்டுவான் இறங்குதுறையைச் செப்பனிடல், சிறுபாலங்கள் திருத்தம், பொது இடங்களுக்கு வர்ணம் பூசுதல் என ஏகப்பட்ட பணிகள் நயினாதீவில் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் கொரோனா காரணமாக வெசாக் திருநாளின் தேசிய நிகழ்வுகளை நயினாதீவில் நடத்துவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம், நயினாதீவில் முன்னெடுக்கப்பட்டுள்ள புனரமைப்பு வேலைகளில் எந்தத் தடங்கலையும் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதுதான் நம் தயவான வேண்டுகோள்.

அதாவது பௌர்ணமி திருநாளின் தேசிய நிகழ்வு நிறுத்தப்பட்டாலும் நயினாதீவில் எடுத்த கருமங்களை இடைநிறுத்த வேண்டாம் என்பதுதான் நம் விண்ணப்பம்.

# இரத்த வங்கியில் குருதித் தட்டுப்பாடு
## குருதி வழங்க முன்வாருங்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் இரத்த வங்கியில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், குருதி வழங்க முன்வருபவர்கள் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் யின் இரத்தவங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் செந்தூர் பதிராஜா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் தற்போது குருதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே குருதி வழங்க விரும்புபவர்கள் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் அல்லது 023-222 2261 மற்றும் 023-222 2349 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி குருதி வழங்கி வைக்க முடியும் என மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (4-8-288)

# ஒற்றுமை இன்மையை சாதகமாக்கும் அரசு

(குப்பிழான்)

ஆயுதப் போராட்டத்தில் எங்களுக்குள் ஒற்றுமை இல்லாத காரணத்தினால் தான் தற்போது மிக மோசமான வன்முறைகளையும், தமிழ்மக்கள் வடக்கு-கிழக்கில் பூர்வீகக் குடிகள் அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதற்கான அனைத்து முயற்சிகளையும் தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகின்றனர் என வன்னிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

சிறீ சபாரத்தினத்தின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசியத்தை நேசிக்கின்ற அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒரு குடையின்கீழ் வர வேண்டும் எனும் அடிப்படையில் தமிழீழ விடுதலை இயக்கம் தொடர்ந்தும் பயணிக்கும். எத்தகைய விட்டுக்கொடுப்புகள் மேற்கொண்டாவது தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைக்கான முயற்சிகளில் நாங்கள் ஈடுபடுவோம்.

எங்களுடைய மனங்களிலுள்ள விரோதங்களை நாங்கள் ஒரு பக்கம் வைத்து விட்டு தமிழினத்தின் விடுதலையை நாங்கள் வென்றெடுக்க வேண்டும் என்பதே எங்களின் எழுச்சிமிகு சிந்தனையாக உள்ளது.

'எங்கள் இலட்சியத்தை நாங்கள் ஒரு போதும் விட்டுக் கொடுக்கமாட்டோம். எங்கள் மண் மாற்றான் கைகளுக்குப் போக ஒருபோதும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் எனத் தெரிவித்தார். (4-8-18)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், நெளுங்குளம் நீர் வழங்கல் சபை, அறுகம் புல் வெளி, பாரதிபுரம், கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக்குளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக் குளம், அவுசதப்பிட்டிய, பாண்சின்னகுளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திர குளம், சாம்பல்தோட்டம் வீட்டுத்திட்டம், விநாயகபுரம் வீட்டுத்திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

(உலக நாடுகளிலிருந்து)
# தொற்று நீங்க வேண்டி ஆலயங்களில் வழிபாடு

(யாழ்ப்பாணம்)


கொரோனாவைரஸ் தொற்று பெரும் அபாய நிலையிலுள்ள இலங்கை, இந்தியா மற்றும் உலக நாடுகளிலிருந்து தொற்று நீங்க வேண்டி இந்து ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்றன.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் மற்றும் மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயம் ஆகியவற்றில் நேற்று மாலை 5.30 மணிக்கு இந்த வழிபாடுகள் இடம் பெற்றுள்ளது.

குறித்த வழிபாடுகளில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

வழிபாடுகளின் நிறைவில் இந்திய மக்களுக்காகப் பிரார்த்தித்து அந்த நாட்டுப் பிரதமருக்கான கடிதங்களை இந்தியத் துணைத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3.33)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ "மனம் மாறுங்கள். ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது"

❖"பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது:
ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்
அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள்"

❖ஏற்கனவே மரங்களின் வேரருகே கோடரி வைத்தாயிற்று. நற்கனி தராத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுத் தீயில் போடப்படும்.

"என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்"

"மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்"

'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணி செய்'

"என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்"

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோள் கொடுப்பான் தோழன்

# இந்தியாவின் நண்பன் அமெரிக்கா

(வோஷிங்டன்)

**இந்தியாவிற்கு தேவை யான உதவிகளை செய்வதில் அமெரிக்கா உறுதியாக இருக்கி றது என அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தெரி வித்துள்ளார்.**


உலக அளவில் கொரோனா தொற்றின் முதல் அலையின் போது அமெரிக்கா அதிக பாதிப் புகளை சந்தித்தது. அந்த சம யத்தில் இந்திய அரசு சார்பில், அமெரிக்காவிற்கு பல்வேறு மரு த்துவ உதவிகள் அனுப்பிவைக் கப்பட்டன. இந்தியாவில் தற் போது கொரோனா தொற்றின் 2வது அலை மிகத் தீவிரமாக பரவி வருகிறது.

இந்த நிலையில் அமெரிக் காவின் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ், இந்தியாவிற்கு கொரோனா நிவாரணம் வழங் குவது குறித்து வோஷிங்டனில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

அறிவுசார் சொத்து விதிக ளில் இருந்து கொரோனா தடுப் பூசிக்கான காப்புரிமையை வில க்கி வைக்கும் நிலைப்பாட்டி ற்கு, அமெரிக்கா தனது ஆத ரவை தெரிவித்துள்ளது. இதன் மூலம் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தங்கள் குடி மக்களுக்கு விரைவில் தடுப்பூ சிகளை செலுத்த முடியும்.

அமெரிக்காவிற்கு தேவை யான காலத்தில் இந்தியா உத வியது. தற்போது இந்தியாவின் நண்பன் என்ற முறையில் அமெ ரிக்கா உதவிகளை செய்து வரு கிறது. கடந்த ஒரு வாரத்துக் குள் 6 விமானங்களில் உதவிப் பொருட்கள் இந்தியா விற்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் இந்தியாவிற்கு தேவை யான உதவிகளை செய்வதில் அமெரி க்கா உறுதியாக இருக்கிறது" இவ் வாறு அவர் கூறியுள்ளார். (நி-8)

# சீனாவினால் ஏற்படப்போகும் அடுத்த விபரீதம்




(பீஜிங்)

சீனா ஏவிய இராக்கெட்டின் மிகப்பெரிய பாகம் ஒன்று பூமி யின் மீது விழப் போகிறது. இதனால் ஏற்படப் போகும் பாதி ப்புகள் குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகிறார்கள்.

தனது விண்வெளி நிலை யக் கட்டமைப்புக்காக கடந்த மாதத்தில் சீனா லாங் மார்ச் - 5பி என்ற ராக்கெட்டை விண் ணில் செலுத்தியது. இதன் பணி நிறைவடைந்துவிட்டா லும் இந்த ராக்கெட்டின் பாகம் இப்போது கட்டுப்பாடு இல்லா மல் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

"யாருக்கும் ஆபத்தில்லாத பகுதியில் ராக்கெட்டின் பாகம் விழும் என நம்புகிறோம். கட லிலோ அல்லது அதைப் போன்ற வேறு இடத்திலோ விழக்கூடும்" என்று அமெரிக் காவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் லாய்டு ஆஸ்டின் தெரிவித்தார். (நி-8)

# கொரோனாவின் கோரத் தாண்டவம்



(டில்லி)

இந்தியாவில் கொரோனா பாதிப்பு நிலவரம் குறித்த அறிக்கையை நேற்றுக் காலை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டது. இந்தத் தகவலின்படி இந்தி யாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 கோடியே 18 இலட்சத்து 92 ஆயிரத்து 676 ஆக உயர்ந் துள்ளது.

நேற்று முன்தினம் மட் டும் 4 இலட்சத்து ஆயிரத்து 78 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

நேற்று முன்தினம் ஒரே நாளில் 4 ஆயிரத்து 187 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர் களின் மொத்த எண்ணி க்கை 2 இலட்சத்து 38 ஆயி ரத்து 270 ஆக உயர்ந்துள் ளது. (நி-8)

# கொலம்பியாவில் ஆர்ப்பாட்டம்

**• 25 பேர் பலி**

**• 379 பேர் மாயம்**



தென்னமெரிக்க நாடான கொலம்பியாவில் தற்போது முன்மொழியப்பட்டுள்ள வரிச் சீர்திருத்தத்திற்கு எதிராக கட ந்த ஒன்பது நாட்களாக முன் னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப் பாட்டங்களில் மொத்தம் 379 பேர் காணாமல்போயுள்ள னர்.

அத்துடன் இதன் விளை வாக 25 பேர் உயிரிழந்துள் ளதுடன், நூற்றுக்கணக்கா னோர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

51 பேருக்கான தேடல் கள் நடந்து வருகின்றன, 38 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ள னர்.

போராட்டங்களின் விளை வாக 352 பொதுமக்கள் மற்றும் 38 சட்ட அமுலாக்க அதிகாரி கள் காயமடைந்ததாக கொலம் பியாவின் ஓம்புட்ஸ்மன் அலுவலகத்தின் அண்மைய தரவுகள் சுட்டிக்காட்டுகின் றது. (நி-8)

# கொரோனா தடுப்பூசி முன்பதிவுக்கு நான்கு இலக்க இரகசிய எண்









(கொழும்பு)

கொரோனா தடுப்பூசி செலுத் திக் கொள்வதற்கு கோ-வின் இணையத்தளத்தில் முன்பதிவு செய்ய 4 இலக்க இரகசிய எண் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது நேற்று முதல் நடைமுறை க்கு வருகிறது.

கொரோனா தடுப்பூசி செலுத் திக் கொள்ள விரும்புவோர் கோ-வின் இணையத்தளத்தில் முன்பதிவு செய்துகொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இதில் பதிவு செய்தவர்க ளுக்கு குறிப்பிட்டதிகதி மற்றும் நேரம் அனுப்பி வைக்கப்படு கிறது. அந்த நாளில் சம்பந் தப்பட்டவர்கள் குறிப்பிட்ட மையத்திற்கு சென்று தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

45 வயதை கடந்தோர் கோ-வின் இணையத்தளத்தில் பதிவு செய்யாமல் நேரடியாக சென்றும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முடியும். ஆனால் 18 முதல் 44 வயதுக்குட்பட்டோர் கோ-வின் இணையத்தளத்தில் பதிவு செய்யவேண்டியது கட்டா யம் என்று மத்திய அரசு தெரி வித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறியிருப் பதாவது,

கோ-வின் இணையத்தளத் தில் தடுப்பூசிக்காக முன்பதிவு செய்யும் போது 4 இலக்க ரகசிய எண் அனுப்பி வைக்கப்படும். தடுப்பூசி போட்டுக்கொள்வதற் கான நாள், நேரம் போன்ற தகவல்களைப் பெற்றவர்கள் மையத்திற்கு செல்லும்போது அந்த 4 இலக்க எண்ணை தெரிவிக்க வேண்டும்.

இந்த பாதுகாப்பு முறை மூலம் தடுப்பூசிபோடாதவர்களு க்கு தடுப்பூசி போடப்பட்டதாக தவறான தகவல் வராது. இவ் வாறு அதில் கூறப்பட்டுள் ளது. (நி-8)

## தமிழகத்தில் முழு ஊரடங்கு

(சென்னை)

தமிழகத்தில் நாளை திங் கட்கிழமை முதல் இரண்டு வாரங்களுக்கு முழுமையான ஊரடங்குச் சட்டம் அமுல்படுத் தப்படவுள்ளது.

அத்தியாவசியப் பொருட் களை விற்பனை செய்யும் வர்த் தக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களையும் ஊரடங்கு காலப்பகுதியில் திறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித் துள்ளது. (நி-8)

**உலகளவில் கொரோனா**

உயிரிழப்பு :- 3 286 444

தொற்று :- 157 628 526

(நேற்றைய நிலவரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.கல்வியங்...

அதிகாரியின் பணிப்பில் மூடப்பட்டுள்ளது.

பொதுச் சந்தை நடவடிக்கைகள் நேற்றுக் காலை இடம்பெற்றவேளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கண்காணிப்பதற்காகச் சென்றிருந்தனர்.

அதன்போது சந்தையில் வியாபாரிகள் உட்பட பலர் முகக்கவசம் அணியாமல் இருந்துள்ளனர். அத்துடன், சமூக இடைவெளியும் பேணப்படவில்லை.

அதனால் எச்சரிக்கை செய்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கல்வியங்காடு பொதுச் சந்தையை மறு அறிவித்தல் வரை மூடுமாறு பணித்தனர். அதனால் சந்தை மூடப்பட்டது. (ம-3,33)

## நீரில் மூழ்கிய...

உள்ள நீர்த்தேக்கம் ஒன்றில் மூழ்கி காணாமல் போயிருந்த குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் வவுனியா பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள நீர்த்தேக்கத்திற்கு மீன்பிடிப்பதற்காக 5 பேர் சென்றுள்ளனர்.

இதன்போது நபர் ஒருவர் நீர்த்தேக்கத்தில் இறங்கிய நிலையில், நீரில் இழுத்துச் செல்லப்பட்டு மூழ்கியுள்ளார்.

இதனை அவதானித்த ஏனைய நபர்கள் அவரை நீரினுள் இறங்கி தேடியுள்ளனர். எனினும் அவரை மீட்க முடியவில்லை.

இந்நிலையில் நேற்றுக் காலை கடற்படையின் சுழியோடிகள் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் நபரின் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவத்தில் கற்பகபுரம் பகுதியை சேர்ந்த ரவி (வயது 50) என்ற குடும்பஸ்தரே மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3, 299)

## கணவனின்...

தொழிலக பட்டறையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த பரமலிங்கம் பகீரதன் (வயது-34), அவரது மனைவி பகீரதன் ரஜிதா (வயது-33) ஆகிய இருவருமே உயிரை மாய்த்தனர்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக குடும்பத் தலைவர் நேற்று முன்தினம் மாலை நகை வேலைக்கு பயன்படுத்தும் இரசாயனத்தை உட்கொண்டுள்ளார்.

அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் உயிரிழந்துள்ளார் என மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதனை அறிந்த மனைவியும் அதே இரசாயனத்தை உட்கொண்டுள்ளார். அதனால் அவரது உயிரும் பிரிந்தது.

இறப்பு தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## கொடிகாமம்...

திறந்து விடப்பட்டுள்ளது.

கொரோனா அச்சுறுத்தலினால் கொடிகாமம் மத்தி, வடக்கு முடக்கப்பட்டிருந்தது.

இதனால் கொடிகாமம்-பருத்தித்துறை பிரதான வீதி கடந்த மூன்று நாட்களாக போக்குவரத்து தடைசெய்யும் முகமாக பிரதான வீதியும் முடக்கப்பட்டிருந்தது.

முடக்க காலத்தில், பொதுப் போக்குவரத்துக்கான பிரதான வீதிகளை தடை செய்ய முடியாது. குறித்த பிரதான வீதி தடை தொடர்பில் யாழ்.அரச அதிபர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, குறித்த கொடிகாமம் - பருத்தித்துறை வீதி நேற்று மாலை மீளவும் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டுள்ளது. (ம-3,33)

## ஒரு தொகை...

ஞன் ஒருவர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் கெற்பேலி பிரதேசத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள் சுமார் 20 இலட்சம் பெறுமதியுடைய 19 கிலோ 180 கிராம் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட இளைஞன் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

அத்துடன் குறித்த இளைஞனுடன் வேறு யாரேனும் நபர்கள் தொடர்பில் உள்ளார்களா என்ற கோணத்தில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்.போதனா வைத்தியசாலையில் 7 பேருக்கும், தெல்லிப்பழை மற்றும் ஊர்காவற்றுறை பகுதிகளில் இருவருக்குமாக 14 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் மன்னார் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஒருவருக்கும் கிளிநொச்சி வைத்தியசாலை மற்றும் பளை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுகளில் 3 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் புதுக்குளம் பகுதியில் 5 பேருக்கும் வவுனியா வைத்தியசாலையில் 2 பேருக்குமாக 25 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பணிப்பாளர் கூறியுள்ளார். (ம-3,18,33)

## 30 ஆயிரம்...

தார நிர்வாகம் தொடர்பான கலாநிதி சஞ்சய பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

எனினும் கொரோனா பரவல் நிலையை கட்டுப்படுத்தினால் மரணங்களை 20,000 தொடக்கம் 15,000 வரை குறைத்துக் கொள்ள முடியும் என Health Data Organization அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் கூறினார்.

B.1.617 என்ற கொரோனா வைரஸ் தாக்கம் மிகவும் உயிராபத்துமிக்கது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தியாவில் தற்போது குறித்த B.1.617 கொரோனா வைரஸ் தாக்கமே ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வவுனியாவில்...

மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில், செட்டிகுளம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த குருக்கள் புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 5 பேருக்கும், பம்பைமடுவில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தைச் சேர்ந்த 2 பேருக்கும் என 7 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளான 7 பேரையும் கொரோனா வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள சுகாதார பிரிவினர், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ம-3,250)

## 5...

அத்துடன் குருநாகல், கண்டி மற்றும் மன்னார் நகர பகுதியில் தொற்றுறுதியானவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையின்போதும் பிரித்தானியாவின் வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுடன் மத்திய கிழக்கு நாடுகளிலும் பரவி வரும் பி.1.428 என்ற வைரஸ் திரிபுடன் யாழ்ப்பாணத்திலும் பலர் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் நல்லூரை மையமாக கொண்டு குறித்த வைரஸ் பரவி வருகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் கொழும்பின் சில பிரதேசங்களில் பி.1.411 என்ற தனி திரிபுடன் வைரஸ் ஒன்று பரவி வருவதாகவும் தெரியவந்துள்ளது. (ம-3)

## 22 பலி...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாட்டில் கோவிட் தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 786 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் ஒரே நாளில் நேற்றைய தினமே அதிகளவான கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

தன நிதானய
திகதி - 2021.05.08
சீட்டிழுப்பு இலக்கம் - 512
U 14 18 61 63
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 08.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2770
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
V 05 08 19 33
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/05/08
சீட்டிழுப்பு இலக்கம் 4475
F 8 7 0 5 8 1
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0832
J 23 04 13 44 75

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1118
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 5 8 9 5 7 1
16642

சீட்டிழுப்பு வாரம் 074
சீட்டிழுப்பு திகதி 08.05.2021
வெற்றி இலக்கங்கள் 02 11 14
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,747,160

அத கோடிபதி
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1271
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 08.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 133,308,519
வெற்றி இலக்கங்கள் 10 31 49 75 Z
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3601
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 08.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,282,248
வெற்றி இலக்கங்கள் 01 33 61 73 C
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி: 08.05.2021
வெற்றி வாரம்: 3152
வர்ணம்: இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 15 23 43 44
துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,750,123

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1445
நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 08/05/2021
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் O 02 06 23 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் 55,370,108/=

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 432
திகதி 08.05.2021
வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 31 53 65
ராசி எண் 7
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,936,032
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு அநீதி இழைக்கப்படாது என அமைச்சர் சமல் உறுதியளித்தார்

## தமிழரசு கட்சி தலைவர் மாவை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படாது என அமைச்சர் சமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

முல்லைத்தீவில் மகாவலி அதிகாரசபைக்கு எட்டு கிராம சேவகர் பிரிவுகள் கையளிக்கப்படுவது பற்றியும் கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச சபை தரமிறக்கப்பட்டது பற்றியும் சமல் ராஜபக்ஷவுடன்· கலந்துரையாடியமை தொடர்பில் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் சமல் ராஜபக்ச விடம் மகாவலி அதிகார சபை பகிர்ந்தளிப்பது தொடர்பில் தமிழ்ப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவ்வாறு கையளிப்பதைத் தடை செய்வதாக அறிவித்திருந்தார். இதற்கு மாறாக நாமல் ராஜபக்ச அப் பிரதேசங்களை மகா வலி அதிகார சபையிடம் கையளிக்க வருகிறார் என்ற செய்திகள் வந்திருப்பது பற்றி அமைச்சருடன் பேசிய பொழுது, அவ்வாறு நடைபெறாது என வாக்குறுதி வழங்கியுள்ளார்.

மேலும் அமைச்சர் குறிப்பிட்டதாவது, அப்பிரதேசங்களில் நவீன முறையில் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காகவே முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டார். இதன் போது, நான் எமது மக்கள் அப்பிரதேசங்களில் மகாவலி அபிவிருத்திச்சபை நீர்ப்பாசன நடவடிக்கைகளின் பொழுது தென்னிலங்கையிலிருந்து பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றி அப் பிரதேசங்களின் இனக் குடிப்பரம்பலைச் சீர்குலைக்க முயற்சிக்கப்படும்" என்ற மக்களின் அச்சத்தைக் குறிப்பிட்டேன்.

அமைச்சர் அவ்வாறு நடைபெற, தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்க இடமளிக்கப்படாது என்றும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடம் இவ்விடயம் பற்றிப் பேசித் தீர்மானிப்பேன்" என்றும் குறிப்பிட்டார். (ம-03)

# கோவிட் தொற்றாளர்களுக்கு வீட்டிலேயே சிகிச்சை

(கொழும்பு)

நோய் அறிகுறிகள் தென்படாத கோவிட் தொற்றாளர்களுக்கு அவர்களது வீட்டிலேயே சிகிச்சை அளிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதேபோல, நோயாளிகளின் பராமரிப்பு குறித்த முறையான திட்டம் ஒன்றை அரசாங்கம் செயல்படுத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார். (ம-03)

# கொரோனாப் பரவலை தடுக்க தடுப்பூசி ஏற்றுவது அவசியம்

## மருத்துவ சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

கோவிட்-19 பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி ஏற்றிக்கொள்வது மிகவும் அவசியமானது என இலங்கை மருத்துவர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் இதுவரையில் ஏழு கோவிட் தடுப்பூசிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளதாக சங்கத்தின் தலைவர் நிபுணத்துவ டொக்டர் பத்மா குணரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த அனுமதி அளிக்கப்பட்ட எந்தவொரு தடுப்பூசியையும் மக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அனைத்து தடுப்பூசிகளினாலும் 65 வீதத்திற்கும் மேற்பட்ட பாதுகாப்பு கிடைப்பதாகவும், தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டாலும் 90 வீதமான பாதுகாப்பு கிடைக்கும் எனவும், தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற நேரிடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். முதல் சந்தர்ப்பத்திலேயே கிடைக்கும் ஏதேனும் ஓர் வகை தடுப்பூசியை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கர்ப்பிணிப் பெண்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமெனவும், வைரஸ் தொற்றுக்களிலிருந்து அவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த நோய்த் தொற்று சிறுவர்களுக்கு தொற்றாது என்று கூற முடியாது எனவும், சிறுவர்களுக்கும் நோய்த் தொற்று தாக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-03)

# சூட்சுமமான முறையில் சிறுவனிடம் சைக்கிள் திருட்டு

## யாழ். தாவடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சிறுவன் ஒருவனிடம் சூட்சுமமான முறையில் துவிச்சக்கர வண்டி அபகரிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று காலை தாவடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள சிறுவன் ஒருவன் தனது சகோதரியை தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் இறக்கிவிட்டு விட்டு தாவடிப்பகுதியால்வீடுதிரும்பிச் சென்றுகொண்டிருந்த போது இளைஞன் ஒருவன் தன்னையும் ஏற்றிச் செல்லுமாறு கேட்டுள்ளார்.

குறித்த இளைஞனை ஏற்ற முற்பட்ட வேளை துவிச்சக்கரவண்டியை தான் செலுத்திச் செல்வதாகவும் குறித்த சிறுவனை துவிச்சக்கர வண்டியின் பின்னிருக்கையில் இருக்குமாறு கூறி குறித்த இளைஞன் அழைத்துச் சென்றுள்ளான்.

சிறுவன் பின் இருக்கையில் இருந்து சென்ற போது குறிப்பிட்ட தூரம் சென்ற பின்னர் சிறுவனை அடித்து துவிச்சக்கர வண்டியில் இருந்து தள்ளி விழுத்தி விட்டு துவிச்சக்கர வண்டியை இளைஞன் அபகரித்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (ம-3)

# உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை பிரதிநிதி ஒலிவியா

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்துடன் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை பிரதிநிதி டொக்டர் ஒலிவியா நீவெரஸை (Olivia Nieveras) எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று சந்தித்தார்.

சவால்மிக்கதொரு நேரத்தில் இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்பு மற்றும் உதவிகளை பெற்றுத்தருமாறு டொக்டர் ஒலிவியா நீவெரஸிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கும் அனைத்து வழியிலும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் தயாரென இந்த சந்திப்பின் போது ஒலிவியா நீவெரஸ் எதிர்க்கட்சித் தலைவருக்கு தெரிவித்துள்ளார். (ம-03)


காணி விற்பனைக்கு
கோப்பாய் இராசபாதை வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (6851)
077 773 0567

காணி விற்பனைக்கு
பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-2128)
077 436 6704, 077 179 1963

வேலையாள் தேவை
கிளிநொச்சியில் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் வீடு, காணி, அல்சேரியன் நாய்கள் இரண்டையும் பராமரிக்கக்கூடிய ஒருவர் தங்கி நின்று வேலை செய்வதற்கு தேவை. வயது 40 - 60 இற்கு இடைப்பட்டவர். தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் அத்தாட்சி கடிதமும் தேவை. (C-2122)
☎- 077 977 5290

சோ(f)பா கிளீனிங்
தங்கள் கறைபடிந்த சோ(f)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புக்களை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6797)
077 224 2787

ONLINE SEMINAR
தமிழ் மொழியிலான கலந்துரையாடல்
STUDY MEDICINE IN CHINA
on 15th MAY 2021 at 10.00am
மேலதிக தொடர்புகளுக்கு Dr. தேவா
Mob : 076 764 6888 Tel : 011 588 2896
Authorised agent in Sri Lanka
BYF EDUCATION (PVT) LTD
2C, 1/2, Charles Place, Dehiwala, Sri Lanka
www.byfedulk.com
(6847)

சிறுநீரகம் உடன் தேவை
0+ சிறுநீரகம் உடன் தேவை. வழங்க விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். (C-2123)
076 018 3700
077 468 5553
( சன்மானம் வழங்கப்படும். )

அண்ணா EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-2060)
070 3305500
077 888 9388
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

IELTS CLASSES
கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS (Academic and General ) A1 UK Exams (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை ) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். Guaranteed to 7.5 in IELTS Exams.
A1 Exam Pass Exam Center
Jaffna College Under Graduate Department
( Online and Personal Classes available ) (6816)
Please Contact :
077 780 3970, 074 007 1970

வேலை வாய்ப்பு
சர்வதேச ரீதியில் இயங்கும் காப்புறுதி நிறுவனத்துக்கு
நிதி ஆலோசகர் / நிதி திட்டமிடல் முகாமையாளர்
தேவை
ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு உங்கள் CV ஐ அனுப்பி வைக்கவும். (C-2126)
Whatsapp 074 021 0683
Normal Call 076 [illegible] 4685/076 901 7645

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-2059)
0768226240 DHL


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 308

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 09.05.2021 தொலைபேசி : 021 222 3378



கொரோனாக்கால
சனநாயகம்




முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலின் ஆகிய நான்...

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

எல்லோரும் மாஸ்க்கைப் போடுங்க, பண்டிதர் பரமலிங்கம் அறிவுறுத்தல் வழங்கினார்.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா சொல்லுறதும் சரிதான். மாஸ்க் போடாமல், விட்டால் பொலிஸார் இரண்டு கைகளையும் இரண்டு கால்களையும் பிடித்துத் தூக்கிக் கொண்டல்லோ போவினம்.

**விதானையார்:** அது மட்டுமல்ல மூப்பர்; எங்கட வயசில கொரோனா வந்தால் கதை அவ்வளவுதான். ஆகையால வயது போன நாங்கள் கொரோனா விடயத்தில மிகவும் கவனமாக இருக்கவேணும்.

**கங்காணி:** தட்டுத் தடுமாறி எங்களுக்குக் கொரோனா வந்தாலும் கோப்பாய் கல்வியியற் கல்லூரியில இயங்குகிற கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு எங்களைக் கொண்டு போக வேண்டாம் எண்டு சொல்லிப்போட வேணும்.

**சாத்திரியார்:** ஏன் கங்காணியார் அப்படிச் சொல்லுறியள்.

**கங்காணி:** கோப்பாய் கல்வியியற் கல்லூரியில உள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில கவனிப்பு அறவே இல்லையாம். ஆக, பிறசர் மட்டும் பார்ப்பினமாம். அதுவும் கொரோனா நோயாளிக்கு கொரோனா நோயாளிதான் பிறசர் மிஷினைச் சுத்துவார். டாக்குத்தர் வெளியில நிண்டு கண்ணாடிக்குள்ளால டிஜிற்றல் பிறசர்மானி என்ன காட்டுது எண்டு பாப்பாராம்.

**சிறாப்பர்:** அப்ப ஆவி பிடிக்கிறது, சூடான பாணம் குடிக்கிறது எண்ட காரியங்கள் நடக்கிறதில்லையாமோ?

**கங்காணி:** சீ... அதுகள் யாதேனும் நடக்கிறதில்லை. கொரோனாத் தொற்றாளர்கள் தங்கட பாடு. டாக்குத்தர்மார் தங்கடபாடு.

**சாத்திரியார்:** இதென்ன நாசமறுப்பு. இப்படியெண்டால் சனம் செத்தல்லோ போகும்.

**கங்காணி:** சாத்திரியார் கடந்த வியாழக்கிழமை இரவு கோப்பாய் கல்வியியற் கல்லூரியில அனுமதிக்கப்பட்டிருந்த கொரோனாத் தொற்றாளர் ஒருவர் பாத்ரூம் போயிருக்கிறார். நீண்ட நேரமாக அவரைக் காணவில்லை எண்டு சக நோயாளர்கள் பாத்ரூம் கதவை உடைஞ்சுப் பார்த்தபோது, குறித்த நபர் மயங்கி விழுந்து தலையில அடிபட்டு இரத்தம் ஓடினபடி கிடந்திருக்கிறார்.

பிறகு அவரைத் தூக்கிக் கொண்டுவந்து கட்டில்ல வளர்த்தினவியள் தான் ஒரு சிகிச்சையும் நடக்கவில்லையாம்.

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த 61 வயதான அ[illegible] இறந்து போயிற்றார். உண்மையில அவர் கொரோனாவால சாகவில்லையாம். கடும் குருதிப் போக்காலதான் செத்தவர் எண்டு அங்க இருக்கிறவியள் தங்கட உறவுகளுக்குத் தொலைபேசியில சொல்லியிருக்கினம்.

**சாத்திரியார்:** என்ர கதிர்காமத்துக் கந்தா இப்படியும் நடக்குதோ?

**மூப்பர்:** கங்காணியார் பிறகு என்ன நடந்ததெண்டு சொல்லுங்கோ.

**கங்காணி:** இரத்தம் கடுமையாகப் போய் அந்த நபர் இறந்ததைப் பார்த்த அங்க இருக்கிற சிங்கள இளைஞர்கள் மருத்துவப் பகுதியினர் மீது கோபம் கொண்டு கண்ணாடியை உடைக்கப் போனவியளாம்.

**சிறாப்பர்:** பார்த்தியளோ சிங்கள இளைஞர்களிட்ட இருந்த உணர்வை.

**வாத்தியார்:** சிங்கள இளைஞர்கள் கண்ணாடியை உடைச்சால் எங் [illegible] கதையை முடிச்சு விடுவினம்.

ஆனால் தமிழ்ப் பெடியள் கண்ணாடியை உடைச்சால் அங்க இருக்கிறவியள் விசேட அதிரடிப் படையினருக்கு அறிவிச்சு எங்கட பெடியளுக்கு சமாதி கட்டுவிச்சுப் போடுவினம்.

ஆகையால கண்ணாடி உடைக்கிறதாக இருந்தால், அதைச் சிங்களப் பிள்ளைகள் தான் செய்ய வேணும்.

**விதானையார்:** அதுசரி இந்தியாவில கொரோனாத் தொற்றால பலர் இறந்தாலும் அங்க மருத்துவர்கள் கொரோனாத் தொற்றாளர்களோட நிண்டு சிகிச்சை வழங்குகினம் எண்டால், அவர்களின்ர கருணை உள்ளம் எவ்வளவு உயர்வானது.

**பண்டிதர்:** நாங்கள் சார்ஸ் வைரஸ் நோய் வந்திட்டுதெண்டு நோயாளர்களை விட்டிட்டு ஓடினனாங்கள். கொரோனா எண்டால் அருகில் நிண்டு சிகிச்சை வழங்குவமோ?



## கொரோனா நோயாளி விழுந்து இறந்த கதை...

**மூப்பர்:** சரி...சரி... இதுகள் ஒருபுறம் இருக்கட்டும். இப்ப நயினாதீவு வெசாக் கொண்டாட்டம் நடக்குமோ?

**விதானையார்:** நயினாதீவு வெசாக் கொண்டாட்டத்தை நிறுத்துவமெண்டு அரசாங்கம் சொன்னாலும் எங்கட ஆட்கள் இல்லை... இல்லை... அதை நடத்தியே ஆகவேண்டும் எண்டுதான் சொல்லுவினம்.

**சிறாப்பர்:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி யாழ்ப்பாணக் கச்சேரியில பௌத்த மத அமைச்சின் செயலாளர் தலைமையில நயினாதீவு வெசாக் கொண்டாட்ட ஏற்பாடுகள் தொடர்பில ஒரு கூட்டம் நடத்தப்பட்டதல்லோ.

அந்தக் கூட்டத்தில வெளிச்சக்கூடு கட்டுறது பற்றிக் கதைத்தபோது, யாழ். பண்ணையில இருந்து நயினாதீவுவரை வெசாக் வெளிச்சக்கூடுகளைக் கட்டுவம் எண்டு தீர்மானம் எடுக்க, அந்தக் கூட்டத்தில பங்கேற்று கண்காணித்துக் கொண்டிருந்த தமிழ் மருத்துவர் ஒருவர்; இல்லை இல்லை யாழ்ப்பாண நகரத்தில இருந்து வெளிச்சக்கூடுகளைக் கட்டவேணும் எண்டு சொன்னவராம்.

**சாத்திரியார்:** அப்ப பார்த்தியளோ! வில்லங்கம் எங்களிட்ட இருக்கிறபோது, நாங்கள் ஏன் அவர்களைக் குறை சொல்லவேணும்.


**வாத்திரியார்:** பந்தம் பிடிக்கிறவியள் இப்படித்தான் கதைப்பினம். அதுகளை நாங்கள் கவனத்தில எடுக்கத் தேவையில்லை.

இப்படி வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புடன் செயற்பட்டால் பெரும் தொற்றை ஒழிக்கலாம்



சமூகப் பொறுப்பு என்பது எம் மக்களுக்கு இம்மியும் இல்லை என்றே கூற வேண்டும்.

கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் உலகை அழித்துக் கொண்டிருக்கிறது.

அதிலும் எம் அயல் நாடான இந்திய தேசத்தை கொரோனா எனும் கொடிய வைரஸ் வேரறுக்குமளவில் இருக்கிறது என்றே கூற வேண்டும்.

நாளுக்கு நாள் தொற்றாளர்களும் இறப்பு விகிதமும் அதிகரித்தவண்ணமே இருக்கின்றன.

சுடுகாடுகளில் இடமின்றி இறந்த உடல்கள் வீடுகளில் வைத்தே எரிக்கப்படும் கொடுமையினை எண்ணிப் பார்க்க முடிகிறதா?

திரிபடைந்த கொரோனா வைரஸின் பரம்பல் அதிக வீரியத்துடன் இருப்பதே இறப்புகளும் தொற்றாளர்களும் அதிகரிக்கக் காரணம் என வைத்தியர்கள் கூறுகின்றனர்.

எமது நாட்டைப் பொறுத்தவரை கொரோனாவின் தாக்கம் அதிகரித்திருக்கின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அண்மையில், கொரோனாவின் தீவிரத்தை இலங்கை உணர்ந்து கொள்ள வேண்டும் என உலக சுகாதார அமைப்புக் கூறியிருந்தமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

தெற்கைப் பொறுத்தவரை கொரோனாவின் தாக்கம் மிக மிக அதிகம் என்றே கூறவேண்டும்.

வடக்கில் பெருந்தொற்று ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புகள் இருப்பதுடன்,

நாளுக்கு 20 தொடக்கம் 30 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர் என்பதை சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

திருநெல்வேலி சந்தைக் கொத்தணி பாரிய அளவில் உருவெடுத்ததும் இதன் விளைவாக திருநெல்வேலி சந்தையுடன் தொடர்புடைய பல கிராமங்கள் முடக்கப்பட்டு அண்மையில் விடுவிக்கப்பட்டது.

குறித்த பகுதிகளில் பலர் வைரஸ் தொற்றுக்குள்ளாகியமை கண்டறியப்பட்டது.

தொடர்ந்து தற்போது கொடிகாமம் சந்தைக் கொத்தணி உருவாகி இருக்கின்றமை மக்கள் மத்தியில் இன்னும் பயப்பீதியைக் கிளப்பியுள்ளது என்றே கூற வேண்டும்.

கொடிகாமம் சந்தைக் கொத்தணியின் விளைவு தென்மராட்சியில் பல கிராமங்கள் முழுமையாக முடக்கப்பட்டிருக்கின்றன.

இதனூடாக நாளுக்கு நாள் கொரோனா நோயாளிகளை அடையாளம் கண்டு கொண்டிருக்கின்றனர்.

இவற்றினூடே நாம் கவனிக்க வேண்டிய விடயங்கள் என்னவெனின், அசண்டையீனமே மிக முக்கியமான ஒன்றாக அமைகின்றன.

இதன் விளைவு அது சமூகத் தொற்றை ஏற்படுத்துவனவாக அமைந்து விடுகிறது.

நாட்டை முடக்குவது சாத்தியமாகாது. அவ்வாறு முடக்கினால் அது பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

எனவே குறித்த பகுதிகளை முடக்குவதனூடே கொரோனாத் தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவர முயல்வோம்.

அத்துடன் சகலரும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி ஒழுகினால் கொரோனாவில் இருந்து மீள முடியும் என அரசு சொல்கிறது. அதை யாரும் கேட்பார் இல்லை.

முகக்கவசம் எதற்காக அணியப்படுகிறது என்றே தெரியாமல் அனை[illegible] அணியாது இரு[illegible] கொரோனாவை ஒழிக்கும் நல்ல முறையல்ல.

சமூக இடைவெளி பேணுவதையோ கைகளை அடிக்கடி சுத்தம் செய்வதையோ செய்யாமல் விடுவது கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தாது. அதிகரித்துச் செல்லவே வழிவகுக்கும்.

அண்மையில் யாழ்.நகர்ப்பகுதியில் முகக் கவசம் அணியாதவர்களையும் முகக்கவசத்தை சரியான முறையில் அணிந்திராதவர்களையும் பொலிஸார் கைது செய்த வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வைரலானது.

முகக்கவசம் அணியாதவர்களைப் பொலிஸார் தூக்கிச் சென்று பொலிஸ் வாகனத்தில் ஏற்றியதைப் பார்க்கும் போது,

அடடா இப்படி செய்தாலாவது மக்கள் திருந்துவார்கள் என்ற எண்ணம் இளையோடியது.

கொரோனவின் கொடும்பிடி இலங்கையையும் நாளுக்கு நாள் நெருக்கிவரும் நிலையில் ஒரு வாரத்திற்கேனும் நாட்டை முடங்குங்கள் என பொதுச் சுகாதாரப் பணியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.

ஆனால் அரசாங்கம் நாட்டை முடக்கும் நோக்கில் இல்லை என்பதை ஏலவே தெளிவாகக் கூறிவிட்டது.

சீனாவில் தொடங்கி அமெரிக்காவை ஆட்டிப் படைத்த நேரங்களில் கொரோனாவிற்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால் இப்போது கொரோனாவுக்கான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டது.

பரவலாகப் பலருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது. தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு மக்களுக்கு ஏற்றப்பட்டுவரும் இந்த நேரத்தில் கொரோனாவின் கோரத் தாண்டவம் மீண்டும் தலையெடுத்துள்ளது.

அதிலும் கொரோனாத் தடுப்பூசியைக் கண்டுபிடித்து சாதனை படைத்த இந்திய தேசத்தை கொரோனா ஆட்டிப் படைக்கிறது என நினைக்கும் போது நெஞ்சம் நொருங்கி விடுகிறது.

கொரோனாவின் பாதிப்பு ஒருபுறமிருந்தாலும் அரசின் செயற்பாடுகள் சர்வசாதாரணமாக நடந்து கொண்டே இருக்கிறது.

ஆம், இலங்கையில் கொரோனாத் தாக்கம் அதிகரித்துள்ள இவ்வேளையில் சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்து நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கியமானவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதும் கைலாகு கொடுப்பதற்குப் பதில் கைகளை உயர்த்தி முழங்கைகளைத் தொட்டு வரவேற்ற நிகழ்வுகளும் உலகளவில் பேசுபடுபொருளாக அமைந்தன.

இலங்கையில் சீனாவின் நிதிப்பங்களிப்பில் உருவாகிய துறைமுக நகர விவகாரம் சூடுபிடித்துக் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில் சீனாவின் முக்கியஸ்தர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்தமை என்பது பலரது விமர்சனங்களுக்குள்ளானதுடன்,

இந்தியாவில் கொரோனா தீவிரமடைந்துள்ள இவ்வேளையில் அரசு சீனாவுடன் ஒட்டி செயற்படுவது இந்தியாவை வெறுப்பேற்றும் செயல் என எதிர்க்கட்சியினர் விமர்சனம் செய்யுமளவில் நிலை இருந்தது.

அதிலும் வெளிநாட்டு பிரதிநிதிகளைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குங்கள் எனக் கேட்டுக் கொண்டது முக்கிய விடயமாக அமைந்தது.

இந்தியாவை எதிர்க்கவும் அச்சுறுத்த சீனா இலங்கை யைப் பயன்படுத்துவதென்பது அரசியல் சார்ந்த விடயமாயினும் பெருந்தொற்றொன்று உலகை உலுக்கும் வேளையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இக்கொடிய வைரஸை ஒழிக்க திடசங்கற்பம் பூணவேண்டும்.

அதை விடுத்து மக்களாகிய நாமும் அரசும் பொறுப்பின்றி நடந்தால் அது மிகப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் அவ்வளவே.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளபதி 65 படத்தின் வில்லன் இவர்தானா?

மாஸ்டர் படத்தை தொடர்ந்து தற்போது தளபதி விஜய் தனது 65வது படத்தில் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.

மாஸ்டர் படத்தை தொடர்ந்து இப்படத்திற்கும் அனிருத் விஜய்க்கு இசையமைக்கிறார். இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு ஜோர்ஜியாவில் நடந்து முடிந்து, படக்குழு சமீபத்தில் சென்னைக்கு திரும்பினார்.

தளபதி 65 படத்தில் விஜய்யுடன் இணைந்து தெலுங்கு திரையுலகின் முன்னணி கதாநாயகி பூஜா ஹெக்டே நடித்து வருகிறார். இப்படத்தில் விஜய்க்கு வில்லனாக துப்பாக்கி படத்தில் நடித்து நடிகர் வித்யுத் ஜம்வால் நடிக்கிறார் என தகவல் கிசுகிசுக்கப்பட்டது.

இந்நிலையில் தளபதி 65 படத்தில் விஜய்க்கு வில்லனாக ஹிந்தி நடிகர் ஜான் ஆபிரகாம் நடிக்கவிருக்கிறார் என தற்போது மாசான தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து கூடிய விரைவில் அதிகாரபூர்வமான தகவல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 60 வயது நடிகருக்கு ஜோடியாக நடிக்கவிருக்கும் நடிகை ஸ்ருதி ஹாசன் - சம்மதம் தெரிவிப்பாரா?



தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் முன்னணி கதாநாயகிகளில் ஒருவராக வலம் வருபவர் நடிகை ஸ்ருதி ஹாசன் சமீபத்தில் தெலுங்கில் ரவி தேஜா மற்றும் இவரது நடிப்பில் வெளியான கிராக் எனும் திரைப்படம் சக்கப்போடு போட்டு வெற்றியடைந்தது. இதனை தொடர்ந்து தற்போது தமிழில் விஜய் சேதுபதி நடித்துள்ள லாபம் படத்திலும் கதாநாயகியாக ஸ்ருதி ஹாசன் நடித்துள்ளார். இந்நிலையில் தெலுங்கு திரையுலகின் மூத்த முன்னணி நடிகர் பாலகிருஷ்ணா நடிக்கவிருக்கும் அடுத்த படத்திற்கு நடிகை ஸ்ருதி ஹாசனை கதாநாயகியாக நடிக்க கேட்டு படக்குழு அணுகியுள்ளார்களாம்.

ஆனால் இதனை குறித்து இது வரை சம்மதம் தெரிவிக்காத நடிகை ஸ்ருதி ஹாசன், இதன்பின் என்ன தெரிவிப்பார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## ஹிந்தியில் ரீமேக் ஆகும் விக்ரம் வேதா - ஷோக் கொடுத்த அதிரடி விலகல்

புஷ்கர் - காயத்ரி இயக்கத்தில் மாதவன், விஜய் சேதுபதி நடிப்பில் 2017ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் 'விக்ரம் வேதா'.


ரசிகர்கள் மத்தியில் பிளாக் பஸ்டர் ஹிட்டான இப்படத்தை ஹிந்தியில் ரீமேக் செய்ய திட்டமிட்டனர். மாதவனாக சயீப் அலிகானும், விஜய் சேதுபதியாக அமீர் கானும் நடிப்பதாக இருந்தது.

பின்னர் அமீர் கான் இப்படத்திலிருந்து விலகினார். அவருக்கு பதிலாக ஹிருத்திக் ரோஷன் இப்படத்தில் விஜய் சேதுபதி கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமானார்.

ஆனால் தற்போது நடிகர் ஹிருத்திக் ரோஷன், கொரோனா பரவல் குறைந்ததும் தொடர்ந்து பைட்டர், கிரிஷ் 4 உள்ளிட்ட படங்களில் நடிக்க கால்ஷீட்டை ஒதுக்கியுள்ளார்.

## வடிவேலு நடிக்கவிருக்கும் புதிய படம் இது தானா?


First லுக்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடிகர் விவேக்கைத் தொடர்ந்து நகைச் சுவை நடிகர் பாண்டு மரணம் பற்றி?






முன்னைய அரசர்கள் கூட ஒரு துளி மழை நீரே னும் கடலில் சென்று வீணே கலந்து விடலா காது என கூறியுள்ளனர். இது தற் காலத்திற்கும் ஏற்புடையதாகி வருகிறதா வியாசரே?

**லயன் — வளலாய்**

**இந்தியாவை உலுக்கிய கும்பமேளாய் யாழை உலுக்குமோ நயினை வெசாக்?**

கொரோனவின் தாண்டவம் அதிகரித்துள்ள இந்த வேளையில் யாழில் மட்டுமல்ல வேறு எங்கேயும் இப்படியான கொண்டாட்டங் களைத் தவிர்ப்பது மிகமிக நல்லது.

இல்லை செய்துதான் ஆகுவோம் என அடம் பிடித்தால் அதன் விளைவு மிகமிக மோச மானதாக அமைந்துவிடும்.

**சாலினா**

**ஒருவருடன் நன்றாக பேசிப் பழகினால் அது மற்றவர்களுக்கு கோபம் வருவது ஏன் வியாசரே?**

எனக்குரித்தான பொருள் எனக்கு மட்டும் தான் இருக்கவேண்டும் என்று நினைப்பார் கள் போல.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**அரசியல் நிலவரம் - கொரோனா நிலவ ரம் இரண்டும் எப்படிப் போகிறது?**

இரண்டிலும் மழுப்பல்களும் மறைத்தல் களும் நடந்து கொண்டே இருக்கின்றன.

கொரோனா தீவிரமாகப் பரவுகிறது நாட்டை முடக்குங்கள் என பலர் கத்துகிறார்கள். நடக் கவில்லை.

சீனாவின் அழுங்குப் பிடிக்குள் இலங்கை. இப்போதைக்கு இதைத்தான் கூற முடியும்.

**பிரகாஷ் — நெல்லியடி**

**சமுதாயத்தைத் திருத்த வேண்டும் என் றால் என்னத்தைச் செய்ய வேண்டும்?**

உன்னை நீ திருத்திக் கொள். சமுதாயம் தானாகத் திருந்தும் என்பது பொன்மொழி.

என்னதான் இருந்தாலும் ஒருவன் தான் செய்யும் தவறை நியாயப்படுத்த அவனிடம் ஒரு வாதம் இருந்து கொண்டு தான் இருக் கும்.



அதுதான் மனித குணம். ஏதோ உழைத்து உண்டு வாழ்ந்தால் சரி என இருப்பது முறையாகாதே.

**தாரு — வதிரி**

**ஐ.பி.எல். போட்டிகள் நிறுத்தப்பட்டு விட் டனவே?**

மிகவும் பாதுகாப்பான பபுள் என்று சொல் லப்படுகின்ற பாதுகாப்பு வளையத்துக்குள் வீரர்கள், பயிற்சியாளர்கள் இருந்தும் வீரர் களுக்கு கொரோனா பரவியிருக்கிறது எனின் அது மிகமிக ஆபத்தான விடயமே.

உண்மையில் இந்தியாவில் ஐ.பி.எல். போட் டிகளை நடத்துவதைத் தவிர்த்து கடந்த வரு டம் போல சார்ஜாவில் நடத்தியிருந்தால் மிகவும் பாதுகாப்பாக இருந்திருக்கும்.

**தாரகன் — யாழ்ப்பாணம்**

**நடிகர் விவேக்கைத் தொடர்ந்து நகைச் சுவை நடிகர் பாண்டு மரணம் பற்றி?**

சினிமாவில் பல இழப்புகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

மிகவும் யதார்த்தமான நகைச்சுவை நடிகர் பாண்டு அ.தி.மு.கவின் தீவிர ஆதரவாளர், சிறந்த ஓவியர் அக்கட்சியின் இரட்டை இலைச் சின்னத்தை வரைந்தவரே பாண்டு என்பது பலருக்குத் தெரியாத விடயம்.

**சசி — நெல்லியடி**

**அரசியல் எனும் மாயையில் இருந்து விடுபட செய்திகளைப் படிக்காமல் விட லாமோ?**

தெரிவிப்பது நாங்கள், தீர்மானிப்பது நீங்கள். நாட்டு நடப்பு தெரியாமல் வெறும் கிணற்றுத் தவளையாய் வாழ்வதுதான் வாழ்க்கை என நீர் நினைத்தால் யாம் என்ன செய்ய முடியும் சொல்லுங்கள்.

**தேவமனோகர் — வடமராட்சி**

**தமிழுக்கு அமுதென்று பெயர் என்கி றார்கள். தமிழின் பெருமையை தமி ழன் மட்டும் கூறிப் பிரயோசனம் இல் லைத்தானே?**

யார் சொன்னது தமிழின் பெருமையயைத் தமி ழன் மட்டும் பேசிக் கொண்டிருக்கிறான் என.

சீனப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பிரிவு ஒன்றே உண்டு. ஜப்பானியப் பல்கலைக் கழக படிக்கட்டில் ஜப்பானிய மொழியிலும் தமிழ் மொழியிலும் எழுதப்பட்டிருந்த விட யம் ஒன்று, படிக்கட்டின் வலது பக்கமாகச் செல்லவும் என்பதே அந்த வாசகம்.

இப்படி தமிழின் பெருமைய உலகே கூறிக் கொண்டுதான் இருக்கிறது.

**விதுஷ் — மானிப்பாய்**

**கொரோனாவின் தாக்கம் மோசமாகி றதே வியாசரே?**

உண்மை ஆனால் அந்த உண்மையை யாரும் உணர்வதாகத் தெரியவில்லை.

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் கொரோ னாவினால் இறப்பவர்களை வீட்டின் பின் புறத்திலேயே வைத்து எரிக்கும் நிலை ஏற் பட்டுள்ளது என்பதை அறிந்தும் நாம் விழி த்துக் கொள்ளாமல் இருப்பது அவ்வளவு நல்லதல்ல.

ஏனென்றால் கொரோனாவின் தாக்கம் எங்க ளுக்கு மிகமிக அதிகம் என்பதுதான் உண் மையானது. நாம் ஒவ்வொருவரும் உணராத வரை எதுவும் சாத்தியப்படாது அவ்வளவு தான்.

**சுரேஷ்சன்ட் — பத்தமேனி**

**முன்னைய அரசர்கள் ஒரு துளி மழை நீரேனும் கடலில் சென்று வீணே கலந்து விடலாகாது என கூறியுள்ளனர். இது தற்காலத்திற்கும் ஏற்புடையதாகி வருகிறதா வியாசரே?**

ஓ... இப்போதும் கள்ள மணல் மாபியாக்கள் குழி தோண்டிக் கொண்டுதானே இருக்கிறார் கள்.

ஒரு துளி நீரையேனும் கடல் செல்ல விடமாட் டேன் என்றது அந்தக் கால அரசர்கள். ஒரு சிறு மணலையேனும் பூமியில் விடேன் விற்றுக் காசாக்கியே தீருவேன் என்கிறார்கள் மணல் மாபியாக்கள். அவர்களின் சமூக அக்கறையைப் பார்த்தீர்களா?

**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **021 567 1532** எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணின் சுதந்திரம்



பெண்ணிவள் சுதந்திரம் தான்
அவள் கையினிலே...
காற்றுக்குத்தான்
வேலியிட முடியுமா பெண்ணே
உலகம் சுற்றி வரும்
உன் சிந்தையைத்தான்
சிறையிட முடியுமா?
வாழ்வின் அழகினை
ரசித்திடும் உன் பூவிழி
பார்வைக்குத்தான்
திரையிட முடியுமா?
காவியங்கள் படைத்திடும்
உன் அறிவுக்குத்தான்
கடிவாளமிட முடியுமா?
தனக்கென எதிர்பார்த்திடா
உன் அன்பிற்குத்தான்
தடை போட முடியுமா? முடியாதென்பதையும்
முடித்திடமுடியும் என நம்பும் உன் தன்னம்பிக்கைதான்
உன் சுதந்திரம்... உன் சுதந்திரம்
உன் மனதோடு தான் என்றுமே
சுதந்திரப் பறவைதான் நீ

சி.திருமாலினி, சாவகச்சேரி

## வரலாறாகும்

மகிழ்ச்சி என்பது இந்தப் புறத்தில்
மருந்துக்கும் கூட இல்லை
அந்தப்புரத்து மனங்களிலோ
ஒரு சிறு நெகிழ்ச்சியும் காணவில்லை
வருமுன் காப்பது அருமுயற்சி
தவறின் பெரு நிலப்பரப்பும் கூட
பார்த்துக்கொண்டிருக்க
பறிபோகும் பின்பு
சிறு நிலப்பரப்புக்குள்ளே கிடந்து
சிக்கித் தவிப்போம் சிதிலமாவோம்
கற்பனையல்ல; இது கதையுமல்ல
கடந்து போனவை கற்றுத் தந்தவை
காட்டினிலே அரிமா வாழ
கடலினிலே சுறாமீன் ஆள
வல்லமை அறியா உயிர்கள் அவற்றின்
வாய்ப்பான இரையாய் மாறும்
வல்லதுவே வாழும் உலகில்; ஆதரவு
இல்லாதது அழிந்தே போகும்
ஆதிமுதல் வாழ்ந்து வந்தவரின்
நீதியான தீர்வும் அத்தோடு சாகும்
ஐந்தில் ஒன்றாயிருந்த சிறுபான்மை
பூமிப்பந்தின் திசையெல்லாம் சிதறிப்போனது
உலக்கை தேய்ந்தது; உளிப்பிடியானது
ஒற்றுமை என்பது காப்பதறியா
உலுத்தராலே எல்லாம் நேர்ந்தது
நீண்டகாலக் கயிறிழுப்பு- இன்னும்
நின்ற பாடாய்த் தெரியவில்லை
இந்த நிலையில்
ஒற்றுமை என்கிற ஒரே மந்திரம்
எமக்கு முன் உள்ள ஒரே மார்க்கம்
மந்திரம் மறந்தால் எமக்கு அந்தரம்
அந்தகார இருள் என்றும் நிரந்தரம்-அப்புறம்
காணாமல் போன டைட்டானிக் கப்பலை
கடலின் அடியில் மூழ்கி
வீணாகத் தேடுவது வரலாறாகும்

வாணியழகன்
முரசுமோட்டை, கிளிநொச்சி

## தாய்மையைப் போற்றிடுவோம்



அன்பியவள் அரவணைத்திடுவாள்
யார் சொல்லுக்கும் அஞ்சிடாதவள்
மாதவம் பெற்றே தாயாகினாள்
மிஞ்சி வரும் பண்டமே- தனக்கு
அமிழ்தம் என்று உண்டிடுவாள்
பாசத்தோடு ஓடினால்
பதறும் வேலையை கூட
பாதியிலேயே விட்டு
அணைத்திடுவாள்
முந்தானையைக் கொடுத்தே
முற்றத்தில் நிழலாக நிற்பாள்
தாய் இல்லையேல்
நமக்கு இந்த ஜனனமும் இல்லை


நிருஷினி ஆனந்தராஜன்
யா/ சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி

## தவிப்புடன்

கவிதை எழுதவில்லை கண்ணீரால் எழுதுகின்றேன்
கொரோனாவின் தாக்கத்தால்
அவள் வழிகள் அடைக்கப்பட்டன
தென்றலும் அவளைச் சுட்டன நிலவும் தணலானது
மலரும் நெருப்பானது
உறவுகளும் விலகிச் சென்றனர்

க.மலர், சிறுவர் இல்லம், திருநெல்வேலி

## மௌனத்தின் தேடல்-527



## பாதுகாப்புத் தேடி

இராணுவத்தின் விமானக்
குண்டுவீச்சிலிருந்து
தப்ப மண் மூடைகளால் போடப்பட்ட
அரணுக்குள் பாதுகாப்புத் தேடும்
இந்தப் பள்ளிச் சிறுவர்கள் உயிருக்கு
நம் நாட்டில் என்றும் உத்தரவாதமில்லை
தினமும் தம் உயிரைக் கையில்
பிடித்தபடி அச்சத்திலேயே
அவர்கள் வாழ்கிறார்கள்

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

## இதுவே இறை நீதி

குண்டுகள் பல போட்டு உயிர்களைப் பறித்தெடுத்து
பாடசாலை செல்லும் பாலகர்களைக் கூட
பதைபதைத்துப் பதுங்கிட வைத்தாயே அன்று
இன்று ஆயுதம் ஏதுமின்றி உன்னை வீட்டுக்குள்ளே
முடக்கிவைத்ததே வல்லமையுள்ள அங்கி
இதுவே இறை நீதி செயல் விளைவுத் தத்துவமிதுவே

த.காமினி, நாவலர் வீதி

## இயற்கையே

கண்களில் பீதி
உயிரைக் காத்திட
ஒதுங்கும் காட்சி
பிஞ்சுகள்
தாங்காப் போரில்
பெற்றோரும் பிரிந்த சோகம்
கருணையாய் கடவுள்
வந்து காக்கட்டும் இவ்வுயிரை
அதுவரை வலிமை தாரும்
இயற்கையே
இரங்கித் தாங்குமே

கார்வண்ணன்
காவலூர்

## புத்துலகம் பிறக்கட்டும்

போரில்லா நல்லுலகம்
புலரட்டும்
உலக சமாதானம்
உயிரனைத்தும்
உன்னதமாம்
எவ்வுயிரும் போக்குதற்கு
இன்னொருவர் காரணமா
போர் பகை கொலை களவு
குறை நீங்கி புத்துலகம்
பிறக்கட்டும் புரிவீரோ...

வைகதன்
கொக்குவில்

## மௌனத்தின் தேடல்- 528



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## இன்றைய உயிர்கொல்லி

விஞ்சிய விஞ்ஞானத்தின் விளைவால் மிஞ்சியது
விமானக் குண்டுவீச்சில் பலியான மக்கள் உடல்கள்!
எஞ்சி நிற்போர் பதுங்கு குழிகளில் என நிதர்சனக் காட்சி!
சொல்லாமல் சொல்லும் பல சாட்சிகளும்!
உயிர்கொல்லி கொரோனாவின்
வீச்சில் பலியான மக்கள் உடல்கள் தீக்குழிகளில்
செயற்கை விஞ்ஞானத்தாலும் வெல்ல முடியாது
இயற்கையின் மீட்பராகிய மீட்பரே வரவேண்டும்!

சி.சுகிர்தமலர், உரும்பிராய்


## எத்தனை காலங்கள்

உரிமையை வேண்டிய இவ்விரு தேசத்தில்
கல்வியைப் பெறவும் கஷ்டப்பட்டோம்
பள்ளிக்குச் செல்லும் வழிகளில் கூட
பங்கர்கள் உள்ளே வாழ்வினைக் காத்தோம்
வேதனை கொண்ட விழிகள் இன்றும்
பேதைகள் ஆகிக் கொதிப்பது ஏனோ?

ந.விதுஷன், கற்கோவளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தும் இரண்டாம் அலை



கொரோனாவின் கோரப்பிடியிலிருந்து மீண்டுவிட்டதாக நம்பி மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பத் தொடங்கிய சில மாதங்களுக்குள், கொரோனாவின் இரண்டாம் அலை பரவியுள்ளது. 2020 ஒக்டோபர் வரை கொரோனா வைரஸ் எவ்வளவு வேகமாகப் பரவியதோ, அதைவிட இப்போது மிக வேகமாகப் பரவிவருகிறது. அந்தக் காலகட்டத்தில், பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 10 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரமாக உயர 32 நாட்கள் தேவைப்பட்டன. ஆனால், இரண்டாவது அலைக் காலத்தில் 17 நாட்களில் இதே அளவை எட்டிப் பிடித்திருக்கிறது கொரோனா பரவல்.

இந்த ஆபத்தின் வீரியத்தை உணர்ந்து விரைந்து செயலாற்ற வேண்டிய அரசு, அரசு அமைப்புகள், முதல் அலையின் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்டதுபோல் தெரியவில்லை. நிலைமையின் தீவிரம் புரிந்த பின்னரும், தொடரும் அரசின் மெத்தனப் போக்கு கவலையளிக்கிறது.

முதல் அலை ஏற்பட்டபோது, பெரும்பாலான மாநிலங்களில் ஒரே மாதிரியான பாதிப்பு இருந்தது. இந்த முறை 8 மாநிலங்களில் மட்டும் 84 சதவீதம் தொற்று பதிவாகியிருக்கிறது. இந்தப் பட்டியலில் தமிழகமும் அடங்கும். தமிழகத்தில் நடைபெற உள்ள தேர்தலும் திருவிழா காலமும் நோய்ப் பரவலை மேலும் அதிகரிக்கும். வேற்றுருவ வைரஸ் பரவல், முந்தைய வைரஸ் பரவலைவிட அதிக வேகத்தில் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள். இந்தப் பின்னணியில்தான் பாடசாலைகள், கல்லூரிகள், திரையரங்குகள், வழிபாட்டுத் தலங்கள், மால்கள் உட்பட பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்களைத் திறக்க தமிழக அரசு அனுமதித்துள்ளது.

### அறிவியலைப் புறந்தள்ளுகிறதா அரசு?

கொரோனா பெருந்தொற்று போன்ற பேரிடராக உருவான காலத்தில், அதிலிருந்து மீள்வதற்கு உலக நாடுகள் அறிவியலையே துணைக்கு அழைத்தன. 2020 ஏப்ரல் 16இல், தமிழகத்தில் கொரோனா பாதிப்புக்குள்ளானோரின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் குறைவாக இருந்தபோது, இன்னும் ஒரு சில நாட்களில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை பூச்சியமாகிவிடும் என்று முதல்வர் தெரிவித்திருந்தார்.

ஆனால் அதன் பின்னர், அபாயகரமான அளவுக்கு கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இன்றைக்கு கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையில் 9 இலட்சத்தை நோக்கித் தமிழகம் நகர்ந்து கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு 2ஆயிரத்து 500 பேருக்கு மேல் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

அண்டை மாநிலமான கேரளம், இந்த நோயைக் கையாள்வதில் வெளிப்படைத் தன்மையுடன் அறிவியல் பூர்வமாகவும் அணுகுமுறையை வெளிப்படுத்தி, மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. தமிழக அரசு வெளிப்படைத் தன்மையுடனும் அறிவியல் பூர்வமாகவும் செயற்படவில்லை என்கிற குற்றச்சாட்டுத் தொடக்கத்திலிருந்து இருக்கிறது. இதனால் ஏற்பட்ட பாதிப்பு சரிசெய்ய முடியாத ஒன்றாகவே இன்றுவரை தொடர்கிறது.

### அரசின் மீதான விமர்சனங்கள்

கொரோனா பரவலின் தொடக்கக் காலத்தில், அதைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் முறையாகவும் விரைவாகவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எத்தனை பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களில் எத்தனை பேர் வீட்டுத் தனிமையில் இருக்கிறார்கள், எத்தனை பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்னும் அடிப்படைத் தகவல்களை உரிய முறையில் சேகரிக்க முடியவில்லை. இந்தக் குற்றச்சாட்டு எழுவதற்கு முக்கியக் காரணம் பெரும்பாலோர் பரிசோதனை மையங்களுக்கு வருவதையே தவிர்த்தது தான். கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு கரோனா நோயாளிகள் எண்ணிக்கையில் தேசிய அளவில் இரண்டாம் இடத்திலும், கொரோனா இறப்பு எண்ணிக்கையில் இந்திய அளவில் மூன்றாம் இடத்திலும் தமிழ்நாடு இருந்தது.

அந்தக் காலகட்டத்தில், கரோனா பரிசோதனைகளும் உரிய அளவில் மேற்கொள்ளப்படவில்லை. 2020 மார்ச் 7 அன்று, தமிழகத்தில் முதல் கரோனா தொற்று கண்டறியப்பட்டது. இருந்தும் 2020 மார்ச் 16 வரை தமிழகத்தில் 90 மாதிரிகளே பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. அதே காலகட்டத்தில், கேரளத்தில் ஆயிரத்து 500 மாதிரிகளும், கர்நாடகத்தில் 750 மாதிரிகளும் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. கொரோனாவைக் கட்டுப்படுத்த கேரளம் அறிவியல் பூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அதிக அளவிலான பரிசோதனைக்கு முக்கியத்துவம் அளித்தபோது, தமிழக அரசு கபசுரக் குடிநீரை வழங்கி, மக்கள் கவனத்தைத் திசைதிருப்பியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

### முரண்களும் முறைகேடுகளும்

கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறித்த அறிவிப்பிலிருந்த முரண்களும், கரோனா பரிசோதனை குறித்த முன்னுக்குப் பின் முரணான தகவல்களும், அரசின் மீதான மக்களின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குறியாக்கின. அந்தப் போக்கு தொடர்கிறது என்பதை, கொரோனா தடுப்பூசிக்கு மக்கள் காட்டும் தயக்கம் உணர்த்துகிறது. முதல் கட்டமாக முன்களப் பணியாளர்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டபோது, தேசிய அளவில் தடுப்பூசி போட்டுக்கொள்ள அதிகமானோர் முன்வராத மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாக இருந்தது. இப்போதும்கூட தமிழக கிராமப்புறங்களில் தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கு பெரும்பாலோர் முன்வருவதில்லை.

### அரசின் அலட்சியம்

கொரோனா பரவல் உச்சத்திலிருந்தபோது தீபாவளிப் பண்டிகையை ஒட்டி, பாடசாலை, கல்லூரி, திரையரங்குகளைத் திறப்பதற்கு அரசு அனுமதி அளித்தது. கொரோனாவைத் தொடக்கத்திலேயே கட்டுக்குள்கொண்டுவந்திருந்த கேரளம், ஓணம் கொண்டாட்டத்தின்போது கட்டுப்பாடுகளின் எல்லை மீறப்பட்டதால், புதிதாகப் பாதிப்புக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் தேசிய அளவில் முதலிடத்துக்கு வந்தது. தமிழக அரசு இதைக் கருத்தில் கொள்ளாமல், கல்லூரிகளையும் திரையரங்குகளையும் திறந்தது. ஏற்கனவே அச்சமின்றி, அலட்சியத்துடன் இருந்த மக்கள் வெளியே சுற்றிக்கொண்டிருந்த நிலையில் திரையரங்குகளைத் திறப்பது எத்தகைய ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையோ, கொரோனாவைக் கட்டுப்படுத்த பத்து மாதங்களாக எடுக்கப்பட்ட முயற்சிகளை நீர்த்துப்போக வைத்துவிடும் என்பதையோ அரசு கவனத்தில் கொள்ளவில்லை.

50 சதவீத இருக்கைகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலும், பெருவாரியான இடங்களில் இந்தக் கட்டுப்பாடுகள் பின்பற்றப்படவில்லை. அதை உறுதிசெய்ய வேண்டிய நிலையிலிருந்த அரசும், ரசிகர்களுக்கு அறிவுறுத்த வேண்டிய நிலையிலிருந்த திரைத்துறையினரும் மௌனமாக இருந்தனர். அதேபோல், தஞ்சை மாவட்டத்தில் 17 பாடசாலைகள், 6 உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளது மற்றொரு எடுத்துக்காட்டு.

### தலைவர்களின் அலட்சியம்

இன்னும் சில நாள்களில் தமிழ்நாட்டுக்குச் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறப்போகிறது. அதைப் பொறுப்புணர்வுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையத் துக்கும், அரசியல் கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் மட்டுமல்ல நமக்கும் உள்ளது. ஆனால், கொரோனாபெருந்தொற்றை எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் சமூகப் பொறுப்புணர்வு யாருக்காவது இருக்கிறதா என்கிற கேள்வியை, தேர்தல் பரப்புரைகளில் பெருந்திரளாகக் கூடும் கூட்டம் உறுதி செய்கிறது. வழிநடத்த வேண்டிய தலைவர்களே, திருத்தப்பட வேண்டிய நிலையிலிருக்கிறார்கள் என்பதை, முகக் கவசம் அணியாத அவர்களுடைய அலட்சியம் உணர்த்துகிறது.

அத்துடன் மதம், சடங்கு சார்ந்த நிகழ்வுகளில் பெருமளவு மக்கள் கூடுவதும் பேராபத்தே. வெளிநாட்டுப் பயணிகள், வெளி மாநிலப் பயணிகள் தமிழகம் வருவதற்குத் தடை இல்லாததால் பலரும் வருகிறார்கள். மாநிலத்துக்குள்ளும் எந்தக் கவலையும் இன்றி பொதுப் போக்குவரத்து வசதிகளில் மக்கள் பயணிப்பதும் கொரோனா பரவலுக்கு முக்கிய காரணமே.

### நமக்கும் பொறுப்பு உண்டு

கொரோனா பெருந்தொற்றுப் பரவலுக்கு அரசை மட்டும் முழுமையாகக் குறை கூறிவிட முடியாது. நமக்கும் பெரும்பங்கு உண்டு. முகக்கவசம், கைசுத்தம் பேணுதல், தனிமனித இடைவெளி, சமூக இடைவெளி ஆகியவற்றை முறையாகப் பின்பற்றி இருந்தால், கொரோனாவின் இரண்டாம் அலை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கச் சாத்தியமே இல்லை. அலட்சியம், பேராபத்தில் முடியும் என்பதை 2020ஆம் ஆண்டு நமக்கு உணர்த்தியுள்ளது. இனியாவது விழிப்புடன் இருக்க வேண்டும்.

கடந்த ஆண்டு முதல் அலை எழுந்தபோது, அதை எப்படி எதிர்கொள்வது என்ற புரிதலும் விழிப்புணர்வும் அரசுக்கு இல்லாமல் இருந்தது. அப்போது எந்தத் தடுப்பூசியும் கண்டுபிடிக்க பட்டிருக்கவில்லை. அந்த நிலை இன்றைக்கு மாறிவிட்டது. தமிழகத்தில் அடுத்து அமையப் போகும் மாநில அரசு கரோனா தொற்று சார்ந்த தவறுகளைச் சீரமைத்து, வெளிப்படைத் தன்மையுடன் செயலாற்றி, மக்களிடம் தடுப்பூசி குறித்த விழிப்புணர்வையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதே இரண்டாம் அலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முதல் படி. அரசின் முன்முனைப்புடன் மக்களின் முழுமையான ஒத்துழைப்பும் கூடினால், கொரோனாவின் எந்த அலையும் முடிவுக்கு வந்துவிடும்.

த இந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் பற்றி நீயறிவாயா?

மனிதனுக்கு நீர் எவ்வளவு முக்கியமானது என்பது உங்களுக்குத் தெரியும். அது நிறைவுறக் கிடைக்கும் போது, அதன் அவசியம் புரிவதில்லை. நீரே இல்லாது போனால்? அப்போது தான் தெரியும் நமக்கு. நீரின்றி அமையாது உணவு; நீரின்றி அமையாது உயிர்; நீரின்றி அமையாது உலகு. தாகம் தீர்க்க, குளிக்க, சுத்தம் செய்ய என்று அன்றாட தேவைக்கெல்லாம் நீர் தேவைப்படுகிறது.

நீரைத் தவிர தாகத்துக்கு வேறெதையும் நம்மால் குடிக்கக்கூட முடியாது. அப்படி வேறொன்றைக் குடித்தாலும்கூட அதில் மறைமுகமாக நீர் இருக்கும். உயிரினங்களைக் காப்பாற்றுவதற்கு, இயற்கையே உருவாக்கிக் கொடுத்திருக்கும் அதிசயம் அது.

பூமியில் 72 சதவிகிதம் இருப்பது நீர்தான். மனித உடலில் 60 சதவிகிதமாக இருப்பதும் அதுவே. நம் மூளையில் 73%, இதயத்தில் 72%, சுவாசப்பையில் 83%, தோலில் 64%, தசைகளில் 79% என எல்லாமே நீர்தான். எலும்பில்கூட 31 சதவிகிதம் நீர் இருக்கிறது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? நீங்கள் எவரைப் பார்த்தும் இந்தக் கேள்வியைக் கேட்டுப்பாருங்கள். "உன் உடம்பில் ஓடிக்கொண்டிருப்பது என்ன?" உடனே, "இரத்தம்!" என்று பதில் வரும்.

மனிதனின் உடலில் ஓடிக்கொண்டிருப்பது, நிஜத்தைச் சொன்னால் நீர்தான். மனித இரத்தத்தில் 85% அளவில் நீர் இருக்கிறது. வெறும் 15% இரத்த அணுக்களைக் கொண்டிருப்பதால், 'இரத்தம்' என்கிறோம். எஞ்சியிருக்கும் 85% நீரைப் பற்றி யாருக்கும் கவலையில்லை. போகட்டும். நீங்கள் மது அருந்துபவரா...? ஆமாம் என்றால் இதைத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் வாங்கும் மது போத்தல் ஒன்றைக் கையிலெடுத்து, அதில் எழுதியிருப்பதைப் படியுங்கள். அதில், அல்கஹோலின் சதவிகிதம் 35%-40% அளவுவரை இருக்கும். அதன் அர்த்தம், அல்கஹோல் போக எஞ்சியிருக்கும் 65% முதல் 60% வரை அந்தப் போத்தலில் இருப்பது நீர் மட்டும்தான்.

அந்த மதுவை, 1,000 ரூபாய் கொடுத்து நீங்கள் வாங்கியிருந்தால், அதில் 650 ரூபாயை நீருக்காகவே கொடுத்திருக்கிறீர்கள் என்பது உங்களுக்குப் புரிகிறதா...? அவ்வளவு விலையான தண்ணீர் நமக்கெதற்கு... என்ன யோசிக்கிறீர்கள்? இதை நான் நகைச்சுவையாகச் சொன்னாலும், இன்று நீரைப் பணம் கொடுத்து வாங்கும் நிலைக்கு நாம் வந்துவிட்டோம். இந்த அளவு மக்கள் தொகைப் பெருக்கத்திலும் அத்தனை பேருக்கும் நன்னீரை பூமி வைத்துக் கொண்டிருக்கிறது. அதைச் சரியான விதத்தில் பகிர்ந்தெடுத்தால், யாரும் எப்போதும் நீருக்காகக் கஷ்டப்படவே வேண்டியதில்லை.

அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் பிரமாண்டமான அளவு கொண்ட நன்னீர்நிலை, கடலடியிலேயே இருப்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். கார்ப்பரேட் முதலாளிகளுக்குப் பணம் கொடுக்கும், இணையத்தள வசதியை மேம்படுத்த வேண்டுமென்பதால், கடலடியினூடாகப் பாரிய குழாய்கள் மூலமாக, விரைவாகச் செய்திகளைக் கடத்தும் வயர்களை (Fiber Obtic Cables) அமெரிக்



காவிலிருந்து ஆசியாவரை உலகமெங்கும் அமைத்திருக்கிறார்கள். இதன் மூலம் 10 ட்ரில்லியன் டொலர் பணம், தினமும் வணிகப் பரிமாற்றமாக நிகழ்கிறது. அதுமட்டுமல்ல, ஒரு நாட்டிலிருந்து தொலைதூரமுள்ள வேறு நாடுகளுக்கு ஆழ்கடல் குழாய்கள் மூலம் பெற்றோலிய எரிபொருள்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

அதன் மூலமும் கோடி கோடியாக டொலர் பரிமாறப்படுகிறது. ஆனால், மனிதனுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் நீரை மட்டும் யாரும் இப்படிக் கொண்டு சென்று இலகுபடுத்துவதில்லை. மாறாக, ஒரு பகுதி கார்ப்பரேட் கம்பனிகள் (திட்டமிட்டே) தங்கள் கழிவுகளை நன்னீர் நிலைகளில் கலந்துவிட, இன்னுமொரு பகுதி கார்ப்பரேட்டுகள் குளிர்பானங்களுக்கு நிலத்தடி நீரைச் சுரண்டியெடுக்க, மற்றுமொரு பகுதி கார்ப்பரேட் கம்பனிகள் நன்னீரை போத்தல்களில் அடைத்து நமக்கே விற்பனை செய்கின்றன.

எல்லாமே திட்டமிட்டபடி நடப்பது போல. சரி இவற்றையெல்லாம் நாம் பேசப்போனால், அரசியலாகிவிடும். அது நம் நோக்கமுமில்லை. நம் வழியில் நாம் நகர்ந்துவிடலாம் வாருங்கள்.

பொருள்கள் **(Matter)** ஐந்து பிரதானமான நிலைகளைக் **(States)** கொண்டவை. அவற்றில் மூன்று நிலைகளை நாம் நன்கு அறிவோம். திண்மம், திரவம், வாயு என்பவையே அவை. அவை தாண்டி, மேலும் இரண்டு நிலைகளும் உண்டு. அந்த இரண்டைப் பற்றியும் இப்போது நாம் மறந்துவிடலாம். நமக்கு முக்கியமானவை, முதல் மூன்று நிலைகள் மட்டுமே. உலகிலுள்ள எந்தப் பொருளை நீங்கள் எடுத்துக்கொண்டாலும், அவை [illegible] மூலக்கூறுகளால் [illegible] அவையாகவே இருக்கும். ஒரு பொருளிலுள்ள மூலக்கூறுகள் அதிகமான இடைவெளியுடன், குறைந்த செறிவுடன் **(Dense)** இருந்தால், அது வாயு நிலையில் இருக்கும். அதன் மூலக்கூறுகள் சற்று நெருக்கமாக அடுக்கப்படும்போது, திரவ நிலைக்கு மாறும். மேலும் மூலக்கூறுகளுக்கிடையே இடைவெளி இல்லாமல், அதிகமான செறிவாகும்போது, அந்தப் பொருள் திண்மமாக மாறுகிறது. இவையெல்லாம் நீங்கள் எட்டாம் வகுப்பிலேயே படித்தவைதான். மூலக்கூறுகளின் செறிவு அதிகரிக்க, எடையும் அதிகரிக்கும். உதாரணத்துக்கு, தேங்காய் எண்ணெயை எடுத்துக்கொள்ளுங்கள். அதைக் குளிரூட்டியில் வைத்தால், திண்மமாக மாறத் தொடங்கும். அப்படி திடமான தேங்காய் எண்ணெய்க் கட்டியை எடுத்து, திரவமாக இருக்கும் தேங்காய் எண்ணெயில் இட்டீர்களாயின், திண்மக் கட்டி, அதனுள் அமிழ்ந்துவிடும். காரணம், தேங்காய் எண்ணெய், திரவமாக இருப்பதைவிடத் திண்மமாக இருக்கும்போது, அதிக எடை கொண்டதாக இருப்பதுதான். அதுபோலத்தான், பெரும்பாலான பதார்த்தங்களால் உருவான திண்மம், அதன் திரவத்தினுள் அமிழ்ந்து போகும்.

ஆனால், இந்தப் பொதுவிதிக்கு நீர் மட்டும் விதிவிலக்காக இருக்கிறது. நீருக்கு இந்தத் தன்மை எதிர்மாறாக அமைந்திருக்கிறது. அதுவே, உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளின் வாழ்வாதாரத்துக்கும் உதவியாகிறது.

நீரைக் குளிரவைத்து, அதன் மூலம் பெறப்படும் பனிக்கட்டிகளை **(Ice Cubes)** நீரினில் இட்டீர்களென்றால், அவை அமிழ்ந்து போக வேண்டும். ஆனால், அவை மிதக்கின்றன. திரவநிலையிலிருந்து இறுக்கமான பனிக்கட்டிகள் மட்டும் எப்படி நீரில் மிதக்கின்றன? இங்குதான் நீருக்கென அற்புதத் தன்மையை இயற்கை கொடுத்திருக்கிறது. அதன்மூலம், பிற உயிர்களும் காப்பாற்றப்படுகின்றன. நீர், திரவமாக இருந்து திண்மமாக மாறும்போது, நீர் மூலக்கூறுகள் **($H_2O$)** நெருக்கமாகி, இறுக்கமாகி எடை அதிகரிக்க வேண்டும்.

ஆனால், நீருக்கு மட்டும் அப்படி நடப்பதில்லை. நீர் மூலக்கூறுகளான **($H_2O$)**, நெருக்கமாக அடுக்கப்படும் போது, நீரில் இருப்பதைவிட மேலும் விலகியிருக்கும் நிலையிலேயே இறுக்கமடைகின்றன. அதனால், நீரிலிருக்கும் மூலக்கூறுகளைவிட, பனிக்கட்டியில் இருக்கும் மூலக்கூறுகள் குறைவாகின்றன. ஒரு கன அடி நீரில் இருக்கும் **$H_2O$** மூலக்கூறுகளைவிட, ஒரு கன அடி பனிக்கட்டியிலிருக்கும் **$H_2O$** மூலக்கூறு கள் குறைவானவை. இது நீருக்கு இருக்கும் அதிசயமான சிறப்புத் தன்மை. அதனால், பனிக்கட்டியின் எடை, நீரின் எடையைவிடக் குறைவாகிறது. எனவே, பனிக்கட்டி நீரில் மிதக்கிறது. "இதனால் உயிரினங்களுக்கு அப்படி என்ன நன்மை?" என்று தானே கேட்கிறீர்கள்.

ஏனைய பதார்த்தங்களைப்போல, நீரும் இருந்தால் என்ன நடந்திருக்கும் என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். குளிர்ப் பிரதேசங்களில் இருக்கும் நீர்நிலைகளின் நீரானது, கடுமையான குளிர்காலங்களில் பனிக்கட்டியாக மாறுகிறது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அந்தச் சம்பவங்கள் குளிர்ப் பிரதேசங்களில் மட்டுமே நடப்பதால், அவை பற்றி அதிகம் தெரியாமலும் இருக்கலாம். ஜேர்மனியிலுள்ள மிகப்பெரிய ஏரிகளும் குளங்களும் குளிர்காலங்களில் உறைந்து விடுகின்றன. கடல்கள்கூட அவ்வப்போது உறைகின்றன. அப்படியான சந்தர்ப்பங்களில், நீர்நிலைகளின் மேற்புறம் திடமான பனிக்கட்டியாகிவிடும். அதன் மேல் மனிதர்கள் நடந்து செல்வார்கள். சறுக்கி விளையாடுவார்கள். அந்த அளவுக்குப் பனிக்கட்டி தடித்த படலமாக உறைந்து திடமாகக் காணப்படும். ஆனால், உறைந்த பனியின் கீழ், நீர் அப்படியே இருக்கும். பனிக்கட்டியில் துளையிட்டு, அதனூடாகத் தூண்டிலைச் செலுத்தி, கீழேயுள்ள மீன்களைப் பிடித்து உண்பது சாதாரணமாக நடக்கும் செயல். ஏரிகளின் மேற்பரப்பில் பனிக்கட்டி உறைந்திருக்க, கீழ்ப் பகுதி நீரில் மீன்கள் வாழ்கின்றன. ஒருவேளை, ஏனைய பதார்த்தங்கள் போல நீர், பனிக்கட்டியாகத் திண்மமானதும், நீரினுள் அமிழ்ந்து போகுமானால், மேலே நீர் உறைந்து உறைந்து, அவை அடிமட்டம் நோக்கிச் செல்லும். மீண்டும் மேலேயுள்ள நீர் மேலும் உறையும். இப்படித் தொடர்ந்து நடைபெற்று வந்தால், ஏரி நீர் முழுவதும் பனிக்கட்டியாக உறைந்து விடும். அதனால், அந்த ஏரியில் எந்த உயிரினமும் வாழ முடியாத நிலை ஏற்படும்.

குளிர்காலம் ஒன்றில் நீர் நிலைகளிலுள்ள அனைத்து உயிரினங்களும் இறந்து போனால், அதன் பின்னர் அங்கு எந்த உயிரினமும் இருக்காது. அதன் பாதிப்பு ஏனைய உயிரினங்களையும் தொடரும். பூமியின் சமநிலையும் குலைக்கப்பட்டு, மொத்த உயிரினங்களும் அழிந்து போகும். இந்த ஒரே காரணத்தால், நீருக்கு மட்டும் உறையும் நிலைக்கான தன்மையை இயற்கை மாற்றியமைத்துக் கொடுத்திருக்கிறது. அதை இயற்கை என்று சொல்ல விருப்பமில்லை எனில், உங்கள் இறைவன் என்று நீங்கள் சொல்வதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையை விதைத்தவன்



"உங்களுக்கு ஒரு பையன் பொறந்திருக்கான்" என நிக்கை அவனுடைய தந்தையிடம் காட்டியபோது உள்ளுக்குள் குமட்டிக் கொண்டு வர், ஆஸ்பத்திரியை விட்டு வெளியே ஓடி வந்து வாந்தியெடுத்தார் தந்தை !

"இந்தாங்க உங்க பையன்" என தாயிடம் நீட்டியபோது "ஐயோ.. என் முன்னாலிருந்து கொண்டு போங்கள் " என நான்கு மாதங்கள் அவனைத் தொடாமலேயே அழுது தீர்த்தாள் தாய்.

நாளும் கிழமையும் எண்ணி எண்ணி ஆவலுடன் குழந்தையைக் கொஞ்ச காத்திருந்த அந்த பெற்றோருக்குப் பிறந்ததோ கைகளும் கால்களும் இல்லாத ஒரு குழந்தை! இரண்டு கைகளும், இரண்டு கால்களும் இல்லாத ஒருவனால் என்ன செய்ய முடியும் பிச்சை எடுப்பதைத் தவிர? என்று தானே நினைக்கத் தோன்றுகிறது? அந்தக் கவலை தான் அந்த அவுஸ்திரேலிய பெற்றோருக்கும் இருந்தது. ஒரு சின்ன குறை இருந்தாலே சமூகத்தில் தாக்குப் பிடிப்பது மிகவும் கடினம். கைகளும் இல்லாமல், கால்களும் இல்லாமல் இவனெல்லாம் என்ன வாழ்க்கை வாழப்போகிறான்? தொட்டதுக்கெல்லாம் யாரோ ஒருவருடைய உதவியில் தானே இவன் வாழ முடியும் என்பதே பெற்றோரின் தலையாய கவலையாய் ஆகிப் போனது. அன்றைக்கு அவர்களிடம் போய், "கவலைப் படாதீர்கள். உங்கள் மகன் ஒரு நாள் ஓடுவான், குதிப்பான், நீச்சலடிப்பான், கால்ஃப் விளையாடுவான், புட்போல் விளையாடுவான், கடலில் ஷர்ப் செய்வான் என்றெல்லாம் சொல்லியிருந்தால்" அன்றைக்கே ஒரு கொலை விழுந்தாலும் விழுந்திருக்கும். ஆனால் எல்லாமே ஒரு பரபரப்பான சினிமா போல நிஜமாகியிருக்கிறது இன்று.

தனது இருபத்து ஆறாவது வயதில், இன்றைக்கு மேலே சொன்ன எல்லாவற்றையும் செய்கிறார். கூடவே கோடானு கோடி மக்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் சின்னமாகவும் உருவெடுத்திருக்கிறார். இப்போது மிகவும் உற்சாகமாய் இருக்கும் நிக் கடந்து வந்த ஆரம்ப வாழ்க்கை ரொம்பவே கொடுமையானது. கைகளும் கால்களும் இல்லையென்றாலும் பெற்றோர் அவனை பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டார்கள். பள்ளிக்கூடத்துக்குச் சென்றால் பிள்ளைகள் நிக்கை நெருங்கி வரவே பயப்பட்டார்கள். ஏதோ ஏலியனைப் பார்ப்பது போலத் தான் நிக்கை பார்த்தார்கள்.

எல்லாரையும் போல சாதாரணமாய் வாழ முடியாத ஏக்கம் நிக்கிற்குள் தொன் கணக்காய் கனத்தது. மற்றவர்களின் கிண்டலும், கேலியும், அருவருப்புப் பார்வையும் நிக்கை நிலைகுலைய வைத்ததில் ஆச்சரியம் ஏதும் இல்லை. டீன் ஏஜ் வயது வரை நிக் செய்த பிரார்த்தனை என்ன தெரியுமா ? "கடவுளே தலைமுடி வளர்வது போல எனக்கு கைகளும் கால்களும் வளர வேண்டுமே" என்பது தான்.

அப்போதெல்லாம் தொட்டதுக்கெல்லாம் தற்கொலைச் சிந்தனைகள் வந்து கொண்டே இருந்தன. எப்படியாவது செத்துப் போகவேண்டும் என்று நினைத்தாலும் அதையும் தனியே செய்ய முடியாத நிலை. "கொஞ்சம் என்னைக் கொல்வீர்களா பிளீஸ்" என யாரிடமாவது கெஞ்ச வேண்டிய நிலையே நிக்கிற்கு.

அப்படியும் ஒருமுறை பாத்டப்பில் தண்ணீரை நிரப்பி மூழ்கிச் சாக முனைந்திருக்கிறார். இன்னொரு முறை கழுத்து உடையட்டும் செத்து விடலாம் என டேபிளில் இருந்து தலைகீழாய் குதித்திருக்கிறார். ! என்ன செய்ய? வாழவேண்டும் எனும் விதி அவருக்கு. எல்லா தற்கொலை முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்தன.

ஆரம்ப காலத்தில் நிக்கின் உருவத்தைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்த பெற்றோர் பின்னர் நிக்கிற்கு தன்னம்பிக்கையை ஊட்டத் தொடங்கினர்.

18 மாதமாக இருந்தபோதே நீச்சல் பழக்கத் தொடக்கிய தந்தை, ஆறு வயதாக இருக்கும் போது கம்ப்யூட்டர் கற்றுக் கொடுத்தார். தாய் பிளாஸ்டிக்கில் ஒரு வளையத்தைச் செய்து அதில் பென்சிலை மாட்டி எழுத கற்றுக் கொடுத்தார். இவையெல்லாம் தான் நிக்கிற்கு நிமிர்ந்து நிற்கும் தைரியத்தைக் கொடுத்தது.

நிக்கின் இடது கால் இருக்க வேண்டிய இடத்தில் ஆறாவது விரல் போல நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு பாகம் தான் அவனுடைய வரப்பிரசாதம்.

அதுதான் அவனுடைய கை, கால், துடுப்பு, எல்லாமே !. நடப்பது, எழுதுவது, நீந்துவது, விளையாடுவது என சர்வமும் அதன் வழியாகவே. இது மட்டும் இல்லாமலிருந்தால் நான் என்ன செய்திருப்பேனோ தெரியாது என சொல்லி சிரிக்கிறார் நிக்.

தனது பதின்மூன்றாவது வயதில் ஊனமுற்ற ஒருவரைப் பற்றிய வரலாறு ஒன்றை நிக் படித்தார். அதுதான் அவருடைய வாழ்க்கையையே புரட்டிப் போட்டது.

அந்த ஊனமுற்ற மனிதர் கழுத்தையும், நாடியையும் பயன்படுத்தி கால்ப் விளையாடியதைப் படித்தபோது நிக்கிற்குள் ஒரு மின்னல் அடித்தது.

"அடடா தேவையில்லாமல் தற்கொலை செய்யப் பார்த்தேனே" என தன்னையே நொந்து கொண்டவர், "நல்ல வேளை இதுவரை சாகவில்லை" என நினைத்துக் கொண்டு வாழ்க்கையை புதிய உத்வேகத்துடன் எதிர்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்.

அதுவரை கண்ணாடியைப் பார்க்கும் போது கைகளும், கால்களும் இல்லாத சதுர உடம்பு மட்டுமே தெரிந்த நிக்கிற்கு அதன் பின் தான் தனது அழகிய கண்கள் தெரிந்தன என சிலிர்ப்பூட்டும் நம்பிக்கை விதைக்கிறார்.

அதன் பிறகு கடவுளைப் பழிப்பது, சாக நினைப்பது, முனகுவது, அழுவது, கவலை கொள்வது என அனைத்து வேண்டாத விடயங்களையும் மூட்டை கட்டி தூர எறிந்து விட்டு உற்சாகமாகிவிட்டார் நிக். பிறருக்கு தன்னம்பிக்கையூட்டும் பேச்சுகளையும் மீட்டிங்குகளையும் நடத்தத் தொடங்கிவிட்டார்.


அப்படி ஆரம்பித்த அவரது தெம்பூட்டும் பணி, 24 நாடுகளுக்குப் பயணம் செய்து இலட்சக்கணக்கான மக்கள் கூட்டத்தில் உரையாற்றுமளவுக்கு பரந்து விரிந்திருப்பது வியக்க வைக்கிறது! தற்போது ஊனமுற்றவர்களுக்காக இயங்கும் "லைஃப் வித்தவுட் லிம்ப்ஸ்" எனும் நிறுவனத்தின் இயக்குநராகவும் இருக்கிறார் அவர்.

அவுஸ்திரேலியாவிலுள்ள மெல்பேர்னில் பிறந்த நிக் இப்போது வசிப்பது அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில். சோர்வுற்றும் சோகமுற்றும் இருப்பவர்களுக்கு இப்போது உற்சாக டொனிக் இவர் தான், இவருடைய பேச்சுகள் தான்.

ஐயோ அது இல்லையே, இது இல்லையே என புலம்பும் மக்கள் எதுவும் இல்லாமல் எல்லாம் இருப்பதை விட மகிழ்ச்சியாய் இருக்கும் நிக்கைப் பார்த்ததும் விளக்கைப் போட்ட இருட்டு அறைபோல சட்டென தெளிவாகி விடுகின்றனராம்.

"கைகள் இல்லை, கால்கள் இல்லை, கவலைகளும் இல்லை" என்று சிரிக்கும் நிக் உண்மையிலேயே இந்தப் பூமியில் வாழ்வதற்கு வழி தெரியாமல் நிற்போருக்கு சிறந்த முன்னுதாரணம்.

## ஏழையின் சிரிப்பில்...



சூடானில் ஒருவர் தன் மகன் திருமண விருந்துக்கு ஏழைகளை மட்டும் அழைத்தார்.
உணவு உண்பதற்கு அவர்களை அமரவைக்காமல் ஒவ்வொருவருக்கும் ஒரு தாம்பாளத் தட்டில் உணவு வழங்கி, அவரவர் வீடு சென்று குடும்பத்தினருடன் சேர்ந்து உண்ணுமாறு அனுப்பி வைத்தார்.
கொடையும் பண்பாடும் இன்றும் மரணிக்கவில்லை! என்பதை இந்த விடயம் காட்டி நிற்கிறதல்லவா?

## தமிழ்...தமிழ்...



ஒருவர் மளிகை கடையில் தமிழில் கொடுத்த லிஸ்ட்...
அதை படிக்கமுடியாமல்
கடைக்காரர் மயக்கம் போட்டு கீழே விழுந்து விட்டார்....
அப்படி அந்த லிஸ்ட்டில்
என்னதான் எழுதி இருந்தது???
இலை வடிநீர் தூள் (TEA POWDER)
உண்மை பிசுக்கோத்து (TRUE BISCUIT)
சத்தியம் பற்பசை (PROMISE TOOTH PASTE)
நடுப் புத்துணர்ச்சி மெல்லும் கோந்து (CENTER FRESH CHEWING GUM)
கௌரவ அழுத்த சமையல் வாயு வளையம் (PRESTIGE PRESSURE COOKER GASKET)
அனைவரும் தோற்று விட்டார்கள் திரவம் (ALL OUT LIQUID)
கணினி கரிப்புகை வில்லை (COMPUTER DHOOP STICK)
முடி சாயம் (HAIR DYE)
பூமி இனிப்பு உருண்டை கலவை (GLOBE JAMOON MIX)
தங்கம் வென்ற எண்ணெய் (GOLD WINNER OIL)
நம்ம பயலுக தமிழ் பற்று தாங்க முடியலப்பா..

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# தங்கக் கிரீடம் முள் சிம்மாசனம்

"அறிவாலயத்தைக்கூட கொரோனா சிகிச்சை மையமாக மாற்றுவேன்" - வெற்றிபெற்ற நாளில் தி.மு.க தலைவர் ஸ்ராலின் இப்படிச் சொல்ல, சுற்றி நின்றவர்களே திகைத்துப் போனார்கள். வாழ்த்து சொல்ல வந்த சுகாதாரத் துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணனிடம், கொரோனா பரவல் குறித்து ஸ்ராலின் விசாரித்ததே பெரிய ஆச்சரியம்.

பத்து வருடங்களுக்குப் பிறகு வெற்றிச் செய்தியைக் கேட்டவர், அந்த நிம்மதியைக்கூட அனுபவிக்காமல், கொரோனாவைக் கட்டுக்குள் கொண்டுவருவது எப்படி, தடுப்பூசி கையிருப்பு எவ்வளவு, மருத்துவமனைகளின் உண்மை நிலவரம் என்ன எனப் பலரிடமும் ஆலோசனை நடத்த, குடும்பத்தினரே அசந்து போனார்கள். "அரசுப்பள்ளிகள், கல்லூரிகள், தனியார் கல்வி நிறுவனங்களை கொரோனா சிகிச்சை மையங்களாக மாத்தணும். கொரோனா பாதித்தவர்களை ஆரம்பம், தீவிரம், அபாயம் என மூன்று வகைகளில் பிரித்து தங்க வைக்கணும். போதிய இடவசதி இல்லைன்னா நம்ம அறிவாலயத்தையே சிகிச்சை மையமா மாத்திடணும்" என ஸ்ராலின் சொல்லிக்கொண்டே போக... வெற்றிக்களிப்போடு வந்த நிர்வாகிகள் அப்படியே நின்றுவிட்டார்கள்.

சென்னை மேயராக, துணை முதல்வராக மிக முக்கியப் பொறுப்புகளில் அமர்ந்தபோதெல்லாம் ஸ்ராலினின் பணிகள் மிகத் தீவிரமானவை. தகுந்த அதிகாரிகளைக் கூடவே வைத்துக் கொண்டு எவரும் குற்றம் சொல்ல முடியாத அளவுக்கு இயங்கியவர் ஸ்ராலின். இன்று வழிகாட்டியாக மு.கருணாநிதி இல்லை. தட்டிக்கொடுக்க க.அன்பழகன் இல்லை. ஆனாலும், மொத்த பாரத்தையும் முதுகில் தாங்கி, மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறார் ஸ்ராலின்.

வெற்றிக் கிரீடம் ஸ்ராலினின் தலையை அலங்கரித்தாலும், மூட்டைப் பூச்சிகளும் முட்களும் நிரம்பிய சிம்மாசனம்தான் அவர் முன்னால் இருக்கிறது. பாத்திரத்தில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? வெறும் பாத்திரத்தை விட்டுச் சென்றிருப்பவர்கள், விமர்சிக்கவும் தயாராகக் காத்திருக்கிறார்கள். அந்த வகையில் ஸ்ராலினுக்கு மிகுந்த சவாலைக் கொடுத்திருக்கிறது இந்த வெற்றி. தேர்தல் களத்தில் வென்ற ஸ்ராலினுக்கு, ஆட்சிக் களத்தில் அடுக்கடுக்காக நெருக்கடிகள் காத்திருக்கின்றன என்பதே நிஜம்!

### மிரட்டும் கொரோனா!

முதற்கட்ட கொரோனா அலை ஓய்ந்து மக்கள் சகஜமான நிலையில் தேர்தல் களத்தில் நின்றார் ஸ்ராலின். அதனால்தான் 'கொரோனா பாதித்தவர்களுக்கு ரூபாய் 4,000' என வாக்குறுதி வழங்கினார். ஆனால், இன்றோ கொரோனாப் பரவல் தலைவிரித்தாடுகிறது. அரசு மருத்துவமனைகள் உரிய படுக்கைகளோ இடமோ இல்லாமல் நிரம்பி வழிகின்றன. தனியார் மருத்துவமனைகளைச் சாமானியர்களால் அணுகவே முடியவில்லை.

கொரோனாவைக் கட்டுப்படுத்த புதிய அரசு என்ன செய்யப்போகிறது? 'ஊரடங்கை அறிவித்தால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்', 'அறிவிக்காவிட்டால் கொரோனா பரவல் குலை நடுங்கவைக்கும்' என்கிற திக்கற்ற நிலை. 'மறுபடியும் ஊரடங்கு' என்பதை ஸ்ராலினும் விரும்பவில்லை. முதல்வராகப் பதவியேற்பதற்கு முன்னரே, 'ஊரடங்கு இல்லாமல் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த என்ன வழி?' என்றுதான் ஸ்ராலின் ஆலோசனை நடத்துகிறார்.

இந்த வேகமும் அக்கறையும் பாராட்டத்தக்கது. அதேநேரம் 'கொரோனா நிவாரணமாக 4ஆயிரம் ரூபாய்' என அவர் அறிவித்த வாக்குறுதியே அவருக்கு இப்போது சவாலாக நிற்கிறது. தமிழகத்தில் ஒரே நாளில் 25 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கொரோனாவில் பாதிக்கப்படுவதாகத் தகவல்கள் வருகின்றன. இனிவரும் நாட்களில் இந்த எண்ணிக்கை இன்னும் மிகுதியாக வாய்ப்பிருக்கிறது. போதிய நிதியும் இல்லாமல், மருந்துப் பற்றாக்குறையும் நிலவும் இந்த நெருக்கடியான நேரத்தில், நாற்காலியில் அமர்ந்து மூச்சுவிடக்கூட ஸ்ராலினுக்கு அவகாசம் இல்லை. அதிகாரிகளுடன் ஆலோசனை, மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை, மக்களுடன் கருத்துப் பரிமாற்றம் எனப் பலவித முயற்சிகளின் மூலமாகவே கொரோனாவைக் கட்டுக்குள் கொண்டு வருகிற திட்டத்தில் ஸ்ராலின் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

### காலியாகக் கிடக்கும் கஜானா!

"தமிழக நிர்வாகத்தையும், நிதியையும் அ.தி.மு.க அரசு நிர்மூலமாக்கி விட்டது. கடன் வாங்கிய தொகையில் மக்களுக்குப் பணி செய்யாமல் டெண்டர் விட்டு பினாமிகளை வளர்த்து விட்டிருக்கிறார்கள். இதுதான் எடப்பாடி பழனிச்சாமிக்குத் தெரிந்த நிதி நிர்வாகம்" - கடந்த பெப்வரி மாதம் சட்டமன்றக் கூட்டத்தைப் புறக்கணித்து துரைமுருகன் பேசிய வார்த்தைகள் இவை. இந்த அளவுக்கு ஈரல் கெட்டுப்போயிருக்கும் நிதி நிர்வாகத்தைத்தான் இப்போது ஸ்ராலின் சரி செய்ய வேண்டும். உண்மையில் வெற்றுப் பாத்திரத்தையே எடப்பாடி அரசு விட்டுச் சென்றிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு, 'இல்லத்தரசிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகை' என்கிற வாக்குறுதியை இந்த மாதத்திலிருந்தே வழங்க வேண்டிய இக்கட்டில் இருக்கிறார் ஸ்ராலின்.

நிதி விவகாரத்தில் இடியப்பச் சிக்கலை உருவாக்கிவிட்டே இறங்கியிருக்கிறது எடப்பாடி தரப்பு. இதைச் சரி செய்யவும் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கும் புதிய அரசு திண்டாட வேண்டியிருக்கும். தமிழக அரசின் ஆலோசகராக இருந்த சண்முகம் ஒருகாலத்தில் தி.மு.க-வுக்கும் நெருக்கமாக இருந்தவர்தான். அதனால், அவர் மூலமாகவே நிதிப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா என யோசிக்கிறார் ஸ்ராலின். 'ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரிகளை தனிக்குழுவாக நியமித்து வருவாயைப் பெருக்கவும், நிதிச் சிக்கலுக்குத் தீர்வுகாணவும் ஸ்ராலின் நினைப்பதாகச் சொல்கிறார்கள்.

### சவாலுக்குக் காத்திருக்கும் சட்டமன்றம்!

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகும் வலிமையான எதிர்க்கட்சியாக வந்திருக்கிறது அ.தி.மு.க. பெரும்பான்மை ஆளுங்கட்சி, வலிமையான எதிர்க்கட்சி, ஆளுமையான எம்.எல்.ஏ-க்கள், கூட்டணிக் கட்சிகள் எனச் சட்டமன்றமே இந்த முறை களைகட்டும். 'ஆளுங்கட்சி வைத்தது தான் சட்டம்' என்கிற முறையில் இப்போது செயற்பட முடியாது. "மிகச் சிறந்த தமிழகத்தை உருவாக்க தங்களது ஆலோசனையும் ஒத்துழைப்பும் தேவை" என எடப்பாடிக்கு டுவீட் செய்திருக்கிறார் ஸ்ராலின். சட்டமன்றத்தைச் சரியாக நடத்தவும் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு தேவை என்பதை ஸ்ராலின் உணர்ந்திருக்கிறார். அதேநேரம் கூட்டணிக் கட்சிகளைச் சமாளிப்பதும் அவருக்குக் குடைச்சலான வேலைதான்.

### வரிசையாகக் காத்திருக்கும் வாக்குறுதிகள்!

"உங்கள் குறைகளைச் சொல்லுங்கள். ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் நிவர்த்தி செய்வேன்" என வாக்குறுதி கொடுத்தார் ஸ்ராலின். 'புகார் பெட்டி' திட்டத்தில் நேரிலும் இணையத்திலும் கொடுக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 15 இலட்சத்துக்கும் மேல் எகிறிவிட்டது. "இதற்கு முன்னரே ஸ்ராலின் இதேபோல் இலட்சக்கணக்கான மனுக்களை வாங்கியிருக்கிறார். அவற்றில் எத்தனைக்குத் தீர்வு கொடுத்தார்? மற்ற வாக்குறுதிகளை நிறைவேற்ற காலம் எடுத்துக்கொண்டாலும் பெற்றோல், டீசல் விலையைக் குறைப்பதாகச் சொன்ன வாக்குறுதியை மக்கள் ரொம்பவே எதிர்பார்க்கிறார்கள். வென்று காட்டுங்கள் ஸ்ராலின்! கொரோனா பரவலால், கடன் நெருக்கடியால், நிர்வாகக் குழப்பங்களால் தத்தளிக்கும் தமிழகத்துக்குத்தான் ஸ்ராலின் முதல்வராகியிருக்கிறார். 'விதைத்தோம் அறுத்தோம்' என அவரால் அறுவடை பார்க்க முடியாது. தரிசாகக் கிடக்கும் நிலத்தை வெட்டிக் கொத்தி, சீராக்கி, அதன் பிறகே விதைக்கிற நிலை. முள் பாதையில் நடந்துதான் அவர் முன்னேற வேண்டும்.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## பரிசுகள் இருபது

காலத்தின் பதிவு 69



சாண்டில்யன்

இப்படிப் பலவிதமாகக் கட்டப்பட்ட கயிறுகளால் பலவிதமாக உடலைச் சிலுப்பியும் உலாவியும் கனைத்துக் கொண்டிருந்த குதிரைகள் மீது இடையே மரக்கிளைகளில் ஊடுருவி வந்த சந்திர வெளிச்சம் விழுந்திருந்ததால் புரவிகள் தெய்வலோகப் புரவிகளைப் போலக் காணப்பட்டன.

புரவிகளின் கவர்ச்சி, வீரரான அநபாயன் இதயத்தை வெகு வேகமாக அந்தப் புரவிகளை நோக்கி இழுக்கத் தொடங்கியது. அப்படி இழுத்ததன் விளைவாகப் பேருவகை கொண்ட அநபாயன் அத்தகைய புரவிகளைக் கொண்ட பீமனை அந்தச் சமயத்தில் மனத்துக்குள் பாராட்டவும் செய்தான். குதிரைகளுடன் உறவாட ஒரு மன்னன் தன்னந்தனியே திட்டி வாசல் வழியாக வருவானேன் என்று முதலில் எண்ணிய அந்தச் சோழர்குல இளவல், இத்தகைய புரவிகளுடன் விருதுகளில்லாமல், காவலர் பாதுகாப்பு இல்லாமல், தன்னந்தனியே இருப்பதைவிடச் சிறந்த இன்பம் வேறென்ன இருக்க முடியும்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அத்தகைய சிறந்த புரவிகளை உடைய பீமனிடம் பெரும் பொறாமையும் கொண்டான் அவன். அந்தப் பொறாமையுடன் அரச ரீதியான எண்ணமும் கலந்து கொண்டது அந்த வீரன் மனத்திலே. சோழ நாட்டுக்கும் வெளிநாட்டுப் புரவிகள் வரத்தான் செய்கின்றன. ஆனால் அவை சோழர் கீழுள்ள முசிறிப் பெருந்துறையில் இறக்கப்படுகின்றன. அங்கிருந்து வடநாட்டவரும் சேரரும் வாங்கியது போக மீதிக் குதிரைகளே சோழநாட்டுக்குக் கிடைக்கின்றன. முசிறிப் பெருந்துறைக்கு அடுத்தபடி பாலூரே பெரும் துறைமுகம். அரபு நாடுகளிலிருந்து வரும் பல்வகைப் புரவிகள் கடாரத்துக்கும் காம்போஜத்துக்கும் சீனத்துக்கும் போகின்றன.

ஆகவே இந்தப் பாலூர் பெருந்துறை மட்டும் சோழர் வசமிருந்தால் எத்தனை வகைப் புரவிகளை வாங்கலாம். எத்தனை தரமான வேகமான புரவிப் படையை அமைக்கலாம்! என்ற எண்ணம் துளித்தது அந்த வீரனின் சிந்தையில். 'ஏற்கனவே திறமைமிக்க யானைப் படையை உடைய சோழர்களிடம் சிறந்த புரவிப் படையும் பெருகி விட்டால் கலிங்கத்தை விழுங்குவதோ அந்தப் பீமனுக்குத் தகுந்த படிப்பினை அளிப்பதோ ஒரு பிரமாதமல்ல' என்று தனக்குத்தானே கனவு கண்ட அநபாயன் அங்கிருந்த புரவிகளின் மீது வைத்த கண்ணை வாங்காமலே நடந்து சென்றான்.

புரவிகளிடம் இருந்த அந்த வீரச் சிந்தனையில் கனவு கண்டு கொண்டே தான் தோப்பின் நடுவிடுதிக்கு வந்து விட்டதைக் கூட அறியாமல் விடுதியின் முகப்புக்கு வந்து ஏதோ பதுமைபோல் கதவைத் திறந்து கொண்டு வீட்டுக்குள்ளும் நுழைந்த பின்பு தான் அவன் சுரணையடைந்தான். "இவர்தான் என் நண்பர்" என்று அமீரின் வார்த்தைகள் பலமாக ஒலித்த பின்பே இக உலகத்துக்கு வந்த அநபாயன் தன் கண்களைத் தூக்கி எதிரேயிருந்த குதிரைச் சாலைத் தலைவனை ஏறெடுத்து நோக்கினான்.

கலிங்கத்து அரண்மனைக் குதிரைச் சாலைத் தலைவன் அமீரைப் போலவே அரபு நாட்டைச் சேர்ந்தவனென்பதைப் பார்த்தும் தெரிந்து கொண்ட அநபாயன், "சரியான நபரைத்தான் புரவிகளின் பாதுகாப்புக்குப் பீமன் பொறுக்கியிருக்கிறான்" என்று பீமனைக்கூட அந்தச் சமயத்தில் சிலாகித்தான். அமீரைவிட அதிக உயரம் பருமனுடனும் பெரிய தாடியுடனும் புஷ்டியான கன்னங்களுடனும் காணப்பட்ட அந்த அரபு நாட்டான் அநபாயர் தன்னை ஏறெடுத்துப் பார்த்ததுமே தலை வணங்கினான். அத்துடன் பணிவு பெரிதும் தொனித்த குரலில், "தாங்கள் யாரென்பது எனக்குத் தெரியும்" என்றும் கூறினான்.

அந்த அரபு நாட்டானை அது வரை பார்த்திராத அநபாயன், ஆச்சரியத்தில் திளைத்தான். "என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம், பார்த்திருக்க முடியாது" என்றும் கூறினான்.

"கேட்டிருக்கிறேன். கேட்டது பார்த்தது போல்தான்" என்றான் குதிரைச் சாலைத் தலைவன்.

அமீர் இடைபுகுந்து, "தலைவரே! எங்களுக்கு [illegible] இருபது புரவிகள் வேண்டும். அதுவும் கட்டுக்கடங்காத, அதிகமாக பழக்கப்படாத புரவிகள் வேண்டும்" என்றான்.

குதிரைச் சாலைத் தலைவனின் புருவங்கள் ஆச்சரியத்தால் மேலே முந்தன. "முரட்டுப் புரவிகளா வேண்டும்!" என்று அந்த ஆச்சரியம் முகத்தில் விரியவும் குரலில் தொனிக்கவும் கேட்டான்.

"ஆம்" என்றான் அமீர்.

"அதுவும் யாருக்கும் அடங்காமல் நாலா பக்கத்திலும் சிதறி வெகு வேகத்துடன் ஓடக்கூடிய புரவிகள் வேண்டுமென்பாய் போலிருக்கிறதே?" என்று ஏளனமாகக் கேட்டான் அரபு நாட்டான்.

"ஆம் அவைதான் வேண்டும்" என்று திட்டவட்டமாகப் பதில் சொன்னான் அமீர்.

குதிரைச் சாலைத் தலைவனின் முகத்திலிருந்த ஏளனக் குறி மறைந்து அது இருந்த இடத்தைப் பயத்தின் சாயை ஆட்கொண்டது. "அவற்றை அவிழ்த்து விட்டால் நேரக்கூடிய ஆபத்து என்னவென்று தெரியுமா?" என்று வினவினான் அந்த அரபு நாட்டான் குரலிலும் கிலியின் ஒலி பாய.

"தெரியும்" என்றான் அமீர்.

"ஆபத்தை எதற்காக விலைக்கு வாங்குகிறாய்?"

"தேவையாயிருக்கிறது." "ஆபத்து தேவையாயிருக்கிறதா?" "ஆம்!"

இதற்குப் பதில் என்ன சொல்வதென்று விளங்கவில்லை அந்தக் குதிரைச் சாலைத் தலைவனுக்கு. அமீரின் முகத்தை விட்டு அநபாயன் முகத்தை நோக்கி, "அமீர் சொன்னதைக் கேட்டீர்களா?" என்று வினவினான்.

"ஆகா! கேட்டேன்" என்றான் அநபாயன். அவன் குரலில் பெரு மகிழ்ச்சி ஒலித்தது.

அமீர் தன் கையிலிருந்த பொற்கழஞ்சுகளைக் கலகலவென்று அரபு நாட்டான் எதிரில் கொட்டினான். "இரண்டாயிரம் பொற்கழஞ்சுகள் இருக்கின்றன" என்று கணக்குச் சொல்லி, பொற்குவியலைச் சுட்டியும் காட்டினான். புரவிச் சாலைத் தலைவன் கண்கள் பிரமை பிடித்த வண்ணம் பொற்காசுக் குவியலை இமை கொட்டாமல் பல விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்தன.

அரண்மனைப் புரவிகளில் ஒன்றை அரசர் அனுமதியின்றி விற்பதே பெரும் குற்றம். அதற்கு மரண தண்டனை உண்டு. இருபது புரவிகளை விற்பது கனவிலும் நினைக்க முடியாத காரியம். அத்தகைய காரியத்துக்குத் தன்னைத் தூண்டிய இருவரையும் எதிரேயிருந்த பொற் குவியலையும் மாறி மாறிப் பார்த்த புரவிச் சாலைத் தலைவனின் முகம் பிரமையும் கிலியும் பிடித்துக் கலவரப்பட்டுக் கிடந்தது. அடுத்தபடி புரவிகளை விற்க அமீர் சொன்ன திட்டம் அவனைப் பைத்தியம் பிடிக்கும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது.

### இரவில் வந்த இருவர்

அரும்பாடுபட்டுப் பெரும் விலை கொடுத்துக் கலிங்கத்து மன்னனான பீமன் திரட்டி வைத்திருக்கும் இணையற்ற அரபுப் புரவிகளில் இருபதை விலைக்கு வாங்க வந்ததன்றி அவற்றுக்கான பொன்னையும் தன் முன்னர் கொட்டிக் குவித்த அமீரையும் அவனுடன் ஆஜானுபாகுவாய் நின்ற அநபாயனையும் குழப்பமும் திகிலும் கலந்த பார்வையுடன் நோக்கிய அரண்மனைக் குதிரைச் சாலைத் தலைவன் நீண்ட நேரம் பதில் சொல்ல வகையறியாது மிரண்டு விழித்துக்கொண்டு நின்றான். அமீர் தன் நாட்டவன் என்ற காரணத்தாலும் அத்துடன் தன் உயிர் நண்பனென்ற நினைப்பினாலும் அவனுக்கு எந்த உதவியும் செய்யத் தயாராயிருந்த குதிரைச் சாலைத் தலைவன், அமீர் கேட்ட உதவியால் தன் பதவி, உயிர் அத்தனையும் பறிபோய்விடும் என்பதை உணர்ந்ததன் விளைவாகப் பெரும் பிரமை பிடித்துப் பல நிமிடங்கள் குழம்பவே செய்தான்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பழநி
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : விஸ்வநாதன்–ராமமூர்த்தி
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



அண்ணன் என்னடா தம்பி என்னடா
அவசரமான உலகத்திலே
ஆசை கொள்வதில் அர்த்தம் என்னடா
காசில்லாதவன் குடும்பத்திலே

அண்ணன் என்னடா தம்பி என்னடா
அவசரமான உலகத்திலே
ஆசை கொள்வதில் அர்த்தம் என்னடா
காசில்லாதவன் குடும்பத்திலே

தாயும் பிள்ளையும் ஆனபோதிலும் வாயும்
வயிறும் வேறடா
சந்தைக் கூட்டத்தில் வந்த மந்தையில்
சொந்தம் என்பதும் ஏதடா

பெட்டைக் கோழிக்கு கட்டுச் சேவலை
கட்டி வைத்தவன் யாரடா
பெட்டைக் கோழிக்கு கட்டுச் சேவலை
கட்டி வைத்தவன் யாரடா
அவை எட்டுக் குஞ்சுகள் பெற்றெடுத்ததும்
சோறு போட்டவன் யாரடா

வளர்ந்த குஞ்சுகள் பிரிந்த போதும்
வருந்தவில்லையே தாயடா
மனித ஜாதியில் துயரம் யாவுமே
மனதினால் வந்த நோயடா
மனதினால் வந்த நோயடா

அண்ணன் என்னடா தம்பி என்னடா
அவசரமான உலகத்திலே
ஆசை கொள்வதில் அர்த்தம் என்னடா
காசில்லாதவன் குடும்பத்திலே

வாழும் நாளிலே கூட்டம் கூட்டமாய்
வந்து சேர்கிறார் பாரடா
ஆ..ஆ...ஆஆஆஆ..
வாழும் நாளிலே கூட்டம் கூட்டமாய்
வந்து சேர்கிறார் பாரடா
கை வறண்ட வீட்டிலே உடைந்த பானையை
மதித்து வந்தவர் யாரடா
மதித்து வந்தவர் யாரடா

பணத்தின் மீது தான் பக்தி என்றபின்
பந்தபாசமே ஏதடா
பதைக்கும் நெஞ்சினை அணைக்கும் யாவரும்
அண்ணன் தம்பிகள் தானடா
அண்ணன் தம்பிகள் தானடா

அண்ணன் என்னடா தம்பி என்னடா
அவசரமான உலகத்திலே
ஆசைக் கொள்வதில் அர்த்தம் என்னடா
காசில்லாதவன் குடும்பத்திலே..

# பிரதமரே உங்கள் கைகள் முழுக்க இரத்தம் வழிகிறது!

## விரக்தியில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்


அவுஸ் திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் தற்போதைய ஐ.பி.எல். தொடரில் வர்ணனையாளராகப் பணியாற்றியவருமான மைக்கேல் ஸ்லேட்டர் மீண்டும் நாடு திரும்ப முடியாமல் தவித்து வருகிறார்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் உச்சம் தொட்டிருக்கும் நிலையில், பயோபபுளுக்குள்ளேயே தொற்று பரவியதால் ஐ.பி.எல்.போட்டிகள் முழுவதுமாக நிறுத்தப்பட்டன. இந்த ஐ.பி.எல். போட்டிகள் ரேலியாவுக்குள் அனுமதிக்க முடியாது என நாட்டின் எல்லைகளை மூடியிருக்கிறார் அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசன்.

இதனால் ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட வந்த 40 இற்கும் மேற்பட்ட கிரிக்கெட் வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் வர்ணனையாளர்கள் நாடு திரும்ப முடியாமல் தவித்து வருகிறார்கள்.

கிரிக்கெட் வீரர்கள் தவிர 9000 அவுஸ்திரேலியர்கள் தற்போது இந்தியாவில் இருந்து எவ்வளவு தைரியம் இருந்தால் நீங்கள் எங்களை இப்படி நடத்துவீர்கள்? இந்தியா சென்று ஐ.பி.எல்.தொடரில் பங்கேற்க அவுஸ்திரேலிய அரசு அனுமதித்ததால்தான் நான் இங்கே வந்தேன். ஆனால், இப்போது நாடு திரும்ப முடியாதென்று எங்களைப் புறக்கணிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது. பணத்துக்காக நாங்கள் ஐ.பி. எல்.இற்கு சென்றதாக சிலர் விமர்சிக்கிறார்கள்.

இதுதான் என் வேலை. இந்த வேலையிருந்தால் தான்



நிறுத்தப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பாகவே ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சனலுக்காக வர்ணனையாளராகப் பணியாற்றிய மைக்கேல் ஸ்லேட்டர், திடீரென இந்தியாவில் இருந்து மாலை தீவுக்குப் பறந்தார்.

இந்தியாவில் தொற்று அதிகரித்ததால் பயோபபுளில் இருந்து வெளியேறி மாலைதீவுக்கு அவர் சென்று விட்டார் என சொல்லப்பட்டது. தற்போது ஸ்லேட்டர் மாலைதீவில் இருந்து மீண்டும் அவுஸ்திரேலியா செல்ல முடியாமல் தவித்து வருகிறார்.

இந்தியாவில் இருந்து வரும் யாரையும் அவுஸ்திரேலியா திரும்ப முடியாமல் இருக்கிறார்கள். மே 15 ஆம் திகதிவரை இந்தியாவில் இருந்து வரும் யாரும் அவுஸ்திரேலியாவுக்குள் நுழையக் கூடாது எனத் தடை போட்டிருக்கிறது அந்நாட்டு அரசு.

இந்நிலையில் மைக்கேல் ஸ்லேட்டர் டுவிட்டரில் தனது வேதனையைப் பகிர்ந்திருக்கிறார். "அவுஸ்திரேலிய அரசுக்கு தன் மக்களின் பாதுகாப்பு மீது அக்கறை இருந்தால் எங்களை நாடு திரும்ப அனுமதிக்கும். அரசு எங்களுக்கு செய்யும் மிகப் பெரிய அவமரியாதை இது. பிரதமரின் கைகளில் இரத்தக் கறை படிந்திருக்கிறது.

நான் என்னுடைய மூன்று குழந்தைகளின் கல்விக்குக் கட்டணம் செலுத்த முடியும். கடன்களை அடைக்க முடியும். என்னோடு விவாதிக்க உங்களை (பிரதமர் மாரிசன்) அழைக்கிறேன்" என மைக்கேல் ஸ்லேட்டர் டுவிட்டரில் எழுதியிருக்கிறார்.

அவுஸ்திரேலிய வீரர்களை தற்போதைக்கு மாலைதீவு அல்லது இலங்கையில் தங்க வைக்க பி.சி.சி.ஐ ஏற்பாடுகளை செய்து வருகிறது. ஐ.பி.எல். தொடரில் பங்கேற்ற இங்கிலாந்து வீரர்களில் பெரும்பாலானோர் இன்று காலை லண்டன் போய் சேர்ந்து விட்டனர்.



"எதுக்குய்யா பாலம் வந்ததும் தலைவர் கார்ல இருந்து இறங்கி ஆற்று வழியா நடந்து போறாரு?"
"அந்தப் பாலம் அவர் ஆட்சியில கட்டியதாம்"



"அமைச்சரே, என்ன இது.. திடீரென அண்டை நாட்டு அரசன் படையெடுத்து வருகிறான்?"
கொரோனாத் தொற்றை ஒழிக்க நம் மக்கள் தட்டைக் கரண்டியால் அடித்து ஓசை எழுப்பியதைப் போர் முரசு எனத் தவறாகப் புரிந்து கொண்டாராம் மன்னா"



"எதிரி நிலைமையை நினைத்துப் பார்த்தால் சிரிப்பு சிரிப்பாக வருகிறது அமைச்சரே!"
"ஏன் மன்னா?"
"நாம் சரணடையப் போவது தெரியாமல், முப்படைகளையும் தயார் நிலையில் வைத்திருக்கிறானாம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தங்க இறகு

பண்ணைபுரம் என்ற ஊரில் விவசாயி ஒருவன் இருந்தான். அவன் எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் அவனது வயலில் விளைச்சல் பெருகவே இல்லை.

"விவசாயி கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது" என்ற பழமொழிப் படி பல ஆண்டுகளாகப் பாடுபட்டும்கூட அவன் வறுமையிலேயே வாடிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் வயலில் ஏர் உழுது விட்டு வரும் போது தகதகவென ஜொலித்த பறவை ஒன்று அங்கிருந்த மரத்தில் அமர்ந்திருந்தது.

அதைப் பார்த்த விவசாயி, "இந்தப் பறவை நம் வயலைக் காக்கும் தேவதையாக இருக்கக் கூடும். இத்தனை நாள் நாம் இதை வணங்காமல் போனதால் தான் நம்முடைய வயலில் விளைச்சல் பெருகவில்லை. இன்று முதல் இதை நாம் வணங்குவோம்" என்று தீர்மானித்தான்.


"எனது வயலைக் காத்து வரும் தேவதையே! இவ்வளவு நாட்கள் உன்னைக் கவனிக்காமல் இருந்ததற்காக என்னை மன்னித்துவிடு. உனக்கு என் வீட்டில் இருந்து பழங்கள் எடுத்து வந்துள்ளேன். சாப்பிட்டு என்னை ஆசீர்வதிப்பாயாக" என்று கூறி பாத்திரத்தை வைத்து விட்டுச் சென்றான் விவசாயி.



மறுநாள் காலையில் வந்து பார்த்த போது பாத்திரத்தில் ஒரு தங்க இறகு இருந்தது. மகிழ்ச்சியுடன் அதை எடுத்துச் சென்றான் விவசாயி.

நாள்தோறும் மாலை வேளைகளில் விவசாயி பாத்திரத்தை வைத்துவிட்டு வருவான். (தொடரும்)

# மகாபாரதம்




பிற மன்னர்களின் உதவியைப் பெறுவதில் துரியோதனன் முனைப்புக் காட்டினான்.

கண்ணனைப் பார்க்க துவாரகைக்குச் சென்றான். அதே நேரம் அருச்சுனனும் சென்றான். அப்போது கண்ணன் உறங்கிக் கொண்டிருந்தார்.

கண்ணனின் தலைப் பக்கம் துரியோதனனும் கால் பக்கம் அருச்சுனனும் அமர்ந்திருந்தனர். கண்விழித்துப் பார்த்த பரமன் கண்களில் முதலில் அருச்சுனனே தென்பட்டான்.

அருச்சுனன் பரமனின் உதவியைக் கேட்டான். துரியோதனனும் அதேசமயம் கேட்டான். "நானே முதலில் வந்தேன்" என்றான் துரியோதனன்.

"ஆனால் நான் பார்த்தனைத்தான் முதலில் பார்த்தேன் என்றார் கண்ணன்.

ஆயினும் என் உதவி இருவருக்கும் உண்டு. என் உதவியை இரண்டாகப் பிரிக்கிறேன். ஆயுதம் இல்லா நான் ஒரு பங்கு. ஆயுதம் ஏந்தி கடும் போர் புரியும் அக்குரோணிப் படைகள் ஒரு பங்கு.

அருச்சுனன் இளையவனாக இருப்பதால் அவன் விரும்பியது போக எஞ்சியது உனக்கு" என்றார் கண்ணன்.

அருச்சுனன் கண்ணன் மட்டுமே போதும் என்றான். தனக்குக் கிடைத்த படைப் பெருக்கம் குறித்துப் பெரிதும் மகிழ்ந்தான். துரியோதனன்.


பின் பலராமரிடம் சென்று உதவி கோரினான் துரியோதனன். பலராமரோ "கண்ணனுக்கு எதிராக என்னால் செயற்பட முடியாது.

அதே சமயம் நான் பாண்டவர் பக்கம் போக மாட்டேன். நடுநிலைமை வகிப்பேன். போர் நடக்கையில் தீர்த்த யாத்திரை செல்வேன்" என்று கூறிவிட்டார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாபர் ஆசம் கிரிக்கெட் உலகின் புதிய சுப்பர் ஹீரோ!

“ஒப்பற்ற ஒருநாள் வீரரை ரன் மெஷினை, 21 ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த வீரரை முந்தியிருக்கிறார் பாபர் ஆசம். ஐ.பி.எல்.போட்டிகளை ஒத்தி வைத்து வைத்துவிட்டு, ஐ.பி.எல்.தொடரிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டவர்களை நாம் உற்றுநோக்க வேண்டிய நேரம் இது!”



அரசியல் வரைபடங்கள் போல் விளையாட்டு வரைபடங்களும் மாறிக்கொண்டே இருப்பவைதான். பொலிட்டிக்கல் மப்களில் இருந்து சோவியத் யூனியன் காணாமல் போனதுபோல், அவ்வப்போது ஒலிம்பிக் மப்களில் இருந்து சோவியத் தின் தங்கை ரஷ்யா காணாமல் போய் விடும். ஒவ்வொரு தசாப்தத்திலும் இதுபோன்ற மாற்றங்கள் விளையாட்டில் நடந்துகொண்டேதான் இருக்கும். கிரிக்கெட்டில் மட்டும் இம்மாற்றங்கள் அதிவேகமாக நிகழும்.

2003 உலகக் கோப்பை அரையிறுதிக்கு முன்னேறிய கென்யா, இன்றைய வரைபடத்தில் இல்லை. ஆப்கானிஸ்தான் புதிதாய் முளைத்திருக்கிறது. இலங்கை மெதுவாய் மறைந்துகொண்டிருக்கிறது. இந்தியர்களால் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நவீன வரைபடங்களில் பாகிஸ்தான் புறக்கணிக்கப்பட்டுக்கொண்டேதான் இருக்கிறது. பச்சை வண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக பழுப்பாகிக்கொண்டே இருந்தது.

இன்னும் சில ஆண்டுகளில் பாகிஸ்தான் இல்லாத கிரிக்கெட் வரைபடம் வெளியாகியிருக்கும். ஆனால், தரையும் நீரும், மழையும் காவியாய் மாறாமல் இருக்க, “இந்து” குஷ் மலைகள் மீதேறி பச்சைக் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டிருக்கிறார் பாபர் ஆசம்! இந்தத் தனி ஒருவன், வரலாற்றுப் பக்கங்களில் தன் பெயரை எழுதி, பாகிஸ்தானை வரலாறு ஆகாமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்!

20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தே சுப்பர் ஹீரோக்களாக இந்திய பட்ஸ்மன்கள் மட்டுமே விளங்கினார்கள். பொன்டிங், டி வில்லியர்ஸ், ஸ்டீவ் ஸ்மித் போன்றவர்கள் கொண்டாடப்பட்டாலும் அவர்கள் என்னவோ உப ஹீரோக்களாகவே கருதப்பட்டார்கள். சச்சினுக்குப் பிறகு டோனி, இப்போது கோலி என்று கிரிக்கெட் மாறவில்லை. மார்வெல் கூட கப்டன் மார்வெல், பிளாக் பாந்தர் என்று பரிணாமம் கண்டுவிட்டது. ஆனால், கிரிக்கெட் மாறவில்லை. இந்த ஆதிக்கத்தின் உச்சமாக ஒரு நாள் தரவரிசையில் 1258 நாட்கள் நம்பர் 1 இடத்தில் இருந்தார் விராட் கோலி. இப்போது கிங் கோலியை பின்னுக்குத்தள்ளி, அந்த சிம்மாசனத்தில் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருக்கிறார் பாகிஸ்தான் கப்டன்!

எண்களை வைத்துப் பேசுவோமா இல்லை எல்லையற்ற அவர் திறன் பற்றிப் பேசுவோமா. 80 போட்டிகளில் 30 **“50+ ஸ்கோர்கள்”**, சுமார் 56 என்ற சராசரி - நம்பர்கள் பொய் சொல்லாது என்று சொன்னால் இவர் விடயத்தில் உண்மைதான். எண்கள் கடந்து பேசினோம் என்றால், நிச்சயம் யாரும் மாற்றுக்கருத்து கொள்ள முடியாது. ஏனெனில், ஒப்பற்ற அழகியல் கொண்ட வீரர் அவர்.

எல்லோரும் விமானத்தில் பறப்பது தனி அனுபவம் என்பார்கள். ஒரு சிலர் கார் ஓட்டுவதிலேயே விமானத்தில் இருப்பதுபோன்ற அனுபவம் ஏற்படுத்துவார்கள். இவர் இரண்டாம் ரகம். தரை மார்க்கமாகத்தான் இவரது ஷொட்கள் இருக்கும். ஆனால், பந்துகள் என்னவோ காற்றில்தான் மிதந்து செல்லும். அப்படியொரு வித்தகர் அவர்.

கிரிக்கெட் நிபுணர்கள் உலகம் இவரை **“one of the best”** என்று ஏற்றுக்கொண்டு மூன்று வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அவரது கிளாசிக் கவர் டிரைவ்களையும் லேட் கட்களையும் அநாயச ஃபிளிக்குகளையும் உச்சி முகர்ந்து கொண்டாடி முடித்துவிட்டார்கள். ஆனால், மக்களின் நாயகனாக மாற மாஸாக ஒரு சம்பவம் செய்தாக வேண்டுமே.

இதோ இப்போது செய்துவிட்டார். ஒப்பற்ற ஒருநாள் வீரரை, ரன் மெஷினை, 21 ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த வீரரை முந்தியிருக்கிறார் ஆசம். ஐ.பி.எல்.போட்டிகளை ஒத்திவைத்துவைத்துவிட்டு, ஐ.பி.எல். தொடரிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டவர்களை நாம் உற்றுநோக்க வேண்டிய நேரம் இது!

போர்ட் குழப்பங்கள், சூதாட்ட சர்ச்சைகள், சீனியர்கள் ஓய்வு, தொடர்ந்து மாறும் பயிற்சியாளர் குழு என சோகங்களும் சோதனைகளும் நிகழ்ந்ததாகவே இருந்தது பாகிஸ்தான் கிரிக்கெட். ஐ.பி.எல்.தான் கிரிக்கெட் என்று மாறிவரும் காலகட்டத்தில் அந்தத் தொடரிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டார்கள் பாக்.வீரர்கள். சொந்த ஊரில், தாங்கள் எந்த மைதானங்களில் விளையாடவேண்டும் என்று அந்த வீரர்கள் கனவு கண்டிருப்பார்களோ அந்த மைதானங்களில்கூட ஆட முடியாத சூழ்நிலை. ஒட்டுமொத்த உலகமும் பாகிஸ்தான் மீது பாராமுகம் காட்டத் தொடங்கிவிட்டது.

கடந்த 20 ஆண்டுகளில் வெஸ்ட் இண்டீஸ் எனும் ஜாம்பவான் அடிபட்டு அலறிய கதை பார்த்துவிட்டோம். இலங்கை கத்துக்குட்டியாய் மாறும் படலமும் நம் முன்னே அரங்கேறிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், இத்தனை இன்னல்களை சந்திக்கும் பாகிஸ்தான் உலக அரங்கில் தாக்குப்பிடிக்க முடியுமா! கடினம். மிகவும் கடினம். ஆனால், தேசத்துக்கு வரும் தீங்குகளைத் தடுத்து நிறுத்தி, தன் வரலாறைத் தாங்கிப் பிடிப்பவன்தானே சுப்பர் ஹீரோ. பாபர் எனும் சுப்பர் ஹீரோ, பாகிஸ்தான் கிரிக்கெட்டைத் தூக்கிப் பிடித்திருக்கிறார்.

தன்னைச் சுற்றிலும் கன்சிஸ்டென்ஸி இல்லாத வீரர்கள். நிரந்தரம் இல்லாத மனேஜ்மன்ட். ஆனால், எதுவும் இவரைத் தடுக்கவில்லை. ஒவ்வொரு அணிக்கு எதிராகவும் ஒவ்வொரு கண்டத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மைதானத்திலும் தன் கிளாஸ் ஆட்டத்தால் பாகிஸ்தானை மீட்டுக்கொண்டிருந்தார். வெறும் கையில் சண்டை செய்தவனுக்கு உடை வாளைக் கொடுத்தது பாகிஸ்தான். கப்டன் ஆன கையோடு, ஒவ்வொரு போட்டியிலும் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கிவிட்டார்.

உலகின் நம்பர் 1 ஒருநாள் வீரராக புதன்கிழமை மதியம் அறிவிக்கப்படுகிறார் அவர். மகத்தான சாதனை செய்ததால் ஓய்ந்திருக்கலாம். சற்று ஆசுவாசப்பட்டிருக்கலாம். ஆனால், அவர் ஓயவில்லை. தான் இந்தியர் இல்லை. என்னதான் மாஸான சம்பவம் செய்தாலும், விரைவில் மக்கள் மறந்துவிடக் கூடும். அதனால் அன்று இரவே இன்னும் பெரிதாக ஒரு சம்பவம் செய்கிறார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபது-20 போட்டியில் 204 ரன்களை சேஸ் செய்கிறது பாகிஸ்தான். ஐம்பத்து ஒன்பதே பந்துகளில் 122 ரன்கள் எடுத்து மெர்சல் காட்டினார். பாகிஸ்தானை வெற்றி பெறவைத்தார். கிரிக்கெட் வரைபடத்தில் பாகிஸ்தான் ஒதுக்கப்படாமல் இருக்க, தனி ஆளாக சண்டை செய்துகொண்டிருக்கிறார் இந்த 26 வயது இளைஞர். அதில் ஜெயித்துக்கொண்டும் இருக்கிறார்.

இவருக்குப் பெயர் வைத்தவர் நிச்சயம் தீர்க்கதரிசியாகத்தான் இருக்க வேண்டும். இவர் என்னவாக உருவாகவேண்டும், எப்படி அறியப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டு, அனுமானித்துப் பெயர் வைத்திருக்கிறார்கள் - பாபர்.... “ஆசம்”!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிச்சென் இட்சா (மெக்சிக்கோ)

(கடந்த வார தொடர்ச்சி...)

1221 இல் நடந்த உள்நாட்டுப் போர் காரணமாக அழிபாடுகள் அதிகமாயின. 1531 இல் ஸ்பானிஷ் மன்னன் பிரான்ஸிஸ்கோ மாண்டேஜோ படையெடுத்து வந்து சிச்சென் இட்சாவைக் கைப்பற்றி தனது தலைநகராக அறிவித்தான். அவனது காலத்தில் சிச்சென் இட்சா புத்துயிர் பெற்றது எனலாம்.



எல் காஸிலோவுக்கு அருகே எல் காரக்கல் என்கிற வானிலை ஆய்வு மையத்தை அமைத்திருந்தனர். காரக்கல் என்றால் ஸ்பானிஷ் மொழியில் நத்தை என்று பொருள்.

நத்தை ஓட்டின் வடிவத்தில் அந்தக் கட்டடத்தை வடிவமைத்து இருந்ததுதான் அந்தப் பெயர். பிரமிடுகளின் அருகே முர்ரே எனப்படும் இறந்தவர்களின் நினைவு மண்டபங்கள் டால்டெக் பாயிணில் அமைக்கப்பட்டிருந்தன.

மாயன்களின் கலாசாரம், கலைத்திறன், கட்டடங்களின் நுணுக்கங்கள் ஆகியவற்றின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட எட்வர்ட் ஹெர்பர்ட் தாம்ஸன் என்னும் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்தவர் தனது தனிப்பட்ட முயற்சியால் சிச்சென் இட்சா பகுதியில் தனது ஆய்வுப் பணியைத் தொடங்கினார். 1904 முதல் 1910 வரை நீடித்த அவரது ஆராய்ச்சியில்தான் மாயன்கள் பற்றிய பல்வேறு செய்திகள் தெரியவந்தன.

ஆனால் சில சமூக விரோதக் கும்பல் தங்களின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு அவரது ஆராய்ச்சிப்பணி இடையூறாக இருப்பதாகக் கருதி அவரது இல்லத்தைத் தீயிட்டுக்கொளுத்தினர். அதில் அவரது பல அபூர்வமான ஆய்வுக்குறிப்புகள் எரிந்து போயின.

இருப்பினும் வேறொரு இடத்துக்குத் தனது உடைமைகளை மாற்றிக்கொண்டு தனது ஆய்வுப் பணியைத் தளராமல் தொடர்ந்தார். மீண்டும் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அவரது ஆய்வுப் பணிக்குத் தடை உத்தரவு பெற்றனர். தாம்ஸன் நீதிமன்றத்தை நாடி அந்தத் தடையை விலக்கச் செய்தார்.

தாம்ஸன்தான் முதன்முதலாக சிச்சென் இட்சாவிலுள்ள புனிதக் கிணற்றில் ஆய்வுக்காக துணிச்சலாகக் குதித்தவர். உள்ளே என்ன விதமான விஷ ஜந்துக்கள் இருந்தன. அபாயகரமான பாறைகள் இருந்தன என்பது பற்றி எல்லாம் கவலைப்படாமல் நீந்தி பல ஆதாரங்களை எடுத்து வந்தார்.

அவரது ஆய்வில் கிடைத்த பொருட்கள் யாவும் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

1961 இல் மெக்சிக்கோவின் அதிகாரபூர்வ ஆராய்ச்சியாளர் வில்லியம் போலன் மேற்கொண்ட ஆய்வில் பல்வேறு புதிய செய்திகள் கிடைத்தன. குறிப்பாக சாக்மோல் எனப்படும் மாயன்களின் மழைக் கடவுளின் சிலை ஒன்றும் பெண் சிங்க உருவச்சிலையும் கிடைத்தன.

மாயன்களைப் பற்றிய ஆய்வுகள் தொல்பொருள் ஆய்வாளர்களுக்குத் தோண்டத் தோண்ட இன்னமும் தீராத பொக்கிஷமாக இருந்து வருகின்றன.

மொழி, கலாசாரம், வானியல் திறன், கணித அறிவு, சிற்பக்கலை, ஆன்மீக வழிபாடுகள் ஆகியன பண்டைய தமிழர்களின் வாழ்நிலையோடு பலவிதங்களில் ஒத்துப்போவதை மாயன்களைப்பற்றிய ஆய்வில் அறியமுடியும்.

துரதிர்ஷ்டவசமாக ஒற்றுமையின்மையால் தங்கள் இனம் அழிவதை வேடிக்கை பார்ப்பதிலும் தமிழர்களோடு ஒத்துப்போவதை வேதனையோடு உணரமுடிகிறது.

(முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2308

### சுமதி

பதிலுக்கு பதில் பேசுபவர்கள் அறிவாளிகளும் அல்ல. மௌனமாய் விலகி நிற்பவர்கள் முட்டாளும் அல்ல.



### லவன்

பேருந்தில் அழகான பெண்கள் அருகில் அமரும்போது ராமபிரானே மறுபிறவி எடுத்து வந்த மாதிரி ஆண்கள் காட்டும் அடக்க ஒடுக்கம்...!



### தனஞ்சயன்

உயிரோட இருக்கும்போது யாரைவேணாலும் லவ் பண்ணி கல்யாணம் பண்ணிருக்கலாம்.



ஆனா உயிர் போன பின்னாடி, உங்க ஆத்மா அடையப்போறது "சாந்தி" யைத் தான்...

### மணியம்

ஓடி ஓடி உதவி செய்யும்
வரைதான்
அனைவராலும்
மதிக்கப்படுவாய்.
ஒருமுறை மறுத்துப்பார்
அடுத்த
நொடியே அடியோடு
வெறுக்கப்படுவாய்.

### சரஸ்வதி



தேடிப் போய் பேசுவது தவறல்ல...
ஆனால் நம்மைத் தேடி வராதவர்களிடம்
தேடிப் போய் பேசுவது தான் தவறு...

### கலா

சில நேரங்களில்
பின்வைத்த காலும் வெற்றி தரும்.



உண்மைதான்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 252

# கொரோனா தடுப்பூசியால் மாரடைப்பு ஏற்படுமா?

கொவிட்-19 என்று சொல்லப்படும் கொரோனா வைரஸ்க்கான தடுப்பூசியை போட்டுக்கொள்ளும் பொழுது மாரடைப்பு ஏற்படும் ஆபத்து அதிகமாக இருக்கின்றதா? என்ற கேள்வி பொதுவாக அண்மைக் காலங்களில் கேட்கப்பட்டு வருகின்றது.

அண்மையிலே நடிகர் விவேக்கின் மரணம் தான் இதற்கு காரணம். எனவே இது சம்பந்தமான தெளிவும் புரிதலும் அனைவருக்கும் பயனுடையதாக அமையும். மாரடைப்பும் திடீர் மரணமும், இதயத்துக்கான இரத்தக் குழாயில் கொலஸ்ரோல் படிவு திடீரென்று தோற்றம் பெற்று அது முழு இரத்தக் குழாயையும் அடைப்பதால் ஏற்படுவது என்று நாம் கருதிவிட முடியாது.


அது தவறான கருத்து. அதேவேளை ஆரோக்கியமாக இருக்கும் இருதயத்துக்கான இரத்தக் குழாயில் திடீரென ஒரு இரத்தக் கட்டி தோற்றம் பெற்று இந்த இரத்தக் குழாய் அடைப்பதால் மாரடைப்பு ஏற்படுகின்றது என்ற கருதுகோளும் தவறானது.

உண்மையிலேயே சடுதியாக மாரடைப்பு ஏற்படுவதற்கான காரணம் இந்த atherosclerotie plaque என்று சொல்லப்படுகின்ற கொலஸ்ரோல் படிவத்திலே ஏற்படும் வெடிப்பும். அத்துடன் அதனை சுற்றி ஏற்படும் இரத்தக் கட்டிகளுமே காரணமாக அமைகின்றன. இந்த வெடிப்பை தூண்டும் காரணிகள் பல. வேகமாக வளர்ந்து வரும் கொலஸ்ரோல் படிவிலும் இந்த வெடிப்பு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக இந்த atherosclerotie plaque என்று சொல்லப்படுகின்ற இந்த கொலஸ்ரோல் படிவத்திலே Inflammation என்று சொல்லப்படுகின்ற ஒரு அழர்ச்சி ஏற்பட்டால் அந்தப் படிவத்திலே வெடிப்பு ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாகும்.

உதாரணமாக வைரஸ் தொற்றுகை அல்லது வேறு கிருமித் தொற்றுகையினால் உடலிலே ஏற்படும் ஒரு அழாச்சி, அதனை தொடர்ந்து இந்த கொலஸ்ரோல் படிவத்திலே ஏற்படுகின்ற அழர்ச்சி இதுவே கொலஸ்ரோல் படிவத்தில் வெடிப்பை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றது.

இது ஆராய்ச்சி மூலமும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கடுமையான காய்ச்சல் நிலை கிருமி தொற்றினால் ஏற்பட்டாலும் சரி அல்லது வேறு காரணங்களால் ஏற்பட்டாலும் சரி அல்லது ஒரு தடுப்பூசியை பெற்றுக் கொள்ளும் போது ஏற்படும் காய்ச்சலாக இருந்தாலும் சரி இந்த atherosclerotie plaque என்று சொல் லப்படுகின்ற இந்தக் கொலஸ்ரோல் படிவத்திலே வெடிப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கும். அத்துடன் சில வகையான கொவிட் வைரஸ்க்கு எதிரான இந்த தடுப்பூசிகளை பாவிக்கும் போது குருதி உறையும் தன்மை அதிகமாகும் நிலை காணப்படுவதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.



எத்தனை வீதமானோருக்கு இந்த குருதி உறையும் தன்மை ஏற்படுகிறது என்று இன்னும் துல்லியமாக கணிக்கப்படவில்லை. ஆனால் இந்த குருதி உறைதல் அதிகரிக்கும் விகிதம் மிகவும் குறைவானது.

உதாரணமாக கர்ப்பத்தடை மாத்திரகளை பாவிக்கும் போது. ஒரு விமானத்திலே பயணம் செய்யும் போது. ஒருவர் காயப்பட்டிருக்கும் போது, சத்திரசிகிச்சைக்கு பின்னரான போது ஏற்படும் குருதி உறைதல் அதிகரிப்பு வீதமானது தடுப்பூசியின் பின்னர் ஏற்படும் குருதி உறைதல் அதிகரிப்பு வீதத்தை விட மிகமிகக் குறைவானது.

உதாரணமாக சொல்வதாக இருந்தால் எமது பகுதியிலே அனைத்து மருத்து வத்துறை சார்ந்தவருக்கும் இந்த தடுப்பூசி ஏற்பட்டிருக்கின்றது.

எவருக்கும் இந்த குருதி உறைதல் சம்பந்தமான ஒரு நிலை, ஒரு பிரச்சினை எழவில்லை. அதேசமயம் இருதயத்துக்கான இரத்தக் குழாய்களிலே atherosclerotie plaque எனப்படும் கொலஸ்ரோல் படிவுள்ளவர்களுக்கு கொவிட்-19 தொற்று ஏற்பட்டால் அவர்களுக்கு இந்த படிவத்திலே வெடிப்பு ஏற்படும் சந்தர்ப்பம் குறிப்பிடத்தக்களவு அதிகமாகும்.

அத்துடன் இவர்களுக்கு வேறு இருதயம் சம்பந்தமான பிரச்சினைகளும் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாகும். எனவே தடுப்பூசி ஏற்றிக் கொள்ளும் போது ஏற்படும் பிரச்சினை வீதத்திலும் பார்க்க தடுப்பூசியை போடாமல் விட்டு அதன் காரணமாக அவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டு அதனால் ஏற்படும் பிரச்சினை வீதம் மிகவும் அதிக மாக இருக்கும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனை சுருக்கமாக சொல்வதாக இருந்தால் இந்த கொவிட் வைரஸ்க்கு எதிரான தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளும்போது சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

அந்தப் பிரச்சினைகள் ஏற்படும் வீதம் மிகமிகக் குறைவாகும். ஆனால் இந்த தடுப்பூசியைப் போடாமல் விட்டு அதன் காரணமாக அவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டால் ஏற்படும் பிரச்சினை வீதம் ஒப்பீட்டளவில் மிகமிக அதிகமா கும்.

எனவே நாம் இந்த கொவிட் ரைஸ்க்கு எதிரான தடுப்பூசிகளை எந்த ஒரு தயக்கமும் இன்றி பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் இந்த தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்வதுடன் இந்த கொலஸ்ரோல் படிவங்களில் வெடிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களை குறைத்துக் கொள்வதற்காக பல நடைமுறைகளைக் கையாள முடியும்.

1. எமது குருதி அமுக்கத்தை கட்டுப்பாடாக வைத்திருப் பது.

2. எமது குருதி குளுக்கோஸ் அல்லது டயபேட்டில் நிலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது.

3. ஒழுங்காக உடல் பயிற்சி செய்வது. எமது உடல் நிறையையும் சரியான அளவில் பேணிக்கொள்வது போன்ற நடவடிக்கை மூலம் இந்த கொலஸ்ரோல் படிவம் வளர்வதை தடுப்பதுடன் அதிலே வெடிப்பு ஏற்பட்டு மாரடைப்பு ஏற்படும் வீதத்தையும் பெருமளவில் குறைத்துக் கொள்ள முடியும்.

அத்துடன் புகைத்தலை நிறுத்திக்கொள்வது. குடிவகைகளை பாவிப்பதை தவிர்த்துக்கொள்வது மற்றும் atorvastatin அல்லது rosuvastatin போன்ற மாத்திரைகளை பாவித்துக் கொள்வதால் இவையும் இந்த கொலஸ்ரோல் படி வத்தில் வெடிப்பு ஏற்படுத்தி மாரடைப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தை வேகமாக குறைத்துக் கொள்வதற்கு உறுதுணையாக அமையும்.

நாம் எமது உடல் ஆரோக்கியத்தை பேணிக் கொள்வதுடன் சுகாதார நடைமுறைகளை சரியாகக் கடைப்பிடித்து வந்தால் இந்த கொவிட்-19 இனால் ஏற்பட்டு வருகின்ற இந்த சவால்களை இலகுவில் வெற்றிகொள்ள முடியும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்